# விடுதலைப்புலிகள்

குரல் – 117 | வைகாசி – 2004 | அன்பளிப்பு – 12/=



03 புயலின் மையத்தில் புயல்...
05 ஒளியேற்றும் காலம்...
06 சிங்கள அரசியலின்...
08 சிறுவர்கள் நலனும்...
13 சந்திரிக்கா அம்மையாரின்...


# போரை நோக்கிய அரசின் நகர்வுகள்

**தமிழ்மக்கள் அஞ்சியதுபோலவே, சந்திரிகா அரசு, போரைநோக்கி வேகமாக நகர்ந்தபடியுள்ளது. மூன்றுவருட சமாதானச் சூழல் சிதையத் தொடங்கிவிட் டது. சிங்களத்தில் போர்க் கூச்சல்கள் உரத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளன. போருக்கான முற்தயாரிப்புக்களில் சிங்கள அரசு இறங்கிவிட்டது. எல்லைமீறும் அளவுக்கு புலிகளின் பொறுமையையும் சிங்கள அரசு சோதிக்கத்தொடங்கியுள்ளது. சில அன்னிய புலனாய்வுச் சக்திகளின் அதிகரித்த தலையீடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ள சிறிலங்கா அரசு; மீண்டும் இரத்தக்களரிமிக்க இருண்ட போர்க் காலத்திற்கு நாட்டை இட்டுச்செல்கின்றது.**

ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்ததிலிருந்து சமாதான முயற்சிகளில் பாரிய பின்னடைவுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன. சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டுமுன்னணி போருக்கான அரசியலை தீவிரமாக முன்னெடுத்தபடியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசுடன் முன்னர்செய்த சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடர சம்மதம் தெரிவித்த சந்திரிகா அம்மையார், வழமைபோலவே, குத்துக் கரணம் அடித்துவிட்டார். சமாதானப் பேச்சை மீளத்தொடங்குவது பற்றி ஆக்கபூர்வமான கருத்தெதையும் அம்மையார் முன்வைக்கவில்லை. இடைக் கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்று சமாதானத்தை நடைமுறைச் சாத்தியமாக்கவும் அம்மையார் தயாராக இல்லை.

கொழும்பில் இப்போது சமாதானத்திற்கு எதிரான அரசியலையே சிங்கள அரசு நடாத்திவருகின்றது.

புலிகள் சமர்ப்பித்த இடைக் கால தன்னாட்சி அதிகாரசபைக்கு எதிரான நச்சுப் பிரச்சாரத்தை சிங்களப் பேரினவாத சக்திகள் வேகப் படுத்தியுள்ளன.

ஜே.வி.பி இதில் முன்னணி வகிக்கின்றது. சிங்கள ஊடகங்களும் தமது பங்கிற்கு இனவாதப்பணி செய்கின்றன.

கிராமங்கள் தோறும் ஜே.வி.பி இந்த நச்சுப்பிரச்சாரத்தை தீவிரமாகச் செய்துவருகின்றது. சமாதான முயற்சிகள் தொடர்பான புலிகளின் நிலைப்பாடுகள் எதையும் ஏற்க மறுத்துள்ள ஜே.வி.பி இப்போதே போர்ப் பிரச்சாரங்களை ஆரம்பித்துவிட்டது. சந்திரிகா அம்மையாரும் தமது கட்சியின் நிலைப்பாட்டை நிராகரிக்கவில்லை என்று ஜே.வி.பி கூறிவருகின்றது.

போருக்கான இராணுவத் தயார்படுத்தல்களையும் சந்திரிகா அரசு பரபரப்பில்லாமல் செய்துவருகின்றது. கப்பல்கள் - விமானங்களை புதிதாகக் கொள்வனவுசெய்து தனது கடல் - வான் பலத்தை அதிகரித்துள்ளது. ஆட்சேர்ப்பில் சிங்கள இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. யாழ்ப்பாணப் போர் அரங்கை சென்று பார்த்துள்ள சிங்களத்தின் துணைப் பாதுகாப்பமைச்சர் மறைமுக போர்த் தயாரிப்பை நெறிப்படுத்தியுள்ளார்.

சிங்களத்தின் போர்த் தயாரிப்பை சில அன்னிய புலனாய்வுச் சக்திகளும் உற்சாகப்படுத்தி - ஊக்குவிக்கின்றன. இந்த புலனாய்வுச் சதி அரசியலின் நோக்கங்களை - அதன் பின்விளைவுகளை சற்றும் ஆராயாமல் சிங்கள அரசும் அதற்குப் பலியாகி தன் அழிவிற்கு தானே துணை

*(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)*




## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# ஆபத்தான ஆலோசனை

புலிகளின்குரல்

சிங்களப் படையைப் பொறுத்த வகையில் அவர்கள் போர்புரிந்து களைத் துப்போயுள்ளனர். ஜெயசிக்குறு தோல்வி - ஆனையிறவு இழப்பு - தீச்சுவாலை தோல்வி........ போன்ற பல தொடர் தோல்வி களால் சிங்கள அரசின் இராணுவ மமதை யும் ஆட்டம் கண்டுள்ளது.

இந்த இராணுவத் தோல்விகளின் நேரடி விளைவாகவே தற்போதைய சமா தானச்சூழல் பிறந்ததை எவரும் மறுக்க முடியாது.

தமிழரின் இனப் பிரச்சினைக்கு அமைதி வழிமூலம் அரசியல்தீர்வு தேட வேண்டும் என்ற எண்ணம் சில சிங்கள அரசியல் கட்சிகளிடமும் - சிங்களப் புத்தி ஜீவிகளிடமும் தோன்றியதற்கு மேற்குறித்த இராணுவ அம்சமே பிரதான காரணியாக உள்ளதையும் யாராலும் மறுக்க இயலாது.

அத்துடன் மோசமான பொருண்மி யச் சிதைவுக்கும் - பாரிய மனித அவலத் திற்கும் இலங்கைத்தீவை இட்டுச்சென்றுள்ள இந்த இனப்போரை முடிவுக்குக் கொண்டு வந்து, ஒரு அரசியல்தீர்வு காணவேண்டும் என்ற சிந்தனைப் போக்கும், சிங்கள மக்க ளிடம் பரவலாக ஏற்பட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில் -

சிங்கள இராணுவம் பலம் பெறுவது தான் சமாதானப் பேச்சுக்களுக்கு வலுச் சேர்க்கும் என்றவாறான வல்லரசுகளின் போதனை தமிழ்மக்களை அதிர்ச்சிக்குள்ளா க்கியுள்ளது.

சிங்களத்தின் தீவிர இனவெறிச் சக்திகளிடமிருந்து எழும் அறிவுரைபோல அவை உள்ளன.

வல்லரசுகளின் வாயில் இருந்து வரும் இத்தகைய இராணுவவாதக் கருத் துக்கள், சிங்கள அரசை உசுப்பேற்றிவிடும் உற்சாகக் கருத்துக்களாக உள்ளன.

படைபலத்தை பெருக்கி - போரைத் தொடங்குமாறு தனக்கு வல்லரசுகள் மறை முகமாக ஆலோசனை கூறுகின்றன என்று சிங்கள அரசு எடுத்துக்கொள்ளும் அபாயம் அதில் உள்ளது.

சிங்களத்தின் படையவலு சமாதான த்திற்கு அவசியம் என்ற கருத்து உண்மைக் குப் புறம்பானதாகும். இலங்கையின் இனப் பிரச்சினை வரலாற்றை பின்நோக்கிப் பார்த் தால் இந்த உண்மை புலப்படும்.

சிங்கள அரசு தகுந்த இராணுவ பலத்துடன் இருக்கும்போதெல்லாம் அது இராணுவ மமதையுடன் போரையே நாடியுள் ளது.

சமாதானச் சூழலை ஏற்படுத்துவதற் காக 2000ஆம் ஆண்டில் புலிகள் இயக்கம் ஒரு போர் ஓய்வைக் கோரி - அதற்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டபோதும், சிங் கள அரசு அதைக் காட்டமாக நிராகரித்து விட்டது.

இதற்குக் காரணம் தான் பலமான நிலையில் உள்ளதாக சிங்கள அரசு கரு தியதேயாகும். அதை நிரூபித்துக்காட்ட சிங் கள அரசு மெற்கொண்ட செயலே 'தீச் சுவாலை' படை நடவடிக்கையாகும்.

அதில் தோல்வியடைந்த பின்னரே சமாதானத்திற்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு எழுந்தது.

இந்தவகையில், சிங்கள அரசின் சமாதானச் செயற்பாடுகள் அதனுடைய இரா ணுவ பலவீனத்தின் நல்ல விளைவாகவே முகிழ்ந்தன என்பதே உண்மையாகும்.

இதேவேளை -

படைபலத்துடன் இருந்துகொண்டு புலிகள் இயக்கம் வலியுறுத்துவதெல்லாம் தமிழரின் அரசியல் அபிலாசைகளை சிங் கள அரசு நிறைவேற்றவேண்டும் என்பது தான்.

சிங்களவரின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக புலிகள் இயக்கம் என்றுமே இருந்ததில்லை. சிங்களவரின் நிலங்களை அபகரித்து - அவர்கள்மீது ஆதிக்கம் செலு த்த வேண்டும் என்ற சித்தாந்தமும் புலிகள் இயக்கத்திடம் இல்லை.

புலிகளின் படைபலம் தமிழரைப் பாதுகாப்பதற்கே உள்ளது. தமிழர் தாயக மான வடக்கு - கிழக்கில் மக்கள் சுதந்திர மாகவும் - நிம்மதியாகவும் - கௌரவமாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துவதே புலிகளின் அரசியல் இலட்சியமாகும்.

இந்த சமாதான காலத்தில் சிங்கள அரசின் படைபலம் அதிகரித்துச்சென்றால் தற்போதைய போர்நிறுத்த உடன்பாட்டின் இராணுவ சமநிலையும் பாதிக்கப்படலாம். எனவே, அதற்கு இணையாக புலிகள் இயக் கத்தின் படைபலமும் அதிகரிக்கப்பட வேண் டிய நிர்ப்பந்தம் எழ வாய்ப்புண்டு.

இது இலங்கைத் தீவினுள் ஒரு ஆயு தப் போட்டியை அநாவசியமாகத் தூண்டி விடுவதிலேயே போய்முடியும்.

தீவிர இனவாத சக்திகளின் பிடியில் சிக்கிக்கொண்டுள்ள சந்திரிகா அம்மையாரை அதிலிருந்து விடுவித்து சமாதானச் சூழலை பலப்படுத்த முயலவேண்டியதே வல்லரசு களின் தற்போதைய கடமையாகும்.

இந்த தார்மீகக் கடமையைச் செய்வ தற்குப் பதிலாக இராணுவவாத கருத்திய லுடன் உள்ள சிங்களத்தின் தீவிர அரசியல் சக்திகளுக்கு ஊக்கமளிக்கும் விதமான கருத்துக்களை பலம்பொருந்திய நாடுகள் தெரிவிக்காமல் இருப்பது இலங்கைத்தீவின் சமாதான அரசியலுக்கு பலம்சேர்ப்பதாக அமையும். அத்துடன் அழிவுகரமான போரும் தவிர்க்கப்படும். ●

---

*(01ஆம் பக்கத் தொடர்ச்சி )*

போகும் நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றது. சிங்கள அரசுக்கு உதவு வதாகப் பாசாங்கு செய்தபடி இலங் கைத்தீவை பலிக்கடாவாக்கி அவை தமது நலன்களை - தமது தேவை களை அடையத் துடிக்கின்றன. இந்த உண்மைகளையும் - அதன் நாசகார விளைவுகளையும் சிங்கள ஆட்சியா ளர்கள் உணராதபடி அவர்களிட முள்ள பேரினவாத உணர்வு மறைக் கின்றது.

சமாதானத்திற்காக நேர்மை யுடன் செயற்படும் புலிகளை சிங்கள அரசு பலவகைகளில் நேரடியாகவும் சீண்டிப் பார்க்கின்றது. புலி உறுப் பினர்களை, இந்தப் போர் ஓய்வு வேளையில் படுகொலை செய்யும் கீழ்த்தரமான வேலைகளைச் செய் கின்றது. நிராயுதபாணிகளான புலி கள் படையினரின் கட்டுப்பாட்டில், அவர்களின் அனுமதியுடன், அரசி யல்பணி செய்யும்போது அவர்களை படுகொலை செய்கின்றது. மட்டக் களப்பில் துரோகி கருணாவைப் பயன்படுத்தி கொலைகளையும் - குழப்பங்களையும் உண்டுபண்ணு கின்றது.

சந்திரிகா அரசின் சமாதான விரோத அரசியலை நோர்வேத் தரப் பிற்கும் - கண்காணிப்புக் குழுவிற் கும் தெட்டத்தெளிவாக, புலிகள் இயக்கம் முறையிட்டுள்ளது.

கருணா விவகாரத்தை சதி நோக்கோடு கையாளும் சந்திரிகா அரசின் நோக்கத்தையும் நோர்வேத் தரப்பிற்கு புலிகள் இயக்கம் அறிவித் துள்ளது.

சமபங்காளிகளாக - சமாதா னப் பயணம் செய்த புலிகள் இயக் கத்திற்கெதிராக சிங்கள அரசானது, அநாகரிகமான முறையில் துரோகச் சதி செய்வதையும் நோர்வேத்தரப்பு நன்கறியும்.

இத்தகைய சதி அரசியல் மூலம் புலிகள் இயக்கத்தை பலவீ னப்படுத்தலாம் என்று சிங்கள அரசு நினைத்தால் அது பல வரலாற்றுப் பாடங்களை மறந்துவிட்டது என்பது தான் அர்த்தமாகும்.

துரோகங்களும் - சதிகளும் புலிகள் இயக்கத்தை பலவீனப் படுத்துவதற்குப் பதிலாக பலப்படுத் தியுள்ள பல வரலாற்றுச் சம்பவங் களை எமது போராட்ட வாழ்க்கை யில் காணலாம்.


போர்ப்பாதையில் திமிருடன் - அதர்ம நடவடிக்கைகள் மூலம் பயணிக்க முனையும் சந்திரிகா அம்மையாரின் அரசை, சர்வதேச சமூகம் வேடிக்கைபார்க்க விரும்பி னால் மூளப்போகும் போருக்கும் அது பொறுப்பேற்கவேண்டிவரும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை சிங்கள அரசு துச்சமென மதித்து - மனம்போன போக்கில் மீறிச் செயற் பட்டால், போர்நிறுத்த ஒப்பந்தம் வெற் றுக் காகிதமாகிவிடும். அதன்பின்னர் அந்த வெறும் கடதாசியை புலிகள் இயக்கம் புனிதமாக மதிக்கமாட்டாது. ●

# அரசியல் வணிகத்தின் காட்சியறைக் கோலங்கள்

> **விடுதலையை அவாவி நிற்போர்
> ஒருபோதும்அவநம்பிக்கையோ,
> சலிப்போ கொள்வதில்லை.
> ஒரு நெடும் பயணத்தில் கடக்கும்
> பல்வேறு கோலங்களாக
> பல் கட்சிகள் தோன்றி மறைகின்றன.
> "ஒரு இருண்ட தினத்தினை
> மறுநாள்வரை வாழ்ந்து முடித்துவிட்டால்
> அத்தினம் தானாகவே கழிந்துவிடும்"
> இதுவே
> இன்றைய எம் மக்கள் மனநிலை.**





என்னதான், எப்படித்தான் எழுதுவது? தத்தமது அரசியல் இருப்பிற்காக சாம, பேத, தான, தண்ட உத்திகளை எவ்வளவு கீழ்த்தரமாகப் பயன்படுத்த முடியுமோ அந்தளவிற்கு பயன்படுத்த ஒரு நாட்டின் அரசியல் தலைமை முன்வரும்போது எவர் என்னதான் எழுத முடியும்? சிங்கள அரசியலைப் பற்றியெண்ணும் பொழுது சுடுகாட்டில் எரியும் பிணங்கள் மத்தியில் உலவும் பேய்களை பார்த்ததுபோல மருட்சி தோன்றுகின்றது. சண்டிராணி, கல்லுளி மங்கன், வேதாளங்கள் போன்ற பல உருவகங்கள் மனதில் தோன்றுகின்றன. கருணா விவகாரத்தை இவர்கள் கையாண்ட விதமும், எவ்வாறு கையாளப்பட வேண்டுமென ஏனையவர்கள் விரும்பிய விதமுமே இதற்கு சான்று.

*"சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற்
சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி - கிளியே
செம்மை மறந்தாரடி"*

என பாரதி பழித்தறிவுறுத்திப் பாடிய நடிப்புச் சுதேசிகள் இவர்கள்தான்.

இத்தகைய 'செம்மை' மறந்தவர்களோடு தமிழ்மக்கள் மல்லுக்கட்டி, மாரடித்த காலம்போய் இப்போது நோர்வே தரப்பு அல்லாடுவது கண்டு எம்மக்கள் திகைத்து நிற்கின்றார்கள். முருங்கை மரத்திலிருந்த வேதாளத்தினை தோளிலேற்றிய கதைதானிது. வேதாளத்தின் வினாக்களுக்கு விடைசொல்லி தலை வெடிக்காமல் காத்துக்கொண்டான் விக்கிரமாதித்தன். நோர்வே விக்கிரமாதித்தர்களால் தம் தலையை காப்பற்ற முடியுமா? காலம் சொல்ல வேண்டிய விடை. பொறுமையுடன் எப்போதும் போல் எம் மக்கள் காத்து நிற்கின்றார்கள்.

அமெரிக்க அரசியல் முறைமையை அம்பலப்படுத்தி வரும் உலக மனச்சான்றின் குரலாகக் கருதப்படும் நோம் சொம்ஸ்கி சொல்கிறார். **"அமெரிக்காவில் நடப்பதற்குப் பெயர் தேர்தலல்ல. அதற்குப் பெயர் வணிகம். இங்கு வெவ்வேறு அரசியல் கட்சிகள் என்றில்லை. இருப்பவை இரண்டும் ஒரு கட்சியின் பிரிவுகளே"** என்றார். சருவதேசமும் மிக விரைவில் சிறிலங்காவின் அரசியல் அகராதியை அச்சொட்டாகப் புரிந்து கொள்ளும்;இங்கு நடப்பவை சனநாயக தேர்தல்களுமல்ல, இங்கு அமைபவை **மக்கள் நலன் கருதும் அரசாங்கமுமல்ல, நடப்பவை இனச்சிக்கலுக்கு தீர்வுகாணும் பேச்சுவார்த்தைகளுமல்ல. இவையாவும் குடும்ப அரசியல் வணிகத்தின் விற்பனை நிலையங்களும் காட்சியறைகளுமே** என்பதையும் தாம் இதிலே **பகடைகளாக** பயன்படுகின்றோம் என்பதையும் வெகு அவமானகரமான முறையில் உலகம் அறியும் என்று நம்பியே எம்மக்கள் காத்திருக்கின்றார்கள்.

விடுதலையை அவாவி நிற்போர் ஒருபோதும் அவநம்பிக்கையோ, சலிப்போ கொள்வதில்லை. ஒரு நெடும் பயணத்தில் கடக்கும் பல்வேறு கோலங்களாக பல்காட்சிகள் தோன்றி மறைகின்றன. **"ஒரு இருண்ட தினத்தினை மறுநாள்வரை வாழ்ந்து முடித்துவிட்டால் அத்தினம் தானாகவே கழிந்துவிடும்" இதுவே இன்றைய எம்மக்கள் மனநிலை.** எனவேதான் ஒவ்வொரு பேச்சுவார்த்தைகளின் முடிவின்பொழுதும் எழுப்பும் என்னதான் முடிவு என்கிற கேள்வியை இன்றும் எழுப்புகின்றார்கள். ஆனால் முடிவு எதுவாகும் என்பதை இம்முறை உணர்பவர்களாக உள்ளார்கள். இதனை மிகத் தெளிவாக பிறருக்குரைப்பதற்

க.வே.பாலகுமாரன்

கும் அவர்கள் ஆயத்தமாகவுள்ளார்கள். இதுவரை மௌனித்திருந்தவர் மனக்குரலின் இறுதி வெளிப்பாடிது. இதனை இங்கே பிரதிபலிப்பதில் நாம் பெருமை கொள்கின்றோம். எமது வரலாற்றினை பெருமையுடன் திரும்பிப் பார்க்கின்றோம். வரலாற்றின் வலியமுடிவு நெருங்குவதை உணர்கின்றோம். எனவே இறுதியாக அறுதியாக கூறுகின்றோம். **உலகமே கேள் என்கின்றோம். நீதியுரைக்கின்றோம்.**

இப்போது மீண்டும் முதலிருந்து தொடர்கின்றோம். இவ்வாறுதான் எமது நம்பிக்கைப்பாவம் சுமந்த வரலாறு ஆரம்பிக்கின்றது.

இத்தகைய நம்பிக்கைபாவ ஏமாற்றுகளுக்கு இப்போது வைரவிழா கொண்டாட முடியும். 1918 டிசம்பர், 07ஆம் திகதிய கடிதமொன்றோடு இவ் வரலாறு ஆரம்பிக்கின்றது. சிங்களத் தலைமையின் சார்பில் ஜேம்ஸ் பீரிசும் ஈ.ஜே.சமவிக்கிரமவும் அருணாசலத்திற்கு எழுதிய கடிதத்தில் **"மேல்மாகாணத்தில் ஒரு ஆசனத்தினை தமிழருக்கென ஒதுக்குவதற்கான ஒரு ஏற்பாட்டினை நாம் முனைப்புடன் ஆதரிப்போம்"** என்று கூறப்பட்டது. இதனை நம்பி நேர்மையாகச் செயற்பட்ட அருணாசலம் இந்திய காங்கிசைப்போல இலங்கைக்கும் முழுமையான அரசியல் இயக்கத்தை உருவாக்க உழைத்தார் 1919ஆம் ஆண்டு நவம்வர் 11ஆம் திகதி இலங்கை தேசிய காங்கிரசை உருவாக்கினர். அப்போது அவர் கூறியதை இங்கு பதிவு செய்கின்றோம். **"நாமெல்லாரும் சமமானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு இந்தக் காங்கிரசின் வழி உழைப்போமாக".** பின்னர் 1921ஆம் ஆண்டு இவ்வாக்குறுதி கைவிடப்பட்டபோது **"... இனி மேலும் இந்த சிங்களத் தலைவர்களை நம்புவதற்கு தமிழர்கள் மறுத்து தமது நலன்களை பாதுகாப்பதற்காக சுதந்திரமான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்ததில் ஏதாவது ஆச்சரியமுண்டா? எனது சொந்தக்கடமை தெளிவாகவுள்ளது."** இக் கூற்றினையே இன்று எம்மக்கள் மீண்டும் எதிரொலிக்கின்றார்கள்.

அன்று அருணாசலம் அவர்கள் தமது கடமையைச்செய்ய 1921வது ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தமிழர் மகாஜன சபையை உருவாக்கினர். 1923வது ஆண்டில் இலங்கைத் தமிழ் லீக்கினை நிறுவினர். அப்போதுதான் அவர் **"தமிழ் அகம்"** எனும் தாயகத்திற்கான முதல் நாமத்தை சூட்டினர். அப்போது அவர் கூறிய கூற்றொன்றினையும் நினைவில் கொள்கின்றோம். **"காலங்காலமாக தமிழர்களை தமிழர்களாக்கிய தமிழ் இலட்சியர்களை வாழவைத்து வளர்க்கவேண்டுமென்பதும், இவ்விலட்சியர்களை 'தமிழ் அகம்' எனும் தமிழ்த் தேசத்தின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்காக ......"** "திரு.பொ.அருணாசலத்தின் தெளிவுற்ற தமிழ் அகம் (1921) என்பதிலிருந்து அகில இலங்கை காங்கிரசினதும் ஜி.ஜி. பொன்னம்பலத்தினதும் ஐம்பதிற்கு ஐம்பது (1944), செல்வநாயகத்தினதும் சமஷ்டிக் கட்சியினதும் 'தமிழ் அரசு'(1949), தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்ஈழம் (1976), போராளி இயக்கங்கள் வரையான தமிழ்த் தேசிய காலக்கட்டம்" என **வரலாற்றாளன் கலாநிதி முருகன் குணசிங்கம் பெறுமதி மிக்க அவரது நூலான "இலங்கை தமிழ்த் தேசியவாதம் - அதன் ஆரம்ப தோற்றம் பற்றியதோர் ஆய்வில்"** தொகுத்து குறிப்பிடுகின்றார். இதனோடு விடுதலைப் புலிகள் இன்னொன்றையும் இணைத்துள்ளார்கள். இயங்கியல் அடிப்படையிலான தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி நிலையின் ஒரு வெளிப்பாடிது. சருவதேச அரசியல் இராசதந்திர பொருண்மிய சூழலுக்கேற்ப இடைக்கால தன்னாட்சி அதிகார அலகிற்கான வரைவு இப்போது இறுதியாக முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே 1920களில் தொடங்கிய கதை **முடிவினை நெருங்குகின்றது.**

இந்நிலையிலேதான் இப்போது நாம் இறுதியாக வள்ளுவன் வழியில் இடித்துரைக்க பாரதி வழியில் பழித்தறிவுறுத்த முன்வருகின்றோம். இங்கேயும் வரலாற்றின் வழி நின்றே இதனைச் சொல்கின்றோம். அகிம்சை வழியில் தொடங்கி ஆயுத வன்முறையை வரித்து பின் இறுதியாக நீண்ட பேச்சுக்களின் பின் இலக்கை அடைந்தது தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம். மண்டேலாவின் நீண்ட சிறைவாசம், பல்வேறு அரசியல், பொருண்மிய நலன்களுக்காக உலகம் இட்ட அழுத்தம், இவை காரணங்களாக பல்வேறு சதிகள், நாசங்களுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகள் அங்கு நடந்தன. இவை யாவற்றிற்கும் சாட்சியமாகும். மண்டேலா இக்காலகட்டத்தில் கூறிய கூற்றுக்களை எம் கூற்றுக்களாக வரித்துக்கொள்கின்றோம். 26 ஆண்டுகள் சிறைவாசத்தின்போது **எத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்ட பேச்சுக்களை மண்டேலா நிராகரித்ததும் வன்முறையை கைவிடமுடியாதெனக் கூறியதும் சுதந்திரமான மனிதர்களே பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியும்,** எனக் கூறியதையும் இங்கே நினைவூட்டுகின்றோம். 1991ஆம் ஆண்டளவில் ஆபிரிக்க தேசியக் காங்கிரசும் தென்னாபிரிக்க நிறவெறி அரசும் பேச்சுக்களில் ஈடுபட்டபோதும் தொடக்கத்திலிருந்தே பேச்சுக்களைக் குழப்பத்தக்கதாக சூழ்ச்சித் திட்டமொன்றினை தென்னாபிரிக்க அரசு வகுத்துச் செயற்பட்டது. இதற்கு கறுப்பினத் தலைவர்களையே, (ANCயினதும் மண்டேலாவினதும் செல்வாக்கு வளர்வதைக்கண்டு மனம் பொறுக்காது) பயன்படுத்தினர். சூலு இனக் குழுமத்தினதும் 'இன்காதா' அமைப்பின் தலைவருமான புத்தலேசியை ஆபிரிக்க தேசியக் காங்கிரசோடு மறைமுகப் போரொன்றையே நிறவெறி அரசு நடத்துவித்தது. போராளிகளை, மக்களை கொல்லுவித்தது.

1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் கொடேசா (Codesa) என்றழைக்கப்பட்ட சனநாயக தென்னாபிரிக்காவுக்கான மாநாடு என்கிற பெயரில் பேச்சுக்கள் தொடங்கின. இப்பேச்சின்போது நடைபெற்ற ஒரு சம்பவத்தை இன்றைய எமது நிலையோடு தொடர்புபடுத்துகின்றோம். இம் மாநாட்டின் இறுதியுரையை தான் நிகழ்த்த விரும்புவதாக தென்னாபிரிக்க அதிபர் டி கிளார்க் வேண்டியபோது பெருந்தன்மையோடு மண்டேலா அதற்குச் சம்மதித்தார். ஆனால் கிளார்க்கோ இவ் வாய்ப்பினைப் பயன்படுத்தி ANC ஆயுதங்களை கையளிக்க முன்வராமை, இராணுவப் பிரிவினை வைத்திருக்கின்றமை போன்றவை பற்றி பலத்த கண்டனத்தை மேற்கொண்டார். இதனைப் பொறுக்காத மண்டேலா மரபிற்கு மாறாக மேடைக்குச் சென்றார். அவரால் கோபத்தை மறைக்கமுடியவில்லை. "எனது சொற்களில் சினம் வெளிப்பட்டது" என அவரே எழுதுகின்றார். அக்கட்டத்தில் பின்வருமாறு பேசியதாக மண்டேலாவே குறிப்பிடுகின்றார். **"... திரு.டி கிளார்க்கின் நடத்தை பற்றி நான் பெரிதும் கவலைப்படுகின்றேன்.... இப்படியான நோக்கங்களோடு பேச்சுக்களுக்கு முன்வந்தால், இத்தகைய நடத்தைகளை அரசியல் விளையாட்டுக்களை நிகழ்த்தினால் இவரோடு என்ன தொடர்புகளைக் கொள்ளமுடியும்? இரட்டை வேடம், இரட்டை நிகழ்ச்சிநிரல், இன்காதா தலைமைக்கு பல மிலியன் கையூட்டு, அரசாங்க தலைவராயிருக்க என்ன தகுதி இவருக்குள்ளது?"** மண்டேலாவின் கோபக் குரலிது. இதுவே எம் குரலும்கூட.

இவ்வாறு கடுமையாக பேசிய மண்டேலா இறுதியாக இணக்கமான தொனியில் பின்வருமாறு கூறியதாக 'விடுதலைக்கான நெடும் பயணத்தில்' எழுதுகின்றார். **"நான் அவரைக் கேட்டுக்கொண்டேன். உமது சீட்டுக்களை மேசைமீது நமிர்த்திப் போடவும். இணைந்து வெளிப்படையாகச் செயற்படுவோம். இரகசிய நிகழ்ச்சி நிரல்கள் எதுவும் வேண்டாம்... இத்தனை தவறுகள் உங்களால் விடப்பட்ட பின்னரும் இணை**

*(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)*

# காலம் அணைக்கக் காத்திருக்கும் கொங்கோ மக்கள்

ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியிலே நிறை சூலுற்ற பெண்ணின் அடிவயிறு போன்ற தோற்றத்தில், பரந்திருக்கும் சமவெளியில் கொங்கோ (CONGO) நதி பிரவகித்துப் பாய்ந்துகொண்டிருக்கிறது. அதன் கரைகளை நோக்கி, 14ஆம் நூற்றாண்டின் அமைதியான அந்தப் பகல்பொழுதிலே மூன்று ஆபிரிக்க இனக்குழுமங்கள் அலுத்துச் சலித்து வருகின்றன. பாக்கொங்கோ (BAKONGO) பாட்ரெக்கே (BATEKE) ஸாங்கா (SANGA) ஆகிய இனமக்கள பெருகிப் பாய்ந்த கொங்கோ ஆற்றைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறார்கள். குழுத்தலைவர்கள் கூடி ஆங்காங்கே தங்கிவிடத் தீர்மானிக்கிறார்கள். கொங்கோ இராச்சியம் அங்கே உருவாக்கப்படுகிறது. 15ஆம் நூற்றாண்டு அளவிலே வடக்கே கொங்கோ நதியையும் தெற்கே லோஜெ நதியையும் மேற்கே அத்திலாந்திக் சமுத்திரத்தையும் கிழக்கே குவாங்கோ நதியையும் எல்லைகளாகக் கொண்டு பரந்து விரிந்திருந்தது. அதற்கு கிழக்கேயும் தெற்கேயும் அமைந்திருந்த பல சிற்றரசுகள் கொங்கோ இராச்சியத்திற்கு திறைசெலுத்தி வந்தன. மனிக்கொங்கோ (MANIKONGO) அல்லது அரசனால் ஆளப்பட்ட கொங்கோ ஆறு மாகாணங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆளுநர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளுக்கு நேர்ந்த தலைவிதி கொங்கோவையும் விட்டுவைக்கவில்லை. 1482ஆம் ஆண்டிலே, டியொகோ காஒ (DIOGO CAO) என்ற போர்த்துக்கல் பயண ஆய்வாளரின் உருவில் வந்து கொங்கோவில் அது தரையிறங்கியது. அப்போது கொங்கோவை ஆண்டுகொண்டிருந்த மனிக்கொங்கோவான நிஸிங்கா நுக்குவூ (NZINGA NKUWU) இற்கு வந்த போர்த்துக்கல்காரனையும் போர்த்துக்கல் பழக்க வழக்கங்களையும் பிடித்துப்போயிற்று. பிறகென்ன? 1491ஆம் ஆண்டிலே வழமைபோலவே போர்த்துக்கேய மறை



பட்றிஸ் லுமும்பா

பரப்புனர்கள், போர்வீரர்கள், கைவினைஞர்கள் கொங்கோ இராச்சியத்தின் தலைநகரான மம்பான்ஸா (MBANZA) வில் வந்திறங்கினார்கள். அன்புடன் வரவேற்கவும் பட்டார்கள். வந்த வேகத்திலேயே மறை பரப்புனர்கள் தங்கள் 'திறமை'யைக் காட்ட, நிஸிங்கா நுக்குவூ உள்ளிட்ட பலர் மதம் மாறினார்கள். நுக்குவூ வும், ஜோ ஏஓ 1 (JO AO 1) என்ற பெயரை சூட்டிக்கொண்டார். மறைபரப்புனர்களுடன் வந்த போர்வீரர்கள் உள்நாட்டு கலகங்களை ஒடுக்க மனிக்கொங்கோவுக்கு உதவினார்கள். அடுத்த மனிக்கிங்கோவான அபொண்ஸோ 1 (AFONSO 1) (1505-43வரை ஆட்சிசெய்தவர்) ஒரு கிறிஸ்தவமாகவே வளர்க்கப்பட்டார். தனது இராச்சியத்தை கிறிஸ்தவ மதத்தையும் ஐரோப்பிய வழிகளையும் கைக்கொள்ளச்செய்ய அவர் முயற்சிசெய்தார். ஆனால் அவருக்கோ அவருடைய பிரசைகளுக்கோ தமது நாட்டுக் கவிஞரான யூ ராம்ஸி, 19ஆம் நூற்றாண்டிலே,

*"உருக்கிய வெண்கலத்தை*
*குடித்துப்பெற்ற சுவையை*
*எனது மக்கள்*
*நினைவில் வைத்திருக்கிறார்கள்"*

என்று தங்கள் வழித்தோன்றல்களைப் பற்றி எழுதப்போகிறார் என்பது தெரிந்திருக்கவில்லை.

கொங்கோ வந்து சேர்ந்திருந்த போர்த்துக்கேயர்கள் தங்கள் சொந்த வருவாய்களைப் பேணுவதிலேயே ஆர்வமாக இருந்தார்கள். இதற்கான பிரதான உபாயமாக ஆபிரிக்கர்களைப் பிடித்து அவர்களை அடிமைகளாக விற்பது இருந்தது.

தன்னுடைய பிரசைகளின் முயற்சிகளை ஆக்கபூர்வமான திட்டங்களுள் திருப்பிவிட போர்த்துக்கல் அரசர் மனுவேல் 1 (MANUEL 1) எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. பேராசை வெறி பிடித்து போர்த்துக்கேயர்கள் தொடர்ந்து அலைந்ததானது கொங்கோ இராச்சியத்தை வலுவிழக்கச் செய்ததோடு, மாகாணங்கள் மீது சாஒ சல்வடோர் என பெயர் மாற்றப்பட்டிருந்த தலைநகரம் கொண்டிருந்த பிடியையும் தளரச்செய்துவிட்டது. அபொண்ஸோ 1 சாவடைந்தபின், கொங்கோ இராச்சியம் சீர்குலைந்ததை அடுத்து உள்நாட்டுப் போர்கள் வலுக்கலாயின.

இதைத் தொடர்ந்து போர்த்துக்கேயர்கள் தங்கள் ஆர்வங்களை தெற்கேயுள்ள நோடொங்கோ (NDONGO) வுக்கு நகர்த்தியதோடு 1956ஆம் ஆண்டில் கொங்கோவை முறியடிக்க நோடொங்கோவுக்கு உதவினார்கள். எனினும் 1569 ஆம் ஆண்டிலே, கிழக்கிலிருந்து லுண்டா (LUNDA) இனத்தவர்கள் மேற்கொண்ட படையெடுப்பை முறியடிக்க கொங்கோவுக்கு போர்த்துக்கேயர்கள் உதவினார்கள்.



கொங்கோவினுடைய சமூகக் கட்டமைப்பை, அடிமை வர்த்தகம் தொடர்ந்து சீர்குலைத்துக் கொண்டிருந்ததானது மனிக்கிங்கோவின் அதிகாரத்தையும் வலுவிழக்கச் செய்துகொண்டிருந்தது. 1641ஆம் ஆண்டில் ஆட்சிசெய்த மனிக்கொங்கோவான காஸியா II (GARCIA - II), டச்சுக்காரரோடு இணைந்து போர்த்துக்கேய அடிமை வர்த்தகர்களை கட்டுப்படுத்த முயன்றுகொண்டிருக்கையில் 1665ஆம் ஆண்டில் போர்த்துக்கேய இராணுவமொன்று கொங்கோ படைகளை கடுமையாக முறியடித்துவிட்டது. அப்போதிலிருந்து. பதவிக்குவந்த, கொங்கோவின் மனிக்கொங்கோக்கள், கிட்டத்தட்ட போர்த்துக்கல்லின் பண்ணையாட்கள் (VASSAL) போலவே வாழ நேர்ந்தது. கொங்கோ இராச்சியமும் பல சிறிய சிறிய நாடுகளாக சிதறிப்போனது. எனினும் இந்த நாடுகள் எல்லாமே ஏதோ ஒரு அளவிலாவது போர்த்துக்கல்லினால் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. 19ஆம் நூற்றாண்டிலே கொங்கோவின் நிலப்பரப்புகள் பெருமளவில் அங்கோலாவினுள் சென்றதோடு ஒரு பகுதி சுதந்திர கொங்கோ நாடாகியது. (மேலதிக விவரங்களுக்கு J.K.தோணரன் எழுதிய KINGDOM OF KONGO (1983), A.W.ஹில்ரன் எழுதிய KINGDOM OF KONGO (1985) ஆகிய நூல்களைப் பார்க்கவும்)

உலகப் பெருநதிகளுள் ஒன்றாக 6400கி.மீ தூரத்துக்குப் பாய்ந்து கொங்கோவை வளப்படுத்திய கொங்கோ நதித் தீரங்களில் 1874-1877வரை ஆய்வுகளை நடத்திய பெல்ஜிய இன ஆய்வாளரான ஹென்றி மோட்டன் ஸ்ரான்லி (HENRY MORTON STANLEY) அந்த நதியின் தீரங்களில் இருந்த வளங்கள் பற்றி பெல்ஜிய அரசர் லியோபோல்ட் II (LEOPOLD - II) இன் கவனத்துக்குக் கொண்டு வருகிறார். லியோபோல்ட் II உள்ளிட்ட முதலீட்டாளர்களின் தனிப்பட்ட சொத்தாக, 1880களில் சுயாதீன கொங்கோ, கொங்கோ நதியின் கரைகளில் தாபிக்கப்பட்டது. 450 உள்ளூர் சுதேசிகளின் குழுமங்களுடன் உடன்பாடுகளைச் செய்துகொண்டு அந்த நாடு விரிவாக்கம் பெற்றது. 1890களில், லியோபோல்ட் II தனது

**அருளாளன்**

படைய கட்டுப்பாட்டை உள்நாடுகளுக்கும் விரிவாக்கினார். லியோபோல்டின் ஆட்சி மிகவும் கொடூரமானதாக இருந்தது. அதைத்தொடர்ந்து உள்ளூர் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட ஒடுக்குமுறைகள், துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் பகிரங்கமானதை அடுத்து பெல்ஜிய அரசாங்கம் 1908ஆம் ஆண்டில் கொங்கோவை கையேற்றது. 1960வரை இந்த ஆட்சி நீடித்தது.

1950களில் பிரான்சும் இங்கிலாந்தும் தங்கள் குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் வழங்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த வேளையிலும் கொங்கோ என்பது பெல்ஜியம் என்ற தந்தையின் பாதுகாப்பு அவசியமான குழந்தையாகவே இருக்கிறது என்று பெல்ஜியம் பாவனை செய்துகொண்டிருந்தது.

1ஆம் உலகப்போருக்குப் பின், பெரிய பெருந்தோட்டங்கள் (பருத்தி, எண்ணைத் தாவரங்கள், கோப்பி, கொக்கோ, றப்பர்) மற்றும் உள்ளகப் பகுதிகளில் காணப்பட்ட தங்கம், வைரம், செம்பு, தகரம், கோபோல்ற், துத்தநாகம் முதலியவற்றை அகழும் சுரங்கத்தொழில் முதலியவற்றில், ஐரோப்பிய, அமெரிக்க தனியார் நிறுவனங்கள் பெருமளவு முதலீடுகளைச் செய்தன.

2ஆம் உலகப்போரின் போது அமெரிக்காவுக்கு யூரேனியம் வழங்கிய முக்கிய இடங்களில் ஒன்றாக கொங்கோவும் இருந்தது.

இந்தக் காலப்பகுதிகளில், பெல்ஜிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய தொழில் சட்டப்படி, கறுப்பினத் தொழிலாளர்கள் 4-7 வருடகால ஒப்பந்தங்களில், அடிமைப்படுத்தப்பட்டு சக்கைப் பிழியப்பட்டனர்.

றப்பர் உற்பத்தி கோட்டாவை எட்டவைப்பதற்கான உத்திகளாக சவுக்கால் அடித்தல், பணயக் கைதிகளைப் பிடித்தல் முதலியன மேற்கொள்ளப்பட்டன. சிறிய குற்றங்களுக்குக்கூட அங்கங்களை சிதைக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன. மக்கள் தொகை 20,000,000-30,000,000வரையில் இருந்து 8,000,000 ஆகக் குறைந்தது. பெருந்தோட்டங்களில் கொடூரங்கள் அத்துமீறின.

500கி.மீ நீளமான புகையிரதப் பாதை, வீதிகள், கட்டடங்கள் அமைப்பின்போது கட்டாய வேலை வாங்கல்கள் மற்றும் மிகையான துஷ்பிரயோகங்கள் காரணமாக 17000தொழிலாளர் இறந்ததைத் தொடர்ந்து கிளர்ச்சிகள் வலுத்தன. உண்மையைச் சொல்லப்போனால், குடியேற்றவாத ஆட்சிக்கான எதிர்ப்புணர்வுகள் ஆரம்பத்திலிருந்தே வெளிக்காட்டப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கிளர்ச்சிகள் 1923வரை முற்றாக ஒடுக்கப்படவில்லை.

1884-1885வரை பேர்ளினில் நிகழ்ந்த மகாநாட்டில் கொங்கோ தேசத்தை ஆள பெல்ஜிய மன்னர் லியோபோல்ட் II இற்கு உள்ள உரிமை அங்கீகரிக்கப்பட்டது. 1931-36களில் இருந்து புரட்சிகள் வலுக்க ஆரம்பித்தன. 1959ஆம் ஆண்டில் கொங்கோ தேசிய இயக்கத்தை உருவாக்கிய பட்றிஸ் லுமும்பா, பெல்ஜியத்தின் பிடியில் இருந்து தமது நாட்டினை மீட்கக் கடுமையாகப் போராடிவந்தார். பல காலமாக கொங்கோவுக்கு சுதந்திரம் வழங்க மறுத்துவந்த பெல்ஜியம் திடீரென்று 1960ஆம் ஆண்டில் கொங்கோவுக்கு சுதந்திரம் வழங்க முன்வந்தது.

1960 யூன், 30ஆம் திகதி பெல்ஜியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற கொங்கோவின் ஜனாதிபதியாக ஜோசப் கஸாவுபு (JOSEPH KASAVUBU), பிரதமராக பட்றிஸ் லுமும்பா (PATRICE LUMUMBA) பதவியேற்றார். லுமும்பா அரசமைத்து இரண்டு வாரங்களுள் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் கலகம் செய்ததில் கடாங்கா பிரிந்துகொண்டது. அரசின் அழைப்பின் பேரில் அமைதி பேணவந்த ஐநா அமைதிபேணும் படை ஐரோப்பியர் நலன்களையே பேணியதாகவும் கிளர்ச்சி நடத்தியவர்களுக்குச் சார்பாக நடந்துகொண்டதாகவும் அப்போது குற்றம்சாட்டப்பட்டது. ஐநா அமைதிப் படை 1960-1964வரை கொங்கோவில் சேவையாற்றியது.

லுமும்பாவின் அரசு பெல்ஜிய இராணுவம் கொங்கோவை விட்டு முழுமையாக வெளியேற வேண்டும் என்று உலகநாடுகளின் கூட்டத்தில் அறிவித்தார். தனது குடியேற்ற நாட்டை இழக்க விரும்பாத பெல்ஜியம் லுமும்பாவை ஒழித்துக் கட்டுவதற்கு அமெரிக்காவுடன் சேர்ந்து திட்டம் தீட்டியதாக பின்னர் கிடைத்த சான்றுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. லுமும்பாவின் அரசில் இராணுவத் தளபதியாக இருந்த கேணல் ஜோசப் மொபுட்டு (COL. JOSEPH MOBUTU) ஆட்சியைக் கைப்பற்றுகிறார். லுமும்பா கைதுசெய்யப்பட்டு, கட்டாங்கா கிளர்ச்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு கொல்லப்பட்டதாக தற்போது கூறப்படுகிறது. எனினும் ரஷ்ய சார்பு நிலைப்பாட்டைக் கொண்டிருந்த லுமும்பா, ரஷ்யா சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியதில் கொல்லப்பட்டதாக 1960களில் கூறப்பட்டது. அவரது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், அக்கொலையில் கேணல் மொபுட்டுவும் CIAயும் தொடர்புபட்டிருந்ததென்றும் காட்டும் சான்றுகள் பின்னர் வெளிவந்திருந்தன. பட்றிஸ் லுமும்பா நினைவாகவே ரஷ்யாவின் லுமும்பா சர்வகலாசாலை ஏற்படுத்தப்பட்டது.

மேற்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிறுவனங்கள், கொள்கைகள், கலாச்சாரங்கள் முதலியவை கொங்கோமீது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தின. எனினும் வெவ்வேறு நம்பிக்கைகள் விசுவாசங்கள், பதட்டங்கள் கொண்ட வெவ்வேறு மக்களால் மரபுகள் பேணப்பட்டன. ஆனால் மொபுட்டுவின் ஆட்சியில், ஒரு சிறிய, அதிகளவில் மையப்படுத்தப்பட்ட அரசியல் உயர்மட்டத்தினரால் இந்த மக்கள் ஒட்டுமொத்தமாக ஒடுக்கப்பட்டனர்.

1961ஆம் ஆண்டில் நாட்டின் ஆட்சியை மீண்டும் கஸவுபுவிடம் மொபுட்டு கையளித்தார். அதன்பின் எழுந்த அரசியல் கிளர்ச்சிகளையடுத்து 1965ஆம் ஆண்டில் இரண்டாவது புரட்சி ஒன்றை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிய மொபுட்டு தன்னைத்தானே 5 வருடங்களுக்கு ஜனாதிபதியாக நியமித்துக்கொண்டு 1966இல் நடக்கவிருந்த தேர்தல்களையும் இரத்துச்செய்துவிட்டார். 1966 ஒக்ரோபர், 26ஆம் திகதி பிரதமர் லியோனாட் முலாம்பாவை பதவி நீக்கிய மொபுட்டு, ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தி தானே ஜனாதிபதியுமானார். 1970 மே, 21ஆம் திகதி மக்கள் புரட்சிகர இயக்கம் (POPULAR MOVEMENT OF REVOLUTION - MPR) என்ற கட்சியை ஆரம்பித்தார். நாட்டுமக்கள் அனைவரும் அதில் உறுப்புரிமை பெறவேண்டும் என ஆணையிடப்பட்டது. நவம்பர் 01ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் தனி அபேட்சகராக போட்டியிட்ட மொபுட்டு ஜனாதிபதியாக தேர்வுசெய்யப்பட்டார். 1970கள் முழுவதும் அரசியல் அதிருப்தியாளர்கள் கொடூரமாக ஒடுக்கப்பட்டனர். 1973ஆம் ஆண்டில் ஆபிரிக்க மயமாக்கல் கொள்கையின் கீழ் நாட்டின் பெயரை ஸெயார் குடியரசு என்று மாற்றியதோடு தனது பெயரையும் மொபுட்டு ஸெஸே ஸேக்கோ என்று மாற்றிக்கொண்டார். ஸெயார் மக்களும் தங்கள் பெயர்களை ஆபிரிக்க மயப்படுத்தி, ஆபிரிக்கவகை ஆடைகளை அணியும்படி கேட்கப்பட்டனர். ஸெயார் மயமாக்கல் கொள்கையொன்றின் கீழ் வெளி




நாட்டவர்களின் உடைமைகளான 2000 நிறுவனங்களை அரசு கையகப்படுத்தியது. இது 1973இல் நிகழ்ந்தது. கையகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் பெரும்பாலானவை மொபுட்டுவுக்கும் அவருக்கு நெருக்கமானவர்களுக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்பட்டன. புதிய உரிமையாளர்களின் பட்டறிவின்மையால், அந்த நிறுவனங்களில் பலவும் நொடித்துப் போய்விட்டன. ஸெயாரின் பொருளுண்மியம்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# படித்த பாடத்தை மீண்டும் படிக்கும் முயற்சி

- எல்லாளன் -

வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு, தமிழினம் இராணுவ வலுவுடனும் உள்ளது, அரசியல் பலத்துடனும் உள்ளது.

தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவ ஆற்றலால் தமிழினம் இத்தகைய உயர்நிலையை அடைந்துள்ளது.

இத்தகைய பலத்துடன் தமிழினம் இருக்கும் வரை சிங்கள அரசு பேச்சுக்கள் மூலம் அரசியற் தீர்வு காணத் தயக்கம் காட்டும்.

ஏனெனில் இத்தகைய சூழலில் பேச்சுக்கள் நடந்தால் தமிழருக்கு உரிமைகள் வழங்கவேண்டிய கட்டாய நிலைக்கு சிங்களம் தள்ளப்படும்.

நீதியானவகையில் தமிழருக்கு உரிமை வழங்க சிங்களம் தயாராக இல்லை.

ஆகவே, பேச்சுவார்த்தையைத் தவிர்க்க சிங்களம் முயற்சிக்கின்றது.

அதேவேளை, தற்போதைய போர் ஓய்வைக் கைவிடவும் அது தயாராக இல்லை.

அதற்கு போர் ஓய்வு வேண்டும். பேச்சுவார்த்தை வேண்டாம்.

சந்திரிகா அரசின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு இதுதான்.

பேச்சுக்கள் ஏதுமற்ற இந்தப் போர் ஓய்வுக்காலத்தில் தமிழரின் பலங்களை முடிந்தவரை பலவீனப்படுத்த சிங்களம் ஆசைப்படுகின்றது.

தமிழரின் முக்கிய பலம் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலம்தான்.

அதைச் சந்திரிகா அரசால் ஒன்றுமே செய்ய முடியாது.

சிங்கள அரசு கண்டு அனுபவித்த பேருண்மை அது.

எனவே, புலிகளின் இராணுவ பலத்தில் நேரடியாகக் கைவைக்க சந்திரிகா அரசு இப்போது தயாரில்லை.

ஆனால், புலிகளின் அரசியற் பலத்தை சிதைக்க முடியுமா! என்று பரீட்சித்துப் பார்க்க சந்திரிகா அரசு தயாராகிவிட்டது.

தமிழரின் தாயகக் கோட்பாடும் - தேசியப் பற்றுறுதியும் மிகவும் பலமான நிலையில் உள்ளன.

நடந்துமுடிந்த சிங்களத்தின் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த அரசியற் பலங்களை தமிழ்மக்கள் தெளிவாக நிரூபித்துவிட்டனர்.

தமிழரின் ஒற்றுமையும் - தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சியும் சிங்களத்தை உறுத்தியபடி உள்ளன.

துரோகி கருணா எழுப்பிய பிரதேசவாதக் கூச்சலை, கருணா விரட்டியடிக்கப்பட்ட பின்னரும், சிங்களம் கைவிடுவதாக இல்லை.

அதைப் பயன்படுத்தி தமிழரின் ஒற்றுமைக்கு வேட்டுவைக்க சிங்களம் ஆசைப்படுகிறது.

வடக்கென்றும் கிழக்கென்றும் தமிழர் தாயகத்தை கூறுபோட்டுப் பார்க்க அது விரும்புகின்றது.

கிழக்கிற்கு கருணா, வடக்கிற்கு டக்ளஸ் என்று தானே நியமித்து வட - கிழக்கை பிரித்துவைக்க சிங்களம் கனவு காண்கின்றது.

தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகள் புலிகள் என்ற உண்மையை இந்தச் சதி அரசியல்மூலம் தகர்த்துவிடலாம் என்றும் சிங்களம் நினைக்கின்றது.

வட - கிழக்கு இரண்டு வேறு அரசியற் துருவங்களால் பிரிக்கப்பட்டால் தமிழர் தேசியம் அதற்குள் நசுங்கிச் செத்துவிடும் என்று சிங்களம் கணக்குப் போடுகின்றது.

தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டு, தமிழர் தேசியமும் சிதைக்கப்பட்டால் தமிழரின் அரசியற்பலம் காணாமல் போய்விடும் என்று அது கணித்துள்ளது.

தன்னாட்சி உரிமை என்ற தமிழரின் அரசியல் இலட்சியமும் செல்லாக் காசாகிவிடும் என்றும் நினைக்கின்றது.

**சமாதானத்திற்குக் கிடைத்த வரலாற்று வாய்ப்பை அது சரியாகப் பயன்படுத்தவேண்டும். குருட்டு நம்பிக்கைகளிலும், நயவஞ்சக நடவடிக்கைகளிலும் சிங்கள அரசு தொடர்ந்தும் ஈடுபட்டால் விளைவு விபரீதமாகவே இருக்கும்.**

தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாசைகள் நடை முறையில் அர்த்தமற்றுப் போனால் தமிழினத்துடன் பேச்சுவார்த்தையும் இல்லை - அரசியற் தீர்வும் இல்லை என்றதொரு புறநிலை உருவாகும் என்றும் சிங்களம் எதிர்பார்க்கின்றது.

இந்த அரசியற் சிதைவுக்குள் புலிகளின் இராணுவ பலமும் கரைந்து விடும் என்று அது கணக்குப் போடுகின்றது.

அதன்பின் சிங்களத்தின் மகாவம்ச ஆசை நிறைவேறி இலங்கைத் தீவு சிங்கள - பௌத்த பூமியாகி விடும் என்று சிங்களம் கனவு காண்கிறது.

சிங்களம் நினைப்பது நடக்குமா!

இப்படி எத்தனை நினைப்புகளை அது காலத்திற்குக் காலம் நினைத்து - ஏமாந்துள்ளது.

இதே சந்திரிகா அம்மையார் கண்ட இராணுவக் கனவுகள் எல்லாம் ஜயசிக் குறுவுடனேயே கரைந்து போய் விட்டதை உலகம் அறியும்.



**தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாசைகள் நடைமுறையில் அர்த்தமற்றுப் போனால் தமிழினத்துடன் பேச்சுவார்த்தையும் இல்லை - அரசியற் தீர்வும் இல்லை என்றதொரு புறநிலை உருவாகும் என்றும் சிங்களம் எதிர்பார்க்கின்றது.**

இப்போது சாணக்கியக் கனவுகளுடன் அம்மையார் வலம்வர விரும்புகின்றார்.

அம்மையாரின் சாணக்கியச் சதி அரசியலும் புலிகள் இயக்கத்தின் முன்னால் எடுபடாமல் போகும் 'துயரத்தைத்தான் அவர் எதிர்கொள்ளப் போகின்றார்.

தமிழரின் ஐக்கியத்தை உடைத்து - தமிழர் தேசியத்தைச் சிதைக்க எந்தவொரு அரசியல் சக்தியாலும் முடியாது.

தலைவர் பிரபாகரனின் தலைமையில் ஈழத் தமிழ்மக்கள் இன்று மாபெரும் அரசியல் விழிப்புணர்வுடன் உள்ளனர்.

தாயகத்தில் வதியும் தமிழர்களும் - புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வதியும் தமிழர்களும் தமிழ்த் தேசியத்தால் கட்டுண்டு கிடக்கின்றனர்.

புலிகள் இயக்கத்தின் பலம் அங்கெல்லாம் ஆழ வேரூன்றி உள்ளது.

இலங்கை அரசியலில் சிங்களவர் பக்கம் இப்போது பலவீனமாகவே உள்ளது. உறுதியற்ற அரசாங்கத்தையும் - விவேகமற்ற தலைவியையும் கொண்ட சிங்கள அரசு உண்மையில் தடுமாறியபடியே உள்ளது.

ஆனால், புலிகளின் தலைமையிலான தமிழினம் விழிப்பாகவும் - பலமாகவும் உள்ளது.

இந்த உண்மைகளை சிங்களதேசம் உணரவேண்டும்.

சமாதானத்திற்குக் கிடைத்த வரலாற்று வாய்ப்பை அது சரியாகப் பயன்படுத்தவேண்டும். குருட்டு நம்பிக்கைகளிலும், நயவஞ்சக நடவடிக்கைகளிலும் சிங்கள அரசு தொடர்ந்தும் ஈடுபட்டால் விளைவு விபரீதமாகவே இருக்கும்.

அவ்விதம் நிகழ்ந்தால் சமாதானத்தின் கையறு நிலைக்கு புலிகள் இயக்கம் பொறுப்பாகமாட்டாது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான எத்தனையோ வரலாற்று வாய்ப்புக்களை சிங்களத் தலைவர்கள் போட்டுடைத்துள்ளனர்.

தற்போதைய வாய்ப்பையும் சந்திரிகா அம்மையார் போட்டுடைக்க விரும்புகிறார் போலுள்ளது!.

**சோதனைக்குள்ளேயே சாதனை படைத்தவன்.**
**வேதனை தந்தவர் வீட்டினுள் ஆட்லறிகள் உடைத்தவன்.**

# தேசத்தின் புயல்

திருகோணமலையில் நாளும் துயரச் செய்தியோடு விடியும் கிராமங்களில் ஒன்றில்தான் தனுசன் பிறந்தான். நாளுக்கு நாள் சுற்றிவளைப்புக்கள், கைதுகள், சித்திரவதைகள் என்று அந்த ஊரிற்கே பழகிப்போன அவலங்கள் அது.

நித்தம் ஒரு வீட்டில் ஒப்பாரி கேட்கும். சின்ன வயதில் காயங்கள் மேல் காயங்களாக அவனில் பதிந்த காட்சிகள் ஒவ்வொன்றும் மாறாத தளும்பாக என்றும் அவனின் நினைவில் இருந்தன. அந்த நினைவுகளிலிருந்து அவன் தன்னை மீட்டுக்கொள்ள முடியாதவனாய் அலைந்தான். அவன் சிந்திக்கத் தொடங்கியபோது அந்த நாட்கள் மிகக் கொடுமையானதாக இருந்தன. என்றாலும் அவனால் அம்மாவை மீறி எதையுமே செய்ய முடியாதவனாய் மனசிற்குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

அம்மாவிற்குத் தெரியாது மௌனமாய் ஒரு எரிமலை குமுறிக் கொள்வது. அவள் பாவம். எப்போதும் பிள்ளைகளுக்காகவே தன்னை தேய்ப்பதில் திருப்தி கண்டுகொண்டிருந்தாள். அவளைப் பொறுத்தவரை தன் எல்லாச் செல்வங்களும் தன்கூடவே இருந்துவிட வேண்டும் என்றதுதான் ஆசை.


“என்ர குஞ்சுகள் எல்லாம் என்னோடயே இருக்கவேணும்” என்று அவள் அணைக்கிறபோது, அவளின் மனதிற்கள் ஓராயிரம் கனவுகள் சிறகு விரிக்கும். அவளைப் பொறுத்தவரையில் தன்னைவிட்டு பிள்ளைகள் பிரிந்துவிடக் கூடாது என்ற நினைப்பு மட்டுமே இருந்தது.

“அண்ணா ஊருக்குவாற இயக்க அண்ணாக்களோட கதைக்கிறான்” என்று அவளின் சின்னமகன் வேர்க்க களைக்க ஓடிவந்து சொல்லுகின்ற பொழுதெல்லாம் அவள் பெரிதாகப் பதறுவதில்லை. “அவன் என்னை விட்டுட்டு போகமாட்டான்.” என்று பிள்ளை மேல் அவள் வைத்த பாசத்தினாலும் நம்பிக்கையாலும் தம்பியை அமைதிப்படுத்துவாள்.

அவளைப் பொறுத்தவரை இப்போதும் அவன் சின்னப் பிள்ளையே. ஆனால், அவனின் செயற்பாடு களோ வேறுவிதமாய் இருந்தது. ஒழித்து ஒழித்து வரும் போராளிகளுக்கு சாப்பாட்டுப் பொதி எடுத்துச் சென்று கொடுப்பது, அவர்கள் ஊருக்குள் சேகரித்த அரிசி, பருப்புகளை சுமந்துகொண்டு அவர்களின் முகாம் வரை செல்வது, அவர்கள் வீதி கடக்க வேவுபார்ப்பது என்று அவனது ஒவ்வொரு செயற்பாடும் பெரிதாக, தேவையானதாக இருந்தது.

ஊருக்குள் சிறு காக்காய் குருவிக்குக் கூட இவனின் செய்கை எதுவும் புரியாது. மிக அமைதியானவன். அம்மா மீதும், சொந்தங்கள் மீதும், ஊரின் மீதும் அவனது உறவு வலுப்பெற வலுப்பெற அவனது போராட்டச் சிந்தனைகள் தீவிரமானது.

அவனது அப்பா, மரங்களை அறுத்துச் சீவி வியர்வை சிந்தும் தச்சுத் தொழிலாளி. அவரைச் சுற்றிவளைப்பொன்றில் இராணுவம் கைது செய்து கொண்டுபோனது. தங்கராசாவை பிடிச்சுக்கொண்டு போட்டாங்களாம் என்ற சேதி அந்த ஊருக்கு வழமையான ஒன்றாய் போனாலும் அவனின் வீட்டில் அது பெரும் இடியானது. அன்றாடம் உழைத்து சராசரியாக வாழ்ந்துகொண்டிருக்கும் எளிமையான குடும்பம் இந்தத் திடீர் இழப்பால் அவதியுற்றது.



**கரும்புலி மேஜர் தனுசன்**
(தங்கராசா இலங்கேவரன்)
மூதூர், திருமலை

பிறப்பு 25.11.1974 — வீரச்சாவு 26.03.2000

> “அண்ணா ஊருக்குவாற இயக்க அண்ணாக்களோட கதைக்கிறான்”. என்று அவளின் சின்ன மகன் வேர்க்க களைக்க ஓடிவந்து சொல்லுகின்ற பொழுதெல்லாம் அவள் பெரிதாக பதறுவதில்லை. “அவன் என்னை விட்டுட்டு போகமாட்டான்” என்று பிள்ளைமேல் அவள் வைத்த பாசத்தினாலும் நம்பிக்கையாலும் தம்பியை அமைதிப்படுத்துவாள்.

வீட்டிலே அவனையும் தம்பியையும் வைத்துக்கொண்டு அந்தச் சீருடையணிந்த மிருகங்களிடம் அம்மா இரந்து கேட்டபோதுகூட அவைகள் இரங்கவில்லை. அவளது கண்ணீரைப் போலவே கெஞ்சுதலும் வீணாய் சிந்தப்பட்டது.

அப்பாவைக் கொண்டுசென்று விட்டார்கள். உதைத்து அப்பாவை றக்கில் ஏற்றிய காட்சி கண்முன்னே நடந்ததால் சித்திரவதைகள் எப்பிடி இருக்கும்.... மனசு நினைவிழந்தது. அன்றிலிருந்து அந்த வீட்டில் நேரத்திற்கு அடுப்பு புகையவில்லை. அம்மா பிள்ளைகளோடு அவர்களின் முகாம்களுக்கு அப்பாவை விசாரித்து அலைந்தாள். எங்கேயும் இல்லை.

ஒவ்வொரு முகாம் வாசலாய் ஏறி இறங்குகின்ற அவர்களின் நம்பிக்கை இப்போதும் அப்பா இருக்கின்றார் என்றதுதான். அது உண்மையானபோது சந்தோசப்பட முடியவில்லை. அப்பா வெளவால் போல தலைகீழாக தூங்கிக்கொண்டிருந்தார். அடிகாயங்களில் இருந்து இரத்தம் கசிந்து காய்ந்து போயிருந்தது. அந்த வதைமுகாமின் சின்ன இடைவெளிக்குள்ளால் இது மட்டுமே அவனுக்குத் தெரிந்தது. அவன் அழுதான். அப்போது சின்னப் பெடியன்.



சிறிது நாட்களில் அப்பா வந்துவிட்டார். ஆனால் அப்பாவின் இயல்புநிலை இன்னும் வந்துசேரவில்லை. முன்போல வேலைசெய்ய இயலாமல் அவரின் உடல் அடி காயங்களால் நோய்வாய்ப்பட்டிருந்தது.

“அம்மாவைப் பார்க்க அண்ணாக்கள் இருக்கிறார் கள். தம்பியும் வளர்ந்து அவனும் பார்ப்பான்தானே.” அவன் இயக்கத்திற்கு புறப்படத் தயாரான போது இப்படித்தான் அம்மாக்காக அழும் மனசை திடப்படுத்திக் கொண் டான்.

போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொள்ளவே அவனொரு போராட்டம் நடத்தவேண்டியிருந்தது. எந்த நாளும் கண்ணில் படுமளவிற்கு அங்கே போராளிகள் திரிவதில்லை. எப்பவாவது இடையிடையே அங்கே உலாவும் அவனிற்குத் தெரிந்த போராளிகளைக் கூட சில நாட்களாகக் காணவில்லை. அவனின் காத்திருப்பு பொறுமையின் எல்லைவரை கொண்டு சென்றது. அவனும் அவனோடு இன்னும் இருவரும் போராட்டத்தில் இணைவதற்காக ஊரின் ஒதுக்குப்புறத்தில் காட்டிற்குள் தெரிந்த போராளிகளின் பாசறை ஒன்றிற்குச் செல்வதற்கு புறப்பட்டார்கள். நீண்டதூரப் பயணம். இடையிடையே பயணத்தைக் குறுக்கிட்டு மூர்க்கத்தனமாக ஓடும் ஆறுகள். எல்லாம் சலிப்பில்லாமல் கடந்துவந்து அந்த காட்டுப் பாசறையில் தன்னைப் போராளியாக்கினான்.

ஏற்கனவே அப்பாவின் உடல்நிலையால் உடைந்து போயிருந்த அம்மாவிற்கு இவ னின் பிரிவு தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. அவள் எதிர் பார்க்கவே இல்லை இப்படி ஒரு பிரிவை.

நாளும் நாளும் அம்மா தூங்காமலேயே பிள்ளை வருவான் என்று விழித்திருந்தாள். எதை எதையோவெல்லாம் நினைத்து மனதை வருத்திக் கொண்டிருந்தாள். ஒவ்வோரு நாளிலும் அவளின் செயற்பாடுகளில் ஒவ்வொன்று குறைந்தது. தன் கருமங்களை கவனிக்காமலேயே ஏதோ மனநோய் பிடித்தவளாய் அலைந்தாள். மகன் வருவான், வரு வான் என்றே சொல்லிக்கொண்டிருந்தாள்.

பொன்னம்மான் பயிற்சிப் பாசறையில் பயிற்சி முடித்து பாசறை விட்டு வெளியே வந்தபோது அவனிற்கும் அம்மாவின் சேதி அதிர்ச்சியாய்த்தான் இருந்தது.

“என்ர குஞ்சுகளெல்லாம் என்னோடையே இருக்கவேணும்” கட்டிப் பிடிச்சுக்கொண்டு அடிக்கடி அம்மா சொல்வது நினைவில் பாரமானது. ஆனால் ஓடிச்சென்று பார்க்கும் சந்தர்ப்பம் இருக்கவில்லை. வன்னிநோக்கி அவர்கள் வந்து பல மாதங்கள் ஆகியிருந் தது. அவன் கிராமத்திற்குச் சென்று அம்மாவோடு சும்மா இருந்தால் இவனிற்கு பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. அம்மாமீது வைத்திருந்த பாசத்தை அடக்கி வீரமாக்கிக்கொண்டு அவன் நினைத்துவந்த காரியத்தைச் செய்துகொண்டிருந்தான்.

சாள்ஸ் அன்ரனி படையணியில்தான் அவனது பணிகள் அனைத்தும் ஆரம்பமானது. வன்னியில் முக்கிய ஒருசில தாக்குதல்களிற்குச் சென்றுவந்த பின் லெப். கேணல் ராகவண்ணையுடன் கட்டளை மையத்தில் அவனது போராட்டப்பணி தொடர்ந்தன. அறிக்கை எழுதுவது, ஆயுத விபரம் எடுப்பது என்று களத்தினில் நிகழும் மாற்றங்களையும் இழப்புக் களையும் வெற்றிகளையும் ஆவண மாக்கும் முக்கியமான பணியது. அங்கேதான் ஆரம்பப் பயிற்சி முகாமி லேயே உறவான உறவொன்று தொடர்ந்துகொண்டே வந்தது. பிரிவு என்பதில் நொந்துபோயிருந்தவனிற்கு அரவணைக்க அன்புசெய்ய சகோதரன் மாருதியனின் பாசமிருந்தது. முதலில் அவனுடனான பாசம் பின் அவர்களின் வீடுவரை சென்றது. அந்த வீடு, அம்மா, அப்பா சகோதரிகள் எல்லாம் அவனின் நெருங்கிய உறவுகளானது.

தனுசனின் வீட்டார் அவனிற்கு கடிதம் அனுப்புவதென்றால் அங்கே தான் அனுப்புவார்கள். மாருதியன் தனக்கு உடுப்பெடுத்தால், தனுசனுக்கும் சேர்த்தே எடுப்பான். இப்படி அவனின் உறவுகள் வலுப்பெற்றுக் கொண்டிருக்க உள்ளத்தில் இழப்புக்கள் உருவாகிக்கொண்டிருந்தன. வீரச்சாவு விபரம் எழுதி அவனது கை வைரம் பெற்றது.

— துளசிச்செல்வன் —

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)



# பிளவுபட்ட இலங்கை ஒட்டவல்லவர் யார்?

- சாரணன் -

***"சிங்களவரும் தமிழரும் பிரிந்துசெல்லும் நிலையை அடைந்துவிட்டனரா?"***

*- தாசி வித்தாசி (1958) -*

1958ஆம் ஆண்டு இனப்படுகொலை பற்றித் தான் எழுதிய பிரபலமான நூலை மேற்படி வினாவுடன் தாசிவித்தாசி முடித்து வைக்கிறார். சிங்களவரான தாசி வித்தாசியால் எழுதப்பட்ட இந்நூல் திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் இனவாதக் கொள்கைக்கு எதிரான ஒரு யுத்த பிரகடனமாகவும் அமைந்தது.

இனப்படுகொலைக் கலகங்களினாலும், இராணுவப் படுகொலைகளினாலும், பெரும் குண்டுமாரிகளினாலும், தமிழரின் நெஞ்சில் ஆளமாகத் தைத்துவிட்ட சிங்களத் தலைவர்களின் இனவாதக் கோஷங்களினாலும், சட்டங்களினாலும் திட்டங்களினாலும் அனைத்துப் பாரபட்சங்களினாலும் இலங்கைத்தீவை சிங்கள ஆட்சியாளர் இரண்டாகப் பிளந்துவிட்டனர்.

தமிழரின் நியாயமான அடிப்படை உரிமைகளை ஏற்கமறுத்த சிங்கள ஆட்சியாளர் தமிழர் மீதான தமது யுத்தத்திற்கு "சமாதானத்திற்கான யுத்தம்" என ஒரு புதுப்பெயர் இட்டனர்.

யுத்தங்கள் மேலும் மேலும் தமிழரை பிரிவின் பக்கம் தள்ளியது. யுத்தத்தால் யுத்தம் பெருகியது. பகைமையால் பகைமை வளர்ந்தது. மனதாலும் வாழ்நிலையாலும் இலங்கை இரண்டாகப் பிளவுற்றுவிட்டது.

இலங்கையின் நவீன வரலாற்றில் சிங்களத் தலைவர்கள் பிளவை வலுவாக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர். உலகின் பல பாகங்களிலும் ஐரோப்பியரின் கொலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிராக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தபோது சிங்கள உயர் குழாத்தினர் தமிழரிற்கு எதிராக போர்கொடி உயர்த்திக்கொண்டிருந்தனர். சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் பிரித்தானியரின் கொலனித்துவ ஆதிக்கத்தை விடவும், அந்நிய சக்திகளை விடவும் தமிழரே பிரதான எதிரிகள் என்ற மனநிலை குடிகொண்டிருந்தது.

பிரித்தானியரிற்கு எதிராக இந்தியா போராடி விடுதலை அடைந்தபோது இலங்கைக்கும் பிரித்தானியா விடுதலை அளித்தது. இலங்கை போராடாது விடுதலை அடைந்த நாடு என்பது மட்டுமல்ல உண்மை. அத்துடன் கூடவே தமிழருக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர் போராடிக்கொண்டிருந்த ஒரு தலை[...] வடிவச் சுதந்திரநாடு. சிங்களத் தலைவர்[...] தமிழருக்கு எதிராகப் போராடிக்கொண்டி[...] கையில் தமிழ்த் தலைவர்களோ பிரித்தா[...] ரிற்கு எதிரான விடுதலைப் போராட்டத்[...] குதிக்க முனைந்தனர்.

பிரித்தானியரிற்கு எதிரான இந்[...] விடுதலைப் போராட்டத்திற்குத் தலை[...] தாங்கிக்கொண்டிருந்த காந்தியை யாழ்ப்ப[...] வாலிப கொங்கிரஸ் 1927ஆம் ஆண்டு யா[...] பாணம் அழைத்து தனது விடுதலை[...] கொடியை உயர்த்த விரும்பியது. இந்[...] சமூகத்தை அதிகம் விளங்கிவைத்திரு[...] காந்தியால் இலங்கையை விளங்கிக்கொள்[...]தில் சிரமம் எதுவும் இருக்கவில்லை. இலங்கையிற் காணப்பட்ட இனப்பிளவை அவர் சரிவர எடைபோட்டிருந்தார். இந்நிலையில் அவர் தனது விஜயத்திற்கு இரண்டு நிபந்தனைகளை முன்வைத்தார். ஒன்று தனது விஜயம் இலங்கையின் தென்பகுதியையும் உள்ளடக்கியதாக அமையவேண்டுமென்பது. மற்றையது முழு இலங்கையிலிருந்தும் இந்திய விடுதலைப் போராட்டத்திற்காக ஒரு லட்சம் ரூபா நிதி திரட்டித்தர வேண்டுமென்பது. அன்றைய காலத்தில் அப்படி ஒரு பெரும் நிதியை தமிழர் மத்தியிலிருந்து திரட்டிடல் ஓர் அரிதான காரியமே. யாழ்ப்பாண வாலிப கொங்கிரஸ் வீறாப்புடன் இரு நிபந்தனைகளுக்கும் ஒப்புக்கொண்டது. நிதி திரட்டல் கொழும்பிலும் நிகழ்ந்த போதிலும் அதுவும் பெருமளவு தமிழரிடமிருந்துதான் திரட்டப்பட்டது என்பது ஒரு கசப்பான உண்மை.

காந்தி இலங்கையினது இனப்பிளவின் சாராம்சத்தை அதன் கருவிலேயே புரிந்திருந்தார். அப்படி இருந்தும் காந்தி சிங்களத் தலைவர்களையும் திருப்திப்படுத்தும் விதத்திற்தான் தனது விஜயத்தை வடிவமைத்துக் கொண்டார் என்பது இலங்கை பொறுத்து வெளிநாடுகள் எப்படி நடந்துகொள்ளக் கூடும் என்பதை விளங்கிக் கொள்ள ஏற்ற ஒரு குறிகாட்டியாய் காந்தியின் மேற்படி நடவடிக்கை அமைந்தது என்பதையும் கருத்திற்கெடுப்பது அவசியம்.

எவ்வாறாயினும் இலங்கை அதல பாதாளமாகப் பிளவுற்றிருப்பதை காந்தி 1920களில் தெளிவுற விளங்கியிருந்தார் என்பதை மட்டும் இங்கு கருத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

**பிளவுபட்ட தேசம்** என்ற பொருளில் 1963ஆம் ஆண்டு பேராசிரியர் பி.எச். பாமர் இலங்கை பற்றி ஒரு நூலை எழுதியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.




> **சிங்களத் தலைவர்களின் நடவடிக்கைகளை வரலாற்றுபூர்வமாகத் தொகுத்துப் பார்த்தால் உள்நாட்டு அர்த்தத்திலும் வெளிநாட்டு அர்த்தத்திலும் அவர்களது அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் காணப்படும் பிளவை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து இறுதியில் தீவை இரண்டாகப் பிளந்து எடுப்பதில் முற்றுப்பெறும் என்பதே உண்மை.**

[...] பெரிதாக விரிவடையப்போகின்றது என்பது ஏற்கனவே முன்னுணரப்பட்டுவிட்ட போதிலும் சிங்கள ஆட்சியாளரின் நடவடிக்கைகள் பிளவை ஒட்டவல்லவைகளாய் அமையாது மேலும் மேலும் பிரிக்கவல்லனவாயே அமைந்தன.

தமிழரைச் சட்டங்களால் தடுத்துப் பார்த்தனர், அடித்துப் பார்த்தனர், தீவைத்துப் பார்த்தனர், கொன்று குவித்தனர், குண்டுமாரி பொழிந்தனர், நகரங்களைத் தகர்த்தனர், படைப்பட்டாளங்களைப் பெருக்கினர், அந்நிய இராணுவ உதவிகளைப் பெருக்கினர், அந்நிய இராணுவ நிபுணர்களை வரவழைத்தனர், அந்நியப் படைகளைத் தருவித்தனர். தமிழருக்கு எதிராக உள்நாட்டு வெளிநாட்டுப் படைகளை எல்லாம் ஏவிவிட்டனர்.

சிங்கள ஆட்சியாளர் சமாதானம் என்று கருதுவது தமிழின உரிமைகளை அழித்தொழிப்பது, தமிழரைச் செயலற்ற நிலைவரை ஒடுக்குவது என்பதுதான் சிங்கள ஆட்சியாளரின் அரசியல் நடவடிக்கைகளுக்கும், இராணுவ நடவடிக்கைகளுக்கும் இப்படியான ஒரேயொரு அர்த்தம்தான் உண்டு. "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற பெயரும் இந்த அர்த்தத்தை மட்டுமே கொண்டது. ஆதலால் சிங்கள ஆட்சியாளருக்கு உறுதுணை போவதென்பது உள்நாட்டுப் பரிமாணத்திலும் வெளிநாட்டுப் பரிமாணத்திலும் தமிழன் ஒடுக்குமுறைக்கு உறுதுணையாகல் என்பதுதான்.

எத்துணை படை நடவடிக்கைகளையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் உள்நாட்டு வெளிநாட்டுப் பரிமாணங்களுடன் சிங்கள ஆட்சியாளர் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விட்ட [...] வெற்றிபெற முடியாது.

"பயங்கரவாதத்தை அழித்துத் துடை" என்று 1979ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில் ஒரு படையை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார். அப்படைக்கு மூன்றுமாத காலக்கெடு கொடுக்கப்பட்டது. தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு "பயங்கரவாதம்" என முத்திரை குத்தி சிங்கள ஆட்சியாளரால் அனுப்பப்பட்ட முதலாவது பாரிய படையெடுப்பு இதுவாகும். அப்படி வந்த படை யாழ்ப்பாணத்தில் தனது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

அப்போது விடுதலைப் புலிகளிடம் கைகொள்ளளவு வெடிமருந்துகளும் ஓரிரு துப்பாக்கிகளுமே இருந்தன. ஆனால் ஒடுக்குமுறையின் யதார்த்தம் என்ன செய்ததெனில் ஓரிரு துப்பாக்கிகளுடன் மட்டுமிருந்து புலிகளை அழிப்பதற்குப் பதிலாக படையணிகளாய் வளர்த்தெடுத்தது. தரையிலும், கடலிலும் படைகளை பெருக்கல் வேகத்தில் வளர்த்ததுடன் விமான எதிர்ப்புவரை வளர்ச்சியைத் தூண்டியது. சிங்கள ஆட்சியாளரால் புரிந்துகொள்ளப்பட முடியாத ஒரு வரலாற்று வளர்ச்சிப் போக்கிது. ஒடுக்குமுறையாளர்கள் கண்திறக்க மறுக்கும் கண்முன்னான யதார்த்தமிது.

இற்றைவரையான கடந்தகால வரலாற்றை ஆராயும்போது சிங்கள ஆட்சியாளரில் எவராவது சமாதானத்திற்காக போராடியுள்ளனரா? தமிழரின் உரிகைள் பற்றி அவ்வப்போது கூறும் சில பசப்பு வார்த்தைகளைத் தவிர தமிழரின் உரிமைகளுக்காக உண்மையிற் செயற்பட்ட ஒரு சிங்கள ஆட்சியாளனையாவது காணமுடியவில்லை.

ஆட்சியில் இருந்த அல்லது எதிர்க் கட்சியில் இருந்த ஏதாவது ஒரு பெரும் சிங்களக் கட்சியின் தலைவர்களில் எவராவது தமிழரின் உரிமைக்காக ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தையாவது நடாத்தியிருக்கவில்லை. தமிழரின் மனங்களை வென்றெடுப்பதற்கு குறைந்தபட்சம் அற்ப உதாரணங்களைத் தானும் காட்டியிருக்காத சிங்களத் தலைவர்களை தமிழ் மக்கள் ஒருபோதும் நம்பப்போவதில்லை.

சமாதானம் ஒடுக்குபவனின் பக்கத்திலிருந்தே வரவேண்டும். ஒடுக்கப்படுபவன் பக்கத்திலிருந்து அல்ல. சமாதானத்திற்கான ஒரு சிறு முன்னுதாரணத்தையும் கொண்டிருக்காத மேற்படி சிங்களத் தலைவர்களிடமிருந்து சமாதானத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

பிளவுபட்டுவிட்ட இலங்கையை ஒட்டவல்ல சிங்களத் தலைவர்கள் எவருமில்லை. மிகக் குறைந்தபட்சம் உண்மையான சமஷ்டி முறைத் தீர்வுக்கேனும் சிங்களத் தலைவர்கள் தயாரில்லை. ஆதலால் பிளவை ஒட்ட வழி தெரியவில்லை.

சமாதானத்தின்பால் அரசாங்கத்திற்கு அக்கறையிருக்குமானால் தாம் பேச்சுவார்த்தை நடாத்தப் புறப்பட்டுள்ள புலிகளின் எதிரிகளுடன் அவர்கள் கூட்டுச்சேர முடியாது. கீழ்த்தரமான தந்திரங்கள் மேலும் பிளவை வலிமையாக்கவே உதவும்.

சிங்களத் தலைவர்களின் நடவடிக்கைகளை வரலாற்று பூர்வமாகத் தொகுத்துப் பார்த்தால் உள்நாட்டு அர்த்தத்திலும் வெளிநாட்டு அர்த்தத்திலும் அவர்களது அரசியல் [...] தும் காணப்படும் பிளவை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து இறுதியில் தீவை இரண்டாகப் பிளந்து எடுப்பதில் முற்றுப்பெறும் என்பதே உண்மை.

பண்டாரநாயக்கா உள்ளிட்ட சிங்கள இனவாதிகளின் இனவாதத்தைப் பார்த்து 1958ஆம் ஆண்டு தாசி வித்தாசி எழுப்பிய கேள்விக்கு வரலாறு இப்போது கூறும் பதில் "ஓம்" என்பதே.

●

# தற்கொடைத் தாக்குதல்களும் கரும்புலிகளும்

**விடுதலை வீரனின் சுயநலமற்ற, பற்றற்ற வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமானது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்.**

*- தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*



**வி**யற்நாம் போரில் கணிசமானளவு தற்கொடைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அண்மைக்காலச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்று 92 வயதினராக வாழும் கியாப் என்ற ழைக்கப்படும் ஜெனரல் வோநுகுயென் கியாப் (GEN.VO NGUYEN GIAP) பிரெஞ்சு மற்றும் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தற்கொடை தாக்குதல் அணிகளைப் பயன்படுத்தினார் என் பதை உறுதிசெய்ய முடிகின்றது. கியாப் படைத்துறைக்கல்வி கற்காதவர். பட்டறிவும், சுயமுயற்சியும் அவரை உலகின் முன்னணி படைநடத்துநர்களில் ஒருவராக உயர்த்தின. இராணுவ விவகாரங்கள் சம்பந்தமான நூல் களையும் அவர் படிப்பதில்லையாம். கிரனேற் குண்டின் தொழிநுட்பம் பற்றி அவர் பிரெஞ்சு மொழி கலைக்களஞ்சியத்தின் மூலம் படித்த தைக் கண்டதாக அவருக்கு நெருக்கமானவர் கள் கூறுகின்றனர்.

வியற்நாம் போர் 1946இல் தொடங்கி 1975இல் முடிவுற்றது. வியற்நாமின் சுதந்திரத் திற்காக தலைவர் ஹோசீமின் தலைமையில் போராடிய விடுதலை அமைப்பு வியற்மின் (VIET MINH) இந்த நெடிய போரை நடத்தி யது. 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் கம்போ டியா, லாவோஸ், வியற்நாம் ஆகியவற்றை ஆட்சிசெய்த பிரான்சு நாடு 1954இல் பெற்ற டியன் பியன் பூ தோல்வியுடன் வியற்நாமை விட்டு வெளியேறியது. இதன்பின் நடந்த ஜெனிவா அமைதிப் பேச்சுக்களில் வியற்நாம் வடக்கு, தெற்கு என்று இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. வடக்கு வியற்நாம் வியற்மின் ஆட்சியின்கீழ் சென்றது. தெற்கு வியற்நாம் அமெரிக்க ஆதரவுபெற்ற தனிநாடாக விளங்கி யது. கொமியூனிஸ்டுகளான வட வியற்நாம் ஆட்சியாளர்கள் தென் வியற்நாமைக் கைப் பற்றலாம் என்ற அச்சத்தில் அமெரிக்கா தனது படைகளை அங்கு அனுப்பத் தொடங்கி யது.

1968இல் ஐந்து இலட்சத்திற்கு மேலான அமெரிக்கத் துருப்புக்கள் தென் வியற்நாமில் குவிக்கப் பட்டன. அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் வட வியற்நாம் மீது பாரிய குண்டுவீச்சுக்களை நடத்தின. பிரெஞ்சுப் படைகளுக்கு எதிரான வியற்மின் தாக்குதல்களில் ஜெனரல் கியாப் தற்கொடைப் படைகளை களம் இறக்கினார். பிரெஞ்சுப் படைகளின் நிலைகளுக்கு சிறிய தற்கொடை அணிகளைத் தாக்குதலுக்கு முன் னோடியாக கியாப் அனுப்புவார். அவர்கள் தடைகளை நீக்கியவாறு ஊடறுத்து முன் னேறுகையில் தக்க சமயம் பார்த்து அலை அலையாகத் தாக்குதல் அணிகளை அனுப் புவது அவருடைய பாணி. இது அவருக்கு மிகவும் பிடித்தமான தந்திரோபாயம் என்று இராணுவ வல்லுநர்கள் கணிப்பிடுகின்றனர்.

1951ஆம் ஆண்டளவில் கியாப்பின் தந்திரோபாயத்தை எதிர்கொள்ளும் நோக்கில் ஆட்டிலறி பீரங்கிகளைப் பயன்படுத்தும் உத் தியை பிரெஞ்சுப் படைகள் பயன்படுத்தின. இது சிறு பின்னடைவை ஏற்படுத்தினாலும் கியாப்பின் தந்திரோபாயம் மாறுதல் அடைய வில்லை. 1954இல் இருபதாம் நூற்றாண்டின் அதி முக்கிய மான போர்களில் ஒன்றான டியன் பியன் பூவில் கியாப்பின் கைகளில் சோவித் ஒன்றியம் உதவிய 130mm பல்குழல் றொக்கற் லோஞ்சர்கள் இருந் தன. இந்த சக்திவாய்ந்த ஆயுத த்தை ருஷ்ய மொழியில் காட் யூஷா (KATYUSHA) என்று அழைப்பார்கள். செம்படையின் துருப்புச்சீட்டு என்று அது அழைக்கப்படுவதுண்டு. இரண் டாம் உலகப்போரில் ருஷ்யப் படைகள் பயன்படுத்திய ஒரு கோரஸ் பாடலின் கதாநாயகி யின் பெயர்தான் காட்யூஷா.

காட்யூஷா ஆயுதத் தொழிற்சாலையில் பணியாற்று கிறாள். அவளுடைய காதலன் தாயகத்தைக் காப்பதில் ஈடுபடு கிறான். உன் காதலை என் நெஞ்சில் அணை யாத தீபாக வளர்க்கிறேன் என்று அந்தப்பெண் பாடுவதாக பல்லாயிரக் கணக்கான செம்படை யினர் ஒரே குரலில் பாடுவார்கள். இப்படிப் பாடும் பேரொலி அந்த றொக்கற் லோஞ்சரின் சூட்டொலிக்கு ஒப்பிடப்படுகின்றது. காலப் போக்கில் அந்தப் பெண்ணின் பெயர் பல்குழல் எறிகணைக்குச் சூட்டப்படுகின்றது. சோவியத் ஒன்றியம் வழங்கிய காட்யூஷா சீனா ஊடாக வியற்நாம் எல்லைவரை கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து காடுகளின் ஊடாக தோள் சுமையில் களமுனைக்கு கொண்டுவரப்படுகின் றது.

டியன் பியன் பூ போரில் தற்கொடை அணிகள், மரபுப் படையினர், உணவு சமைத் தல், வழங்கல் போன்ற உதவிகள் செய்யும் பொதுமக்கள் மற்றும் காட்யூஷாவை இயக்கு வோர்கள் பங்கேற்றனர். டியன் பியன் பூ கோட்டைக்கு மிக அருகாமையில் மிகவும் இரகசியமாக காட்யூஷாவை போராளிகள் காவிச் சென்றுவிட்டார்கள். வழமையாக அதை லொறியில் பொருத்தி எடுத்துச் செல் வார்கள். ஆனால் வியற்நாம் காடுகளில் அத ற்கு வசதி இல்லை, மனிதவளம் ஒன்றுதான் உண்டு. மார்ச்சு 13, 1954இல் தொடங்கிய போர் மே 07, 1954இல் பிரெஞ்சுப் படைகளின் வெள்ளைக்கொடி உயர்த்தலுடன் முடிவுக்கு வந்தது. இந்த 56நாட் போரில் 10,000 வியற் நாம் போராளிகள் களப்பலியாகினர். போரை வழிநடத்தியவர் ஜெனரல் கியாப்.

போரின் தத்துவம் என்ற தலைப்பின் கீழ் (THE PHILOSOPHY OF WAR) இறை வரை பற்பல ஆய்வு நூல்கள் எழுதப்பட்டுள் ளன. எல்லா நூல்களும் ஒன்றையே வலியுறு த்துகின்றன. வரலாறு தொடங்கிய நாட்தொட்டு போரும் மனித வாழ்வும் இணைபிரியாது தொடர்கின்றன. மதங்கள் யாவும் உயிர்க் கொலையை மறுக்கின்றன. ஆனால் இத் தடையை மீறுவதற்கு மனிதன் பல உத்திக ளைக் கையாள்கிறான். காலப்போக்கில் மத மும் உயிர்க்கொலைக்கு ஆதரவு வழங்குகின் றது. உயிர் பெறுமதியானது என்பதில் ஐய மில்லை, ஆனால் போர் என்று வந்துவிட்டால் மனிதன் தனது உயிரைத் துச்சமாக மதிக்கி றான். போரில் ஈடுபடும் ஒரு சிலர் தனது அணி அல்லது இனத்தின் வெற்றிக்காக தமது உயிரைத் தியாகம் செய்கின்றனர். இவர்கள் சற்று வித்தியாசமானவர்கள். போர் வரலாறு ஆரம்பித்த நாட்தொட்டு இப்படியான தற் கொடையாளிகள் நன்கு அடையாளம் காணப் படுகின்றனர்.

தற்கொடை எனும் உயர்முடிவு, அது எல்லோருக்கும் உரியதல்ல என்று குறள் கூறுகின்றது. அதற்கு மனோபலமும் பயிற்சித் திறனும் வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு எதிரி க்கு பெருந்தீங்கு விளைவிக்காத தற்கொடை தாக்குதலால் யாதொரு பயனுமில்லை. நியூ யோர்க் நகரின் இரட்டைக் கோபுரத்தின் மீதான தற்கொடைத் தாக்குதலுக்குப் பின் தற் கொடைத் தாக்குதல்கள் (SUICIDE ATTA CKS) என்ற தலைப்பின் கீழ் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுகள் நடைபெறுகின்றன. செப்ரம்பர் மாதம் பதினொராம் திகதி இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடத்தப்பட்ட காரணத்தால் '9/11' என்ற புதிய கருத்தை தோன்றியுள்ளது. தற்கொடைத் தாக்குதல் வரலாற்றில் மிகப் பெரிய உயிரழிவை ஏற்படுத்திய 9/11 தாக்கு தல் பயணிகள் விமானங்கள் மூலம் நடத்தப் பட்டது. 3000இற்கும் மேற்பட்ட உயிர்கள் பறிக்கப்பட்டது, மிகப்பெரிய சொத்தழிவு ஏற் பட்டது. கிறிஸ்தவ - இஸ்லாம் மதங்களுக் கிடையிலான நல்லுறவு பாதிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்தியவர்கள் இஸ்லாம் மதத் தினராவர். இதன் பயனாய் 21ஆம் நூற்றாண்டு மனித வரலாறு மேற்கூறிய மதங்களுக்கு இடையிலான மோதலாக இடம்பெறும் ஆபத்து தோன்றியுள்ளது.

நவீன அரசுகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் தற்கொடைத் தாக்குதல் கள் சிம்ம சொப்பனமாக இடம்பெறுகின்றன. அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றம் என் பதுபோல் அநீதி செய்வோர்க்கு தண்டனை வழங்க தற்கொடையாளர்கள் காத்திருக்கி றார்கள். பாதுகாப்பு என்ற பெயரால் இன்றைய அரசியல் தலைவர்களுக்கும், அரசியல், பொரு ளாதார, இராணுவ மையங்களுக்கும் பெரு மளவு நிதி செலவிடப்படுகின்றது. இதற்கு தற்கொடைத் தாக்குதல் அச்சுறுத்தம் முக்கிய காரணமாக அமைகின்றது. இத்தாக்குதல் களை நடத்துவோருக்கு தப்பியோடும் மார்க் கம் தேவையில்லை. தாக்குதல் நடந்தபின் அவர்களைப் பாதுகாப் பாக அழைத்துச்செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. தாக்குதல் நேரத்தையும், இடத் தையும், இலக்கையும் தற்கொடையாளனே தெரிவுசெய்கிறான். தற்கொடைத் தாக்குதல்களுக்கு மிக உயர்ந்த ஊடகப் பிர சாரம் கிடைக்கிறது. இதனால் தற்கொடைத் தாக்குதல்களின் தாக்கம் எல்லா மட்டத்தினர் மத்தியிலும் நன்கு உணரப்படுகின்றது. இன் றைய தற்கொடைத் தாக்குதல்களுக்கு நவீன விஞ்ஞானம் துணைபோகின்றது. விமானங் கள், தரை ஊர்திகள், கடற்கலங்கள் இலத்திர னியல் கருவிகள், சக்திவாய்ந்த வெடிபொருள் கள் தற்கொடையாளன் கைகளில் ஆயுதங்க ளாக மாறுகின்றன. உடலில் குண்டைக் கட் டிச்செல்ல வேண்டியதில்லை. அவன் வெடி பொதிந்த அங்கியையே அணிந்திருப்பான்.

> **ஆக்கிரமிப்பாளர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் அகற்றுவதற்கும் தற்கொடைத் தாக்குதல்கள் சிறந்த போர் உபாயமாகக் கருதப்படுகின்றது. வெல்லமுடியாத படை என்றொன்றும் இல்லை. சிறிய படைலம் பெரும் படையை புறமுதுகு காட்டச்செய்ய முடியும். ஸ்ரான்லி கார்னோ என்ற ஆய்வாளர் பெரும் படையைக்கொண்ட நாடு, சொந்த மண்ணிற்காகப் போராடும் சிறிய இனத்தை வெல்லமுடியாத காரணங்களைத் தனது நூலில் விளக்குகிறார்.**

ஆக்கிரமிப்பாளர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் அகற்றுவதற்கும் தற் கொடைத் தாக்குதல்கள் சிறந்த போர் உபாய மாகக் கருதப்படுகின்றது. வெல்லமுடியாத படை என்றொன்றும் இல்லை. சிறிய படை மூலம் பெரும் படையை புறமுதுகு காட்டச் செய்யமுடியும். ஸ்ரான்லி கார்னோ என்ற ஆய் வாளர் பெரும் படையைக்கொண்ட நாடு, சொந்த மண்ணிற்காகப் போரிடும் சிறிய இனத்தை வெல்லமுடியாத காரணங்களைத் தனது நூலில் விளக்குகிறார். (STANLEY KARNOW: VIETNAM, A HISTORY) முதலாவதாக பெரும் படையோடு வருபவன் ஆக்கிரமிப்பாளன், சொந்த மண்ணிற்காகப் போரிடுபவன் இலட்சியவாதி. அவன் தன் இனத்திற்காகவும் மண்ணிற்காகவும் உயிர்த் தியாகம் செய்யத் தயாராகவுள்ளான். இரண் டாவதாக தாக்குதலுக்கு உட்படும் சிறிய படை ஒரு வருடம் தாக்குப் பிடித்துவிட்டால், அதை பெரிய படையால் வெல்வது கடினம். இரண் டாவதை கார்னோ கோட்பாடு (KARNOW DOCTRINE) என்பார்கள். இதை பெரும் பாலான இராணுவ ஆய்வாளர்கள் உண்மை யென்று ஏற்றுக்கொண்டுள்ளனர். நொந்த மண்ணுக்காகப் போரிடும் சிறிய படை உடைய வன் வல்லரசின் தாக்குதல்களை ஒரு வருடம் தாக்குப் பிடித்துவிட்டால் சிறிய படையினன் பலம்பெற்று வெல்லமுடியாத நிலைக்குச் செல்கிறான், என்பது கார்னோ கோட்பாட்டின் சாராம்சம். வெல்வதற்கு வேண்டிய உத்தி களை, அதில் தற்கொடைத் தாக்குதல்களும் அடங்கும் சிறிய படையினன் காலப்போக்கில் உருவாக்குவான் என்பது கோட்பாட்டின் உட்பொருள்.

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எம்மைப் பொறுத்தளவில், தற்கொடைத் தாக்குதல்களைக் கண்டுபிடித்தவர்கள் நாம ல்ல. அதேபோல் இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய தாக்குதல்களை தொடக்கிவைத்த முன்னோடிகளும் நாமல்ல. தற்கொடைத் தாக் குதல்கள் கிறிஸ்துவுக்கு முந்திய காலம் தொட்டு நடைபெறுகின்றன. கி.மு.480இல் ஸ்பார்ட்டா (SPARTA) நாட்டரசன் தனது 300 படைகளுடன் இணைந்து பாரசீக சாம்ராச்சியப் படைகளின் மேற்கு நோக்கிய முன்னேற்றத் தைத் தடுக்க போரிட்டான். அவனும் அவனு டைய வீரர்களில் பெருமளவானோரும் கொல் லப்பட்டனர். லியோனிடாஸ் (LEONIDAS) என்ற அம்மன்னனின் தற்கொடை பிற மன்னர் களை கடும்போர் புரியத் தூண்டியது. இதனால் பாரசீகம் விரிவடைய முடியவில்லை. வரலாற் றில் பதிவாகிய முதலாவது தற்கொடைத் தாக்குதல் இதுவாகக் கருதப்படுகின்றது.

எட்டாம் நூற்றாண்டில் இஸ்லாம் தோன்றியபின் இஸ்லாம் மதத்தினர் பெரு மளவு தற்கொடைத் தாக்குதல்களை மதத்தின் பெயரால் நடத்தினர். இஸ்லாம் தற்கொலை யை மறுக்கின்றது. பிற்கால இஸ்லாம் மதத் திற்காக உயிர்விடுவோர் சுவர்க்கம் செல்வார் கள் என்ற கோட்பாட்டை உருவாக்கியதால் இன்றுவரை இஸ்லாம் மதத்தினர் தற்கொடை தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கின்ற னர். உலகின் மிகக் கூடுதலான தற்கொடைத் தாக்குதல்களை நடத்துவோர் இஸ்லாம் மதத் தினர் என்று இதுபற்றிய ஆய்வாளர்கள் கூறு கின்றனர். மத்திய கிழக்குவாழ் இஸ்லாம் மதத்தினர் தமது மதப் பரப்பலுக்காக தற் கொடைத் தாக்குதல்களைப் பயன்படுத்தினர். பதினொராம் நூற்றாண்டின் பாரசீக இஸ்லாமி யர்கள், பதினெட்டாம் நூற்றாண்டின் கேரளம் வாழ் இஸ்லாமியர்கள், அதே நூற்றாண்டின் பிலிப்பீன்சின் மின்டானோ தீவு இஸ்லாமியர் கள் ஆகியோர் தற்கொடைத் தாக்குதல்களை மதத்திற்காக நடத்தினர். இன்றும் அது நின்ற பாடில்லை. ருஷ்யப் படைகளுக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தி உயிரிழந்த செச்சென் நாட்டுப் போராளிகளின் மனைவியர்கள் இப் போது தற்கொடைத் தாக்குதல்களை நடத்து கின்றனர். இவர்கள் இஸ்லாம் மதத்தினர். இப்பெண்களை 'கறுப்புக் கைம்பெண்கள்' (BLACK WIDOWS) என்று மேற்கு நாட்டு ஊடகங்கள் அழைக்கின்றன.

லெபனோன் நாட்டிலிருந்து வெளிநாட்டவர்களை விரட்டுவதற்காக அந்த நாட்டின் ஹெஸ்பொல்லா (HEZBOLLAH) இயக்கம் 1983இல் தற்கொடைத் தாக்குதல்களை நடத்தியது. அதுதொட்டு மத்திய கிழக்கிலும் உலகின் வேறு பாகங்களிலும் தற்கொடைத் தாக்குதல்கள் விரிவடைந்து செல்கின்றன. இன்று பன்னிரண்டு நாட்டைச்சேர்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட போர்க் குழுக்கள் தற்கொடைத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொடைத் தாக்குதல்கள் ஹெஸ்பொல்லா இயக்கம் நடத்திய தாக்குதல்களின் வழிவந்தவை என்று ஆய்வாளர்கள் மிகவும் தவறுதலாகக் குறிப்பிடுகின்றனர். வஞ்சினம் கூறிப் போரிடும் முறை தமிழர்கள் மத்தியில் நெடுங்காலமாக உண்டு. புறநானூற்றுப் பாடல்களும் குறளின் படைச்செருக்கு அத்தியாயமும் இதை உறுதி செய்கின்றன. சோழப் பெருமன்னர்கள் வேளைக்காரர் என்ற தற்கொடைப் படையை வைத்திருந்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலிங்க வம்சத்தவனான விஜயபாகு என்ற தமிழ்மன்னன் பொல்லநறுவையை 1054-1109 காலப்பகுதியில் ஆட்சிசெய்தான். இவனிடம் வேளைக்காரர் படை இருந்தது. விஜயபாகுவின் மகள் இரத்தினவல்லிக்கும் மானபர்ணன் என்ற அரசகுமாரனுக்கும் பிறந்தவன் மகா பராக்கிரமபாகு.

தேசியத் தலைவர் அவர்கள் கூறுயதுபோல் இடைக்காலத்தில் தமிழ்வீரம் மழுங்கிப் போயிருந்தது. அதற்குப் புலிகள் புத்துயிர் கொடுத்தனர். புத்துயிர் கொடுக்கவேண்டிய கட்டாயத் தேவையும் இருந்தது. புலிகள் அமைப்பின் கடும் விமர்சகர்களான முறிந்த பனைமரம் என்ற நூலின் ஆசிரியர்கள் (THE BROKEN PALMYRA BY RAJAN HOOLE, DAYA SOMASUNDARAM, K.SRI THARAN & RAJANI THIRANAGAMA. THE SRI LANKA STUDIES INSTITUTE, CLAREMONT, 1988) பக்கம் 132இல் பின்வருமாறு கூறுகின்றனர். "1987ஆம் ஆண்டின் முற்பகுதியில் சிறிலங்கா வான்படைத் தாக்குதல்களுக்கு ஒரு கொடிய நோக்கம் இருந்தது.




சிவிலியன்கள் கொல்லப்படவேண்டும் என்ற நோக்குடன் வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டன". தமிழ்மக்களுக்கு வான்மூலம் நடத்தப்பட்ட கொடூரத்திற்குத் தம்மிடம் மிகவும் பலம்வாய்ந்த ஒரு தடுப்பு ஆயுதம் இருப்பதை அதே வருடம் ஜூலை 05ஆம் நாள் புலிகள் நிரூபித்தனர். ஆனால் இது முழுமையான உண்மையை வெளிப்படுத்தவில்லை. சிங்கள இராணுவம் நடத்திய ஒப்பரேசன் லிபரேசன் எனப்படும் வடமராட்சி ஆக்கிரமிப்புத்தான் முதன்முதலாக தற்கொடைத் தாக்குதல் அறிமுகமாவதற்கு உடனடிக் காரணம். கெரில்லாப் போர்முறையின் பிதாமகர்களான லெனின், மாவோ, சேகுவேரா போன்றோர் தற்கொடைத் தாக்குதல்கள் பற்றிப் பேசவில்லையே, பிரபாகரன் அதை ஏன் தெரிவு செய்தார் என்று விமர்சகர்கள் கேட்கிறார்கள். துருப்புக்களைத் தலைமை தாங்குபவர்கள் வெற்றிதரவல்ல உபாயங்களைத் தாமே தெரிவு செய்வர் என்பதுதான் அதற்கான விடை.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் படைகளின் முக்கிய அங்கமாக கரும்புலிகள் இடம் பெறுகின்றனர். கரும்புலி அணியில் ஆண், பெண் இருபாலாரும் அங்கம் வகிக்கின்றனர். களமுனைப் பணிகள் இருபாலாருக்கும் ஒரே வகையில் அமைகின்றன. புலிகளின் பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளுக்காக இந்த அணி உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. இது தற்காப்பு அணியாகவும் நேரடித் தாக்குதல் அணியாகவும், தாக்குதல் முன்னோடியான தடைநீக்கு அணியாகவும் செயற்படுகின்றது. தமிழீழத் தரைப்பரப்பு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள காரணத்தால் கடற்கரும்புலி அணியைப் புலிகள் உருவாக்கியுள்ளனர். நீரடி நீச்சல்மூலம் நெடுந்தூரம் சென்று தாக்குதல் நடத்தும் சிறப்பு கடற்கரும்புலி அணிக்கு உண்டு. இதைவிட வெடிபொருள் நிரப்பிய விசேட படகுகளை ஓட்டிச்சென்று எதிரியின் கடற்படைக் கலங்களை மோதி அழிக்கும் செயற்றிறன் கடற்கரும்புலிகளுக்கு உண்டு. புலிகளின் தரைப்படை, கடற்படையோடு இணைந்து செயற்படும் கரும்புலி அமைப்பைப்போல் தற்சமயம் எம்மிடம் வான்கரும்புலிகள் இல்லை. ஆனால் எதிரியின் இராணுவ விமானத் தளங்களை நாம் வெற்றிகரமாகத் தாக்கி பெரும் சேதங்களை விளைவித்திருக்கின்றோம். இதனால் எதிரியின் பலத்தை ஆட்டம்காணச் செய்யும் இலக்கை நாம் எட்டியுள்ளோம்.

முதலாவது கரும்புலித் தாக்குதலை நடத்தியவர் கப்டன் மில்லர். (வல்லிபுரம் வசந்தன், துன்னாலை) என்பது வரலாற்றுச் செய்தி. ஜூலை 05, 1987இல் நெல்லியடி கல்லூரி வளாகத்தில் நிலைகொண்டிருந்த சிங்களப் படைகள்மீது இது நடத்தப்பட்டது. முதலாவது கடற்கரும்புலித் தாக்குதலை மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகிய மூவரும் இணைந்து 10, ஜூலை 1990இல் நடத்தினர். கடற் கண்காணிப்பு என்ற பெயரில் 1984 தொடக்கம் அபித்தா, எடித்தாரா கட்டளைக் கப்பல்கள் தமிழீழக் கடற்பரப்பில் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருந்தன. எமது போராளிகள், கரையோரப் பொதுமக்கள், மீனவர்கள் இரு கப்பல்களாலும் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்டனர். கரையோரத்தில் வாழ்வதே ஆபத்தாக இருந்தது. அடிக்கடி பீரங்கித் தாக்குதல் கரையோரக் குடியிருப்புக்கள் நோக்கி நடப்பதால் இரு கப்பல்களும் தமிழர்கள் உயிருக்கு ஆபத்தாக விளங்கின. எடித்தாரா கப்பல் 10, ஜூலை 1990இல் மேற்கூறிய மூவராலும் தாக்கி அழிக்கப்பட்டபின் அபித்தா கப்பலின் தாக்குதல்கள் அதிகரித்தன. 04 மே, 1991இல் கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகிய இரு கடற்கரும்புலிகள் அபித்தாவைத் தாக்கி அழித்தனர்.

மேஜர் காந்தரூபன் ஒரு தன்நலமற்ற இலட்சியவாதி. பெற்றார்களையும் உறவினர்களையும் இழந்த காந்தரூபன் தன்னைப் போன்றவர்களைப் பொறுப்பேற்று புலிகள் அமைப்பு வளர்த்தெடுக்க வேண்டுமென்று விரும்பினார். அவர் கேட்டுக்கொண்டபடி காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை போன்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களைப் புலிகள் உருவாக்கினர். இந்த இடத்தில் தமிழீழ எழுச்சிப்பாடல் வரிகள் இரண்டை நினைவுகூறுதல் மிகப் பொருத்தம் -

***''உங்களுக்காய் இன்று போரைத் தொடுக்கிறேன்
நீங்கள் வாழ வேண்டுமென்று வெடிக்கிறேன்''***

முதல் கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி (புஸ்பமாலா துரைசிங்கம், யாழ்.மண்கும்பான்) காங்கேசன்துறை கடற்படை முகாமிற்குள் நீந்திச்சென்று அங்கு தரித்துநின்ற கடற்படை விநியோகக் கப்பலான ஏ516ஐ மூழ்கடித்தார். இவர் நீரடி நீச்சலடித்துச் சென்று இச்சாதனையைப் புரிந்தார். எடித்தாரா, அபித்தாவுக்கு நிகரான வன்கொடுமைகளைச் செய்த சுப்படோறாவை 29, ஆகஸ்து 1993இல் கடற்கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன் ஆகியோர் இணைந்து அழித்தனர். மிதக்கும் மினிமுகாம் என்று வர்ணிக்கும் சுப்படோறாவில் இருந்து இரு ஒலிகன் எந்திரத் துப்பாக்கிகளை புலிகள் மீட்டனர். கடற்படைத் தலைமைச் செயலகமான திருகோணமலைத் தளத்தினுள் கடற்கரும்புலிகள் ஊடுருவிச்சென்று பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளனர். 19 ஏப்பிரல் 1995இல் மேஜர் கதிரவன், கப்டன் சாந்தா, மேஜர் மதுஷா, மேஜர் தணிகைமாறன் ஆகியோர் ஊடுருவி இரு சங்காய் ரக பீரங்கிக் கப்பல்களை மூழ்கடித்தனர். இது மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய நாளாகக் கணிப்பிடப்படுகின்றது.



அடுத்த வருடம் 12, ஏப்பிறில் 1996 ஆம் நாள் கடற்கரும்புலி லெப். கேணல் ரதீஸ் தலைமையிலான 9 கடற்கரும்புலிகள் கொழும்புத் துறைமுகம் மீதான தாக்குதலை மேற்கொண்டனர். 1994 செப்ரம்பர், 19ஆம் நாள் லெப்.கேணல் நளாயினி தலைமையிலான கடற்கரும்புலி அணியினர் கடல் அரசன் எனப்படும் சகாரவர்த்தனா என்ற பாரிய கப்பலை மூழ்கடித்தனர். பெண் கடற்புலி அணியின் முதலாவது சிறப்புத் தளபதியாக லெப். கேணல் நளாயினி பதவி வகித்தவர். திருகோணமலை கடற்தளத்திலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் தொடரணிகள் மீது (CONVOY) கடற்புலிகள் நடத்திய தாக்குதல்கள் ஏராளம். இவற்றுள் ஒன்றை மாத்திரம் குறிப்பிடுவது பொருத்தம். 22, பெப்பிரவரி 1998ஆம் நாள் திருமலையிலிருந்து யாழ்.குடா இராணுவத்திற்கென பாப்தா தரையிறக்கு கப்பல், வலம்புரி இராணுவ சரக்குக்கப்பல், இரு போர்க்கப்பல்கள், எட்டு டோரா அதிவேக பீரங்கிக் கப்பல்கள் பாதுகாப்பு வழங்க துருப்புக்கள், ஆயுத தளபாடங்கள், உணவு வகைகள் கொண்டுசெல்லப்பட்டபோது கடற்போர் மூண்டது. அப்போது பாப்தாவும் வலம்புரியும் மூழ்கடிக்கப்பட்டன. லெப். கேணல் கரன் உட்பட பதினொரு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

1992 தொடக்கம் யாழ்.குடாநாட்டு மக்கள் மீதான பொருளாதாரத் தடையும் இராணுவ முற்றுகையும் ஜனாதிபதி பிறேமதாசா அரசினால் படிப்படியாக இறுக்கப்பட்டது. குடா மக்கள் பெருநிலப்பரப்பிற்குச் செல்லும் ஒரேயொரு பாதையாக 20மைல் நீளமான கிளாலி நீரேரிப்பாதை அமைந்தது. இதில் வைத்து நாகதேவன் துறையில் முகாமிட்டிருந்த கடற்படையினர் அப்பாவிப் பயணிகள்மீது தாக்குதல் நடத்தினர். புக்காரா விமானங்களும் தாக்குதல் தொடுத்தன. பலநூறு தமிழர்கள் கொல்லப்பட்டனர். மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியைக் கடற்புலிகள் மேற்கொண்டனர். 26, ஆகஸ்து 1993 ஆம் நாள் கடற்கரும்புலிகள் மேஜர் வரதன், மேஜர் மதன் அடுத்தடுத்து நடத்திய தாக்குதல்களில் கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதன்பின் கிளாலி மேலாதிக்கம் புலிகள் வசமாகியது. எமது கண்ணீரும் செந்நீரும் கலந்த கிளாலிக் கடலை மையமாக வைத்து மூத்த பொருளியல் பேராசிரியர் சூரியகுமாரன் ஒரு காதல் குறுநாவலை ஆங்கிலத்தில் புனைந்துள்ளார். (KILALI CROSSING BY PROF. C.SURIYAKUMARAN) காதலனைச் சிங்களச் சிப்பாயாகவும் காதலியை புலிப்பெண் போராளியாகவும் இந்த மெத்தப் படித்த ஆசிரியர் சித்தரித்துள்ளார். இது தேவைதானா?

வன்னிப் பெருநிலப்பரப்பின் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த பகுதிகளை மீட்பதற்காக புலிகள் 1996 - 2000 காலப்பகுதியில் ஓயாத அலைகள் 1,2,3 என்று பெயரிடப்பட்ட படை நடவடிக்கைகளைத் தொடுத்தனர். இவை அனைத்திலும் கரும்புலிகள் அளப்பரிய பங்களிப்புச் செய்தனர். இதற்கிடையில் 1997இல் வன்னி மண் ஊடாக யாழ்.குடாவை இணைக்கும் தரைப்பாதையை உருவாக்குவதற்காக ஜயசிக்குறுய் என்ற படைநடவடிக்கையை எதிரி ஆரம்பித்தான். நடவடிக்கை தலைமைச் செயலகம் அமைந்திருந்த தாண்டிக்குளம் மீது 10, ஜூன் 1997இல் புலிகள் தாக்குதல் தொடுத்தபோது மேஜர் நிதன் உட்பட நான்கு கரும்புலிகள் வீரகாவியமாகினர்.

முல்லை மாவட்டத்தை மீட்டெடுத்த ஓயாத அலை - 01இன்போது முல்லை இராணுவத்திற்கு உதவியாக வான்படை, கடற்படை இணைந்து திரிவிட பஹர என்ற எதிர் நடவடிக்கையை சிங்களப்படை ஆரம்பித்தது. உதவிக்கு வந்த ரணவிரு பீரங்கிப் படகினை மேஜர் பதுமன் உட்பட ஏழு கடற்கரும்புலிகள் தாக்கி மூழ்கடித்தனர். 27, செப்ரம்பர் 1998இல் ஓயாத அலை - 02 மூலம் புலிகள் கிளிநொச்சியை மீட்டெடுத்தனர். 8கி.மீ நீளமான இராணுவ வலயமும் 1500இற்கும் மேற்பட்ட படையினரும் அழிக்கப்பட்டனர். 11கரும்புலிகள் உட்பட 403 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். இச்சமரில் ஊடறுப்பு அணியின் தலைவியர்களாகச் சென்ற லெப்.கேணல் செல்வி, லெப். கேணல் ஞானி ஆகிய இருவரும், தாம் நின்றிருந்த இடத்திற்கு ஷெல் போடுங்கோ, எங்களைப் பார்க்கவேண்டாம் என்று கூறி எதிரிக்குப் பேரழிவை ஏற்படுத்தியதோடு வீரச்சாவையும தழுவிக்கொண்டனர். 240வருடகால அடிமைச் சின்னமான ஆனையிறவு படைத்தளம் ஓயாத அலை - 03 மூலம் எமதாக்கப்பட்டது. 26, மார்ச்சு 2000ஆம் நாள் பளையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தின் ஆட்டிலறிகளையும் ஆயுதக் களஞ்சியங்களையும் கரும்புலிகள் மேஜர் தனுசன், மேஜர் சுதாஜினி ஆகியோர் தகர்த்தழித்தனர். அதே மாதம் 31 ஆம் நாள் இயக்கச்சி இராணுவ தளத்தினுள் புகுந்த மூன்று கரும்புலிகள் அங்கிருந்த ஆட்டிலறிகளைத் தகர்த்தனர். ஆனையிறவு மீட்புக்கு இக்கரும்புலிகள் வித்திட்டார்கள் என்றால்

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

மிகையாகாது.

இன்று எம்மிடம் குண்டுவீச்சு விமானம் இல்லை என்பது உண்மையே. ஆனால் எதிரியின் அதியுச்ச பாதுகாப்புடன் கூடிய பலாலி, சீனன்குடா, கட்டுநாயக்கா போன்ற இராணுவ விமானத்தளங்களைத் தகர்க்கும் உயிராயுதம் எம்மிடம் உண்டு. 02, ஆகஸ்து 1994இல் பலாலி விமானத்தளத்திற்குள் புகுந்த கரும்புலிகள் பெல்-212 உலங்கு வானூர்தி, பவள் கவசவாகனம் ஆகியவற்றை அழித்தனர். இதில் ஐந்து கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர். நவம்பர் 1993இல் பூநகரி இராணுவ முகாம் மீதான ஒப்பரேஷன் தவளைத் தாக்குதலை மேற்கொண்டபோது திசைதிருப்பு நடவடிக்கையாக பலாலி விமானதளம்மீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது. 11, நவம்பர் 1993 அன்று பதின்மூன்று கரும்புலிகள் பலாலியில் வீரச்சாவடைந்தனர். சீனன்குடா விமானப்படைத் தளத்தினுள் புகுந்த கரும்புலிகள் 06, மார்ச்சு 1997இல் ஒரு வை-12 விமானத்தையும், இரு விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் தகர்த்தனர். இதில் மூன்று கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர். வரலாற்றுப் புகழ்மிக்க கட்டுநாயக்கா விமானப்படைத்தளத் தாக்குதல் 24, ஜூலை 2001ஆம் நாள் நடத்தப்பட்டது. இக் கரும்புலித் தாக்குதலில் 28



வான்கலங்கள் அழிக்கப்பட்டன, சிறிலங்காவின் பொருண்மியவளம் சிதைக்கப்பட்டது. கரும்புலிகளின் உச்சக்கட்ட சாதனையாக இத் தாக்குதல் இடம்பெறுகின்றது.

இற்றைவரை 261 கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். எமக்காகவும் எமது மண்ணிற்காகவும் உயிர்நீத்த இந்த உத்தமர்களை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து அஞ்சலி செய்கிறோம்.

"எழுபது எழுபத்தைஞ்சு வயசிலயும் இப்படி நாங்கள் இருக்கிறம். எங்கட வீடுகளிலையெண்டாலும் இவ்வளவு அன்பா ஆதரவா நாங்க இருப்பமே?

கிளிநொச்சியில் டிப்போ சந்தியிலிருந்து கோணாவில் நோக்கிய வீதியில், "அன்புச்சோலை" என எல்லோராலும் அழைக்கப்படும், முதியோர் பேணலகத்தில் நான் நின்றுகொண்டிருந்தேன்.




"அப்ப சரியான சண்டை சூழ்நிலை தம்பி. எல்லாரையும் போலதான் நாங்களும் சரியாக் கஸ்ரப்பட்டம். ஆனா, எங்களையும் எல்லோரும் கைவிட்டு விடேல்ல. எங்களையும் பார்க்க தம்பியவை இருக்கினம் எண்ட நிம்மதியிலிருந்தம்."

ஆரம்பத்தில், தேச விடுதலைக்காய் தம் குழந்தைகளை இழந்து, போரின் கோரத்தினால் தம் உறவுகளைவான குளியலறைகள் இருக்கு. கோலுக்குள்ள ரீவி டெக்கும் இருக்கு"

"பொழுதுபோக்க ரிவியும் பாக்கிறநாங்கள்"

முன் வராந்தாவில் போடப்பட்ட கதிரைகளில் இருந்து நாங்கள் கதைத்துக் கொண்டிருந்தோம்.

பூச்சாடிகளுடன் சுத்தமாக விருந்த அந்த வரவேற்பு அறையில் ஒரு புறம் தொலைக்காட்சிப் பெட்டியிருந்தது. அவர்கள் தங்கும் ஒவ்வொரு அறையும் வரவேற்பு அறையின் இரு பக்கமும் இருந்தன.

"நாங்கள் இப்ப கொஞ்சம் முன்னம்தான் பால் குடிச்சனாங்கள். நீங்களும் கொஞ்சம் குடியுங்கோ தம்பி" என அந்தத் தாய் நீட்டிய பாலை நான் வாங்கிக் கொண்டேன்.

"இஞ்ச வரமுன்னம் எனக்கு வீட்டில யாருமில்லை தம்பி"

"என்ர மகனும் வீரச்சாவடைந்திட்டான்"

"மற்ற உறவுகளும் என்னை சுமையாகக் கருதிச்சினம். அப்பதான் மிச்சாக்கள் எல்லாருமாச் சேர்ந்து அவையளையும் சந்தோசமாய் வைச்சிருக்கிறம்".

என்றார் நோய்வாய்ப்பட்ட ஒரு மூதாட்டியை என்னருகே கைத் தாங்கலாக அழைத்துவந்து இருத்திய ஒருவர்.

கரும்புலி மேஜர் கலைச் செல்வனின் தந்தை ஆறுமுகம் ஐயாவையும் அம்மாவையும் அங்கே சந்தித்தேன். அவர்கள் தம்பதியாகவே அங்கேயிருந்தனர். அந்த வளாகத்தினுள்ளேயே குடும்பமாக தாங்கள் இருப்பதற்கு ஒரு சிறிய வீடு அமைக்கப்படுவதாக அவர்கள் சொன்னார்கள்.

"நாங்கள் ஒவ்வொரு நாளும் என்ன செய்யாட்டிலும், பேப்பர் மட்டும் படிக்காம விடமாட்டம்"

"ஏனெண்டா தம்பி, நீங்கள் எல்லாம் எப்படி இருக்கிறியள் என்று அறியத்தான்" எனத் தொடங்கிய தந்தையொருவர், "பின்னேரங்களில் நாங்கள் கொஞ்சப்பேர் சேர்ந்து சும்மா கொஞ்சத் தூரம் நடையாய் போய் வாறநாங்கள்"

பராமரிப்போ தேவைப்படும்போது அன்புச்சோலையே அவர்களை பொறுப்பெடுக்கின்றது.

அன்புச்சோலையில் இவ்விரண்டு உள்ளக, வெளியேயான பயனாளர்களைவிட, மூன்றாவதாக, இன்னமும் அன்புச்சோலையில் இல்லாவிடினும் தமக்கான உதவியோ, மருத்துவ வசதியோ பராமரிப்போ தேவைப்படும் முதியவர்களை சிறிதுகாலம் அன்புச்சோலை தானே பொறுப்பெடுத்து பராமரித்து அவர்கள் மருத்துவ ரீதியில் குணப்படுத்தப்பட்ட பின், அவர்களை அவர்களது வீட்டில் சேர்க்கின்றது.

தமிழீழத்தின் எல்லா மாவட்டங்களில் இருந்தும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினராலும், மாவீரர் போராளிகளின் குடும்பநலன் காப்பகத்தாலும் இனங்காணப்படும் முதியவர்கள் அன்புச்சோலைக்கு அழைத்துவரப்படுகின்றனர்.

04.06.2004 அன்று அவர்களுடைய இல்லத்தில் புதிதாக கட்டப்பட்டதொரு தங்குமிடத்தின் திறப்புவிழா. அவர்கள் எல்லோருமே அன்றைய நிகழ்வில் ஆழ்ந்திருந்தனர். திடீரென அவர்கள் யாருமே எதிர்பார்க்காதொரு இனிய அதிர்ச்சி. அவர்களது வளாகத்தில் வேகமாகவந்து நின்றதொரு வாகனத்திலிருந்து தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் இறங்கினார்.

"உண்மையில தம்பி எங்களுக்கு கனவுபோல இருந்திச்சி"

"அவரை நாங்கள் பாத்திட்டம். அவர் தன்ர கையால எங்களுக்கு பரிசும் தந்தவர்."

"நாங்கள் அவரை கும்பிடப் போக எங்கட கையைப் பிடிச்சு நா தழுதழுக்கச் சொன்னவர்"

"நீங்கள் இல்லையம்மா, நான் தான் உங்கள் எல்லாரையும் கும்பிட வேணும்" என்று.

"எங்களுக்கு எல்லாருக்கும் அழுகையே வந்திட்டுது"

"அவரை கண்டிட்டம். இனி நாங்கள் செத்தாலும் பறவாயில்லை"

# "எங்கட பிள்ளைகள் தேசத்தைக் காத்தார்கள், தேசம் இப்ப எங்களைக் காக்கிறது"

கடந்த மூன்று தசாப்தங்களாக, எம்மீது திணிக்கப்பட்ட போரின் வடுக்களை எம்தேசம் இன்னும் ஆற்றிக்கொள்ளாது தவிக்கின்றது. எம்மீது திணிக்கப்பட்ட கொடிய போரின் வடுக்களை இன்னும் சுமப்பவர்கள் எங்கள் முதியவர்கள். தொடர்ச்சியான இடப்பெயர்வின் அவலங்களினாலும், போர் சிதைத்த அவர்களின் பொருளாதாரத்தினாலும், தமது குடும்பங்களை இழந்து, உறவுகளைக் கைவிட்டு, ஏதிலிகளாக, யாருமற்றவர்களாக எம் சமூகத்தில் கைவிடப்பட்ட முதியோர் தொகை ஏராளம்.

திக்குக்கொன்றாய் சிதறிவிட்ட தம் உறவுகளைத் தேடியலைந்து, களைப்படைந்து, கைவிடப்பட்டு, தமது ஊரிழந்து, வீடிழந்து, தொழிலிழந்து, யாருமற்று கொடிய முதுமையிலும், தீராத நோய்களினாலும் யாருமற்று விட்டோம் என்ற மன உளைச்சலாலும் நொந்து அலைந்த எம் முதியவர்கள் யாருமற்று வாழ்ந்த வாழ்வு அவலமானது.

"நாங்க யாழ்ப்பாணத்தில இருக்கேக்க ஆமியால என்ர ஒரு மகள் சுட்டுக் கொல்லப்பட்டுட்டாள்"

"மற்ற மகள் நாட்டை காக்க போராடப் போயிட்டாள்"

"இடம்பெயர்வில் என்ர கணவனும் செத்திட்டார். உறவுகள் எல்லாம் திக்குக்கு ஒண்டாய் திசைக்கொண்டாய் பிரிஞ்சு போச்சுதுகள். நான் தனிமரமா ஆகிட்டன்"

அவர்தான் யுத்தம் மிகக் கொடுமையானதாக இருந்த 2001ஆம் ஆண்டுகளில், அன்புச்சோலை உள்வாங்கிய முதலாவது தாய்.

2001 ஏப்ரில் 19 வன்னி மண்ணில் யுத்த மேகங்கள் கருமை சூழ்ந்து தன் உச்ச தாண்டவத்தை ஆடிய நேரம், போரினால் கைவிடப்பட்டு, யாருமற்று அனாதைகளாகப்போன எம் தேசத்து முதியவர்களுக்கான பராமரிப்பு இல்லம் ஒன்றை ஆரம்பிக்குமாறு தேசியத் தலைவர் அவர்கள் பணித்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் மாவீரர் குடும்பநலன் காப்பகத்தினால், முல்லைத்தீவின் முள்ளியவளைப் பகுதியில் "அன்புச்சோலை மூதாளர் பேணலகம்" உதயமாகியது.

அன்றைய போர்ச் சூழலில், மிகுந்த கஸ்ரங்களின் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட அந்த இல்லத்தின் நிலைபற்றி அப்போது அங்கிருந்த தாயொருவர் சொன்னார்.

- அன்புமாறன் -

யும் இழந்து தனித்துப்போன ஆறு பெற்றோர் இனங்காணப்பட்டு அவர்களுடன் அன்புச்சோலை உதயமானது.

2002ஆம் ஆண்டளவில் முல்லைத்தீவில் இருந்து கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதிக்கு இடம் மாற்றப்பட்டு, தற்போது கிளிநொச்சி நகரிற்கு அண்மித்த சூழலில், கனகபுரத்தில் அமைதியான ஒரு வளாகத்தில் அன்புச்சோலை தன் உறவுகளை அணைத்துக் கொண்டிருக்கின்றது.

அன்றைய பகற்பொழுது, நான் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் வரவேற்பறையில், மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளருடன் அன்புச்சோலை பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தேன்.

அன்புச்சோலை இல்லத்தின் செயற்பாடுகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சொன்னார்கள்.

வரவேற்பு மண்டபத்தைக் கடந்து நான் உள்ளே பிரவேசித்தேன். அமைதியான அந்தச் சூழலில் ஆண்களுக்கெனவும் பெண்களுக்கெனவும் தனித்தனியாக விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. மீண்டும் நம்பிக்கை கொள்ளும் அவர்களின் வாழ்வுபோல முற்றத்தில் அவர்களில் சிலர் நீரூற்றி வளர்க்கும் பூமரங்கள் துளிர்த்திருந்தன. "வாங்கோ ராசா" என என் கைபற்றி அழைத்துச் சென்ற முதிய தாயின் அரவணைப்புடன், என்னைச் சூழ இருந்து கதைத்துக் கொண்டிருந்தவர்களின் அன்பில் நான் லயித்துப்போனேன்.

என்னமாதிரி அம்மாக்கள்? எல்லாரும் சுகமே? நான் அவர்களுடன் கதைக்கத் தொடங்கினேன். "இஞ்சை எங்களுக்கு என்ன கஸ்ரம் தம்பி. இப்பதான் கோயிலுக்கு(சேர்ச்) போட்டு வந்த நாங்கள்" என அவர்கள் கதைக்கத் தொடங்கினார்கள்.

பன்னிரண்டு அம்மாக்களும், பதினொரு ஐயாக்களுமாக அப்போது இருபத்திமூன்று பெற்றோர் அங்கே இருந்தனர். ஆண்களுக்கு, பெண்களுக்கென அமைக்கப்பட்டிருந்த தனித்தனி விடுதிகளைக் காட்டி என்னுடன் இருந்த அம்மாக்கள் கதைத்தவாறிருந்தார்கள்.

"இதுதான் தம்பி இப்ப நாங்கள் தங்கிற இடம்"

"ஒவ்வொரு அறையையும் இரண்டு ரெண்டு பேர் தங்கிறநாங்கள். இஞ்சால சாப்பிடுற இடமிருக்கு. பொதுதம்பியவை என்னை இஞ்ச கூட்டியந்தவை"

ஒரு மாவீரனின் தாய் என்னிடம் சொன்னாள்.

"என்ரை பிள்ளையள் கூட என்னைக் கைவிட்டிட்டுது அப்பன்"

"ஆனா தலைவர் (தமிழீழ தேசியத் தலைவர்) எங்கள கைவிடேல்ல"

என்றார் இன்னுமொரு தாய்.

"ஒருத்தருக்கும் வருத்தம் துன்பம் கடுமையில்லையே?" என கேட்டேன்.

"எல்லாம் இருக்கு தம்பி, ஆனா இப்ப நாங்கள் அதற்குக் கவலைப் படுவதில்லை" என சிரித்தவாறே சொன்னார்கள்.

அந்தப் பேணலகத்தினுள்ளேயே தமக்குத் தனியான மருத்துவ விடுதி இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மருத்துவப் பெண்போராளி - விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவுப் போராளி - தங்களை பிள்ளை மாதிரி பார்ப்பதாகச் சொன்னார்கள்.

மாதமொருமுறை, என தேவைப்படும் போதெல்லாம் மருத்துவப் பிரிவைச்சேர்ந்த தேவா டொக்ரர் அன்ரியும், வந்து பார்ப்பதாகச் சொன்னார்கள். டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதாகவும் சொன்னார்கள்.

அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் மகிழ்ச்சியிருந்தது. மீண்டும் மீண்டும், தாங்கள் அரவணைக்கப்படுகின்றோம் என்ற திருப்தியிருந்தது.

மாலைவேளையில், முடியுமானவர்கள் அவர்களுக்கு முன்னால் உள்ள பூமரங்களுக்கு நீரூற்றி அவற்றை பராமரிப்பதாகச் சொன்னார்கள். மூதாட்டியொருத்தி அவர்கள் கோழி வளர்க்கும் கோழிக்கூட்டையும் அழைத்துச்சென்று எனக்குக் காட்டி மகிழ்ந்தார்.

"இதுகள் போடுற முட்டையளக் கூட நாங்கள் எல்லோருமாத்தான் பொரிச்சு சாப்பிடுற நாங்கள்" என்றார்.

தையல், பன்னம் என அவர்கள் பொழுதுபோக்காய் தாம் செய்தவற்றை என்னிடம் காட்டினார்கள்.

"ஒன்றிரண்டு பேருக்கு கொஞ்சம் வருத்தம் கடுமைதான் தம்பி, எண்டார்.

"பிறகென்ன அம்மாக்கள், சண்டை சச்சரவொண்டும் இல்லையே?" எனக் கேட்டபோது,

"என்னடா தம்பி, நாங்கள் போராளியளிண்ட தாய்மார். கொஞ்சம் ரோசம் வரும்தானே. ஆனா அடிபடமாட்டம். சும்மா பகிடிக்கு கதைபடுவம்" என சொல்லிச் சிரித்தனர்.

தங்குமிடங்கள், சமையல் கூடம், தனியான மருத்துவமனை, பூந்தோட்டங்கள் தவிர தனியானதொரு வரவேற்புக் கூடமும் அங்கே இருந்தது. பெண்கள் ஆண்களென தேவை



யானபோது அவர்களுக்கு உதவவென பணியாளர்களும் அவர்களுடனிருந்தனர்.

வாரம் இருமுறை "அன்னை இல்லத்தில்" இருந்து உளவளத்துணை ஆலோசகர்களும் தம்மிடம் வந்து கதைத்துச் செல்வதாகக் கூறிய அவர்களிடம், அவர்களது எஞ்சிய உறவினர்களும், புலம்பெயர்ந்த இடங்களில் இருந்துவரும் உறவுகளும் இடைக்கிடை வருவதாகச் சொன்னார்கள்.

"அன்புச்சோலை"யின் உள்ளகப் பயனாளர்களைவிட மேலதிகமாக ஐம்பது வரையான முதியவர்கள் அன்புச்சோலையின் குடும்பத்தில் இருந்தார்கள். இவர்கள் தமது சொந்த விடுகளிலும், உறவினர்களுடனும் தற்போது வாழ்ந்தாலும், தமக்கான முகவரியாக அன்புச்சோலையையே சொல்லிவருகின்றனர். அவர்களுக்கும் எதாவது மருத்துவ உதவியோ தனிப்பட்ட உதவியோ அல்லாதுவிடின் அவர்களுக்கான மேலதிக

அன்றைய நாளை என்னிடம் சொல்லும்பொழுதே அவர்கள் எல்லோரது கண்ணிலும் ஆனந்தக் கண்ணீர்.

யாருமற்றவர்கள் தாங்கள் இல்லையென அன்புச்சோலை மூதாளர் பேணலகம் அவர்களுடன் இன்றிருக்கின்றது. தமிழீழத்தின் எங்கிருக்கும் பெற்றோரும் தம் முதுமையின்போது இனியொருபோதும் தாம் கைவிடப்பட்டவர்கள் இல்லை.

அவர்களிடம் இருந்து நான் பிரிந்துவந்த அந்த மதியப் பொழுதுகளில், அங்கே மாவீரன் ஒருவனின் தாய் கூறிய வார்த்தைகளே மீண்டும் மீண்டும் என்னுள் ஒலித்துக்கொண்டிருந்தன.

"எங்கட பிள்ளைகள் தேசத்தைக் காத்தார்கள். தேசம் இப்ப எங்களைக் காக்கிறது."

# தேசத்தின் புயல்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுவும் அவனோடு கூட இருந்தவர்கள், ஒன்றாய் பழகியவர்கள். ஒவ்வொரு போராளியின் பெயர்களும் நாளும் அவனின் மனதிற்குள் பெரும் எரிமலைகளை உருவாக்கிக் கொண்டிருந்தன. இந்த நாட்களில்தான் அவனிற்குள் கரும்புலியாகச் செல்லவேண்டும் என்று முடிவெடுத்தான். தனது மனதிற்குள் இருந்தவற்றை தலைவனிற்கு எழுதி அனுமதி கேட்டான். அவன் போராட்டத்தில் இணைவதற்கு நிகழ்த்திய மனப் போராட்டங்களைப்போல கரும்புலி அணிக்கான அனுமதி கேட்டு காத்திருக்கும் நாட்கள் கடுமையானதாக இருந்தது.

எந்த விடயத்திலும் அவன் கூடவே திரிந்து, என்ன செய்தாலும் அவனைப் போலவே செய்யும் மாருதியன் அப்போதுதான் தனுசனின் பிரிவை எதிர்கொண்டான். அன்று கரும்புலிகள் அணியில் இணைந்துகொள்வதறகு அனுமதி வந்தவர்களை ஏற்றிச் செல்வதற்கு வாகனம் வந்துநின்றது. பிரியப்போகும் அந்த இறுதி நிமிடங்களை ஒரே இடத்திலிருந்து சந்திக்கும் சக்தி இருவருக்கும் இருக்கவில்லை. தனுசன் புறப்படப்போகின்றான் என்றதும் மாருதியன் முகாமைவிட்டு வெளியே சென்றான்.

முகாமில் இருந்து பிரிவதற்கான நிமிடங்கள் விரைவாகக் கழிந்தன. மாருதியன் அந்த வாகனம் புறப்பட்டிருக்கும் என்ற கணிப்பீட்டில் அந்த முகாம் வந்தபோது வாகனம் இன்னும் புறப்படவில்லை. அவன் எந்த நேரத்தில் நிற்கக் கூடாது என நினைத்தானோ அது நிகழ்ந்துவிட்டது.

வாகனத்தை விட்டு தனுசன் வேகமாக இறங்கினான். இறதியாக அந்த இணைவில் அவர்கள் பேசிக்கொள்ள வார்த்தைகள் இருக்கவில்லை. கண்ணீர்தான் கதைத்துக் கொண்டது. தனுசனின் வாழ்வில் அடுத்தடுத்து பிரிவுச் சுமைகள் பாரமாய் கனத்தன.

அந்தச் சுமைகளோடும் தாயகக்கனவை முதன்மையாக்கிக்கொண்டான். கரும்புலிகள் அணிக்குள் அவன் சேர்ந்திருந்தபோது அவனிற்கு மாருதியன் வீரச்சாவு என்ற சேதி வந்தது. மீண்டும் மீண்டும் அவனின் மனதில் ஏற்பட்ட இழப்புக்கள் அவனை இன்னும் இன்னும் வேகமாக்கியது.

கரும்புலிகள் அணிப் பயிற்சி முடிந்தபோது ஓயாத அலைகள் மூன்றிற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நிகழ்ந்துகொண்டிருந்தது. ஓயாத அலைகள் வன்னியின் சமர்முனையில் உக்கிரமானபோது அவனும் கரும்புலிகள் அணியின் ஒரு அணிக்கு பொறுப்பாகச் சென்றான். இராணுவப் பிரதேசத்திற்குள்ளேயே தங்கி அவனிற்கும் அவனது சொத்துக்களிற்கும் இழப்புக்களை ஏற்படுத்துவதற்காக பைகளில் உணவுகளோடு பெரும் சுமைகளைச் சுமந்து கொண்டு இரவுபகல் நித்திரையில்லாது ஓய்வில்லாது தங்களிடம் இந்த தேசம் எதிர்பார்த்ததை செய்து முடித்திருந்தார்கள்.


அதேபோலதான் வட போர் முனையில் ஓயாத அலைகள் அடிக்க ஆரம்பித்தபோது ஆனையிறவு களத்தினுள் இராணுவத்தின் சில செயற்பாடுகளை முடக்கி வைத்திருப்பதில் அவனின் பங்களிப்பும் இருந்தது. அந்தத் தாக்குதலிற்காய் அவன் செல்கின்றபோது லேசான காய்ச்சல் அவனது உடற் சுகயீனத்தினை காரணம் காட்டி அந்தத் தாக்குதலில் அவன் பங்குபற்றும் அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் அவன் கேட்பதாக இல்லை. அவனும் செல்லப் போவதாக பிடிவாதம் பிடித்தான். அனுமதி பெறும் மட்டும் ஓயவில்லை. அதன் பின்னே திருப்தி. தாக்குதலிற்காக நகர்ந்து தண்ணீரைக் கடக்கின்றபோது அவனின் உடல் குளிரால் நடுங்கத் தொடங்கியது. அவனின் மனது மட்டும் வைரமாய் இருந்தது. பொதிகளோடு நீந்துவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்த இன்னொரு தோழனிற்கு உதவி செய்து அவனையும் அழைத்துச் செல்லும் மனத்திடம் அவனிடம் இருந்தது.

தாக்குதலிற்காகச் சென்று இடையில் வேறு வேலைக்காக இருவர் அவர்களை விட்டுப் பிரிந்து சென்றபோது அவர்களோடு இவர்களிற்கான உணவுப் பொதிகளும் சென்றுவிட்டது. திரும்பிவந்து எடுப்பதற்கோ வேறு எவர் மூலமாவது பெற்றுக்கொள்ள முடியாத சூழல். அவர்கள் இராணுவப் பிரதேசத்திற்குள் நுழைந்துவிட்டார்கள். இனி வெளியே வருவதென்றால் அவர்கள் தங்களிற்கான பணியினை முடித்துத்தான் வருவார்கள். சாப்பாட்டுப் பொதி இல்லாதபோதும் அவர்கள் தங்களிற்கான இலக்கு நோக்கிச் சென்றார்கள். அவர்களிற்கான பணியை முடித்தபோது பெரிதும் சோர்வுற்றுப் போயிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் பணி முடிந்தது என்ற திருப்தியோடிருந்தார்கள். அதேபோலவே பளைப்பகுதியில் அமைந்திருக்கும் ஆட்லறித் தளம்மீது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டபோது தனுசனும் ஓர் அணியோடு தெரிவு செய்யப்பட்டிருந்தான்.

*26.03.2000* நள்ளிரவு பளை ஆட்டிலறித் தளப்பகுதி பெரும் வெடிச்சத்தங்களினால் அதிர்ந்துகொண்டிருந்தது. ஆட்டிலறிகளும் எறிகணைகளும் வெடித்துச் சிதறி எரிவது அந்த ஆட்லறித்தளம் நிர்மூலமாகிவிட்ட சேதியை எடுத்துரைத்துக் கொண்டிருந்தது.

வானளாவ பரவிக் கொண்டிருந்த தீச்சுவாலைகளின் பிரகாசம் கரும்புலிகளின் வீரத்தையும் தியாகத்தையும் வானத்தில் பிரதிபலிக்கும்படி செய்து கொண்டிருந்தன. அந்த வீரமிகு சாதனையை நிகழ்த்திவிட்டு காவியமாகினர் இரண்டு கருவேங்கைகள். கரும்புலி மேஜர் தனுசன, அவனோடு கரும்புலி மேஜர் சுதாஜினி. தனுசன், அவன் சுமைமீது சுமை வந்தபோதும் சோராது நடந்தவன். தினம்தோறும் வானில் வீரவரலாறு எழுதி நெருப்பாற்றைக் கடந்தவன். ●



இது
கரும்புலிகள்
நினைவெடுக்கும் காலம்
இவர்காவியத்தைக்
கூறுகையில்
வாய்பிளக்கும் ஞாலம்

இவர்கள்
உணர்வு தேடித்தோற்றேன்
உடல் வீழ்ந்த
இடம் தேடித்தோற்றேன்
பாவெழுத உவமைதேடித்
தோற்றேன்

ஓசைநயம்
வேண்டிமட்டும்
இவர்களுக்காய்
உவமைசொல்வேன்
உண்மையான
உவமைசொல்லச்
சொல்லுமில்லை
மொழியுமில்லை
கண்டறியும் திறண்
எனக்குமில்லை
எந்தக் கவிஞர்க்குமில்லை

கரும்புலிகள்...

புலித்தாயின்
கருவறைக்குள்
உருவெடுத்த புயல்கள்
இவர்
பகையுரசும் போது
தோன்றும்
தமிழ்தாயின்
சுடர்கள்
மனசறிய முடியாப்
பெரும் புதிர்கள்
எங்கள் மன்னவனின்
கனவை வெல்லும்
உயிர்கள்
விடுதலையின்
தடையகற்றும்
கரங்கள் – வீரத்
தலைவனது
நெஞ்சிலென்றும்
இவர்களது முகங்கள்

சாவழைத்து – எங்கள்
வாழ்வளிக்கத் –தங்கள்
வாழ்வழித்துப்
பகை வீழ்ந்தொழியப்
புயல் வேகமெனக்
களம் போய்வெடித்தோர்.

சாவைத் துணைக்கழைத்து
பகையைத் துடைத்தழித்து
விடிவைப் பிடித்துவந்து
விடுதலை தந்து நின்றோர்
எங்கள்
நெஞ்சில் என்றும்
நிலைத்துக்கொண்டோர்

உடலோடு
கந்தகம் இணைத்து
உணர்வோடு சுதந்திரம்
கலந்து
விலைகூறா
உயிரினைத் துறந்து!
வீரத்தின் சிகரத்தில்
அமர்ந்து
தாகமெம் தமிழீழமென்று
சாவதின் வாசலில் நின்று
வாசகம் கூறியே சென்றோர்

அண்ட வெளியில்
வீடுகட்ட அடுக்கெடுக்கம்
விஞ்ஞானம்
குண்டு கொண்டு
செல்லும் இவர்
கொண்ட மனம்
என்னவென்று
கண்டுகொள்ளமுடியாது
கலங்கித் தவிக்கிறது

இவர்
பொங்கும் அலையோ
புயலின் உறவோ
தீயின் சுடரோ
எரிமலையோ
இடியோ
மின்னற்பொறியோ
அல்ல

ஈழப் பெரியோனின்
கையாலே
புடம்போட்ட தங்கங்கள்
அவன் காட்டும்
தடம்மீது
நடைபோட்ட வேங்கைகள்
கரிகாலனிற் கருகிருந்த
கற்பூரங்கள்
விடிகாலைப் பொழுதாக்கும்
சூரியர்கள்
ஒரு காலமும்
அணைந்து போகா
ஒளிச்சுடர்கள்
வருங்காலப் பயிர்களிற்காய்
பசளையான விளைநலங்கள்
தனக்கென வாழாத்
தவப்புதல்வர்கள்
மனிதர்களுக்குள்
மகோன்னதங்கள்

தாயாய் அணைத்து
தந்தையாய் வளர்த்து
குருவாய் நடந்து
வழிகொடுத்து
வழியனுப்பும்
வலியநெஞ்சம்
வலியெடுத்துத் துடிக்கும்
வெடித்துப் பகை
முடிக்கும் – இவர்
முடிவு கேட்டு

இன்பக் கனவை
இறக்கி வைத்துத்
துன்பச் சுமையைத்
தோழில் ஏற்றித்
தலைவன் மூச்சின்
விச்சு ஆகிக்
கடலேறிக் கரைந்தவராய்
காற்றோடு கலந்தவராய்
மாற்றான் ஊருக்குள்
நுழைந்து பேரெதுவும்
கிடையாது போகுமெனத்
தெரிந்தவராய்ச் சாகுமிவர்
மாமனதை
யாரறிவார் யாரறிவார்

செந்தோழன்

# கனவாகி வருகிறது யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டம்



**புலிகள்மீது ஒருதலையான நிழல் யுத்தம் தொடுக்கப்பட்டாயிற்று. இராஜதந்திர அணுகுமுறைகளால் இதைத் தடுக்க இயலாது போகும்போது, புலிகள் குறைந்தபட்சம் ஒரு தற்காப்பு நடவடிக்கையிலேனும் இறங்க நேரிடும். போரில் தற்காப்பு யுத்தவடிவம் என்பது ஆயுதத்துடன் ஆயத்தமாக இருப்பதென்று பொருளாகாது. இராணுவ அர்த்தத்தில் தந்திரோபாய வலிந்த தாக்குதலும் தற்காப்பின் சிறந்த வடிவம்தான். எனவே நிழல் யுத்தம் ஒன்று வெடிப்பது சாத்தியமே. அவ்வாறு நிகழின் சமாதானத்தின் பாதையை யாரால்தான் கண்டறியமுடியும்.**

**மு**ன்பொரு சமாதான காலத்தில் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோர்களை பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையும் மீறி அவர்களைப் பலிகொண்டுவிட சிங்கள இனவாதிகள் கூச்சலிட்டனர். அப்போதைய ஜெயவர்த்தனா அரசாங்கமும் அதில் முனைப்பாக இருந்தது.

இந்த ஒப்பந்த மீறலை எதிர்த்து அவர்களை மீட்க மூன்றாந் தரப்பாகவும் சமாதானத்தின் பொறுப்பாகவுமிருந்த இந்திய அரசிடம் விடுத்த வேண்டுகோளுக்கு தனது இராஜதந்திர முயற்சிகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை என்று கிடைத்த பதில் ஒரு யுத்தத்தைத் தோற்றுவித்தது. வரலாற்றில் தவிர்த்திருக்க வேண்டிய யுத்தம் தவிர்க்கவியலாது போன துர்ப்பாக்கியம் ஈழப்போராட்டத்தில் நிகழ்ந்தது.

இப்பொழுது புலிகளால் விலக்கிவிடப்பட்ட கிழக்குப் பிராந்தியத் தளபதிகளுள் ஒருவரான கருணாவுக்கு பொது மன்னிப்பும் புகலிடமும் இராணுவத்தில் தகைமையான ஆசனமும் வழங்கப்படவேண்டும் என இனவாதிகள் கூச்சலிடுகின்றனர். இந்த சமாதானகால ஒப்பந்தத்திற்கு இது முரணாக இருப்பினும் இதைச் செயற்படுத்த இப்போதைய அரசாங்கம் முனைப்புடன் இருக்கிறது. யுத்தம் வருமா? இதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. மிகப் பாரதூரமான கேள்வி.

அப்போது கிழக்கின் தளபதிகளை பலி கொள்வதில் இனவாதிகளுக்கு இருந்த இலாபம் இப்பொழுது கருணாவுக்கு புகலிடம் அளிப்பதில் இருக்கிறது. ஆயின் அப்பொழுது தமிழர்களுக்கிருந்த நியாயமான ஆத்திரம் இப்போதும் இருக்குமென்பதை அதன் கொதிநிலையில் விளங்கவேண்டும்.

வன்னிச்சமரில் ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் சிங்கள அரசாங்கத்தை சமாதானத்தினுள் பிரவேசிக்கவும் அதில் தொடரவும், வளரவும் நிர்ப்பந்திக்கும் உள்ளடக்கமாக இருந்ததை மறுக்க இயலாது. இதை இராணுவ அர்த்தத்தில் விளங்குவது அரசாங்கத்தின் இப்போதைய போக்கை விளங்குவதற்கு அவசியமானது.

அப்போதைய காலகட்டத்தில் அதாவது ஓயாத அலைகள் - 03, தீச்சுவாலை தோல்வியை அடுத்து புலிகள் தாக்கும் தரப்பாக இருந்தனர். அரச இராணுவம் தற்பாதுகாக்கும் தரப்பாக மாறியிருந்தது. அப்போதைய அரச இராணுவத்தின் படைச்சீரழிவு வலிந்த தாக்குதலுக்கு வலுவற்றவர்களாக அவர்களை தற்பாதுகாப்புப் போர்முறைக்குள் முற்றாகத் தள்ளிவிட்டிருந்தது.

வடக்கின் பல்முனைகளிலும் தாக்குதலை எதிர்பார்க்க வேண்டியவர்களாக படையினர் இருந்தனர். இதனால் படையினரை பரவலாக ஈடுபடுத்தவேண்டியதாகவும், அதே நேரம் செறிவாக ஈடுபடுத்தவேண்டியதாகவும் ஒரு நெருக்கடி நிலை படைத்தரப்பிற்குத் தோன்றிற்று. இதனை ஈடுசெய்யக்கூடியதாக அப்போது படைத்தரப்பு இருக்கவில்லை.

இத்தருணத்தில் தோன்றிய சமாதானம் படைத்தரப்பைப் பொறுத்து சிறந்த தற்காப்பு வடிவமாக உணரப்பட்டது. இதன் பயனாய் இராணுவம் சமாதானத்தில் ஒத்துழைக்கவேண்டியது விருப்பார்வமுள்ள செயலாக மாறிற்று.

சமாதான காலத்தில் படைத்தரப்பு மேற்கொண்ட ஆளணி திரட்டும் முயற்சிகள் உள்ளடக்கத்தில் படுதோல்வியடைந்திருந்தன. புலிகளோ மையப்படுத்தப்பட்டிருந்த தமது படைவலுவை மீண்டும் பிராந்திய ரீதியாக நிலைநிறுத்தினர். அத்துடன் சமாதான காலத்தில் மக்களை அரசியல்மயப்படுத்தக்கூடிய வாய்ப்பும் புலிகளுக்கு அதிகம் இருந்தது. இதனால் ஆங்காங்கே வலிமையான படைத் திரட்டுக்கள் உருவாகின. குறிப்பாக கிழக்குப் பிராந்தியத்தில் அதிலும் மட்டு - அம்பாறைப் பகுதியில் வலிமைமிக்க படைத் திரட்டு உருவாக்கப் பட்டிருந்தது.

தற்காப்புப் போர் முறைக்குத் தள்ளப்பட்டிருந்த இராணுவத்திற்கு கிழக்கில் புலிகளின் வலிமை மிக்க படைத் திரட்டுக்கள் நிலைப்படுத்தப்பட்டது மோசமாக அச்சமூட்டியது. (கிழக்கு சிங்கள எல்லைப்புறக் கிராமங்களைக் கொண்டதென்ற வகையில் புலிகளின் தாக்குதலை எதிர்பார்க்க வேண்டியிருப்பின் இராணுவம் மிக மிக நீளமான ஒரு தற்காப்பு அரணை அமைக்க வேண்டியிருக்கும்) வடக்கைப்போல் இராணுவ வலயங்களைச் சுற்றிய தற்காப்பு போதுமானதல்ல. மாறாக சிங்களதேச எல்லைகளைக் காக்கும் தலையாய கடமைக்கு இராணுவம் தள்ளப்படும். புலிகளின் படைத் திரட்டின் முன்னால் இப்போதுள்ள இராணுவ மினிமுகாம்களின் ஏற்பாடு நிச்சயம் தற்காப்பளிக்கப் போவதில்லை.

இராணுவரீதியில் இத் தற்காப்புக்கான ஏற்பாடு சாத்தியமற்றிருந்தது. எனவே அரசியல் இராஜதந்திர மார்க்கத்தில் சிங்களத் தலைமை சிந்திக்கவும், செயலாற்றவும் வேண்டியிருந்தமை சமாதானத்தின் ஒரு பகுதி அளவிலோ அல்லது முழு அளவிலோ உண்மை என்பதை அதிகம் ரணில் பேசிவந்த சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலிலிருந்து விளங்கமுடியும். சமாதானத்தின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அதன் பாதுகாப்புக்கும் புலிகளின் கிழக்குப் படைத்திரட்டு ஒரு முக்கிய தூண்டற் சக்தியாக விளங்கியது.

இப்போதோ கருணா விவகாரத்தால் கிழக்கில் புலிகளின் படைத்திரட்டு சிதைந்துபோய் இருப்பதாக இராணுவத் தலைமைப்பீடம் கணிப்பீடு செய்கிறது.

இதனால் புலிகள் காத்திரமான வலிந்த தாக்குதலுக்கு தகுதியற்றவர்கள் என்றும் இராணுவம் தற்காப்புக்காக ஒரு படைப்பரம்பலை செய்யத் தேவையில்லை என்றும், மறுவளமாக படையை ஒருமுகப்படுத்தி தான் வலிந்து தாக்கும் தரப்பாக மாற முடிவதுடன் புலிகளைத் தற்காப்புக்குள் தள்ளி விடமுடியும் என்றும் அது நம்புகிறது.

இதன் பயன்விளைவாய் கிழக்கைக் கைப்பற்ற முடிவதுடன் வடக்கில் நிகழக் கூடிய யுத்தத்துக்கு



கிழக்கின் ஆளணித் திரள்வையும் நகர்வையும் தடுக்க முடியும் என்றும் நம்புகிறது.

> **கிழக்கில் நிகழக்கூடிய படைத்திரட்டு என்பது கிழக்கில் இயங்குகிறதோ வடக்கில் இயங்குகிறதோ எதுவாயினும் அதன் பலம் கிழக்கை விடுவிக்கும், கிழக்கைப் பாதுகாக்கும். வன்னியில் மையம்கொண்ட போர் வலிமைபெற வலிமைபெற கிழக்கின் கிராமங்கள் விடுவிக்கப்பட்டதுபோல் வருங்காலத்து புலிகளின் வலிந்த தாக்குதல் சக்தி நிச்சயம் கிழக்கில் படைத்தரப்பின் இருப்பை கேள்விக்குள்ளாக்கியே தீரும். இராணுவம் யுத்தம் பற்றிச் சிந்திப்பதில் மிகப் பெரும் ஆபத்தே இதில்தான் அடங்கியிருந்தது.**

கிழக்கில் நிகழக்கூடிய படைத் திரட்டு என்பது கிழக்கில் இயங்குகிறதோ வடக்கில் இயங்குகிறதோ எதுவாயினும் அதன் பலம் கிழக்கை விடுவிக்கும், கிழக்கைப் பாதுகாக்கும்.

வன்னியில் மையம் கொண்ட போர் வலிமைபெற கிழக்கின் கிராமங்கள் விடுவிக்கப்பட்டதுபோல் வருங்காலத்து புலிகளின் வலிந்த தாக்குதல் சக்தி நிச்சயம் கிழக்கில் படைத் தரப்பின் இருப்பை கேள்விக்குள்ளாக்கியே தீரும். இராணுவம் யுத்தம் பற்றிச் சிந்திப்பதில் மிகப் பெரும் ஆபத்தே இதில்தான் அடங்கியிருந்தது.

ஆனால் இப்போது தோன்றியுள்ள சூழல் இராணுவத்துக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும், வலுச் சமநிலையை தமக்குச் சாதகமாக மாற்றிவிட முடியுமென்றும் நம்புவித்துள்ளது. ஆயின் இராணுவம் சமாதானத்தில் விட்டுக்கொடுக்க வேண்டிய இராணுவத் தேவை முன்னரைப் போல் இப்போது அதற்கில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதன் நெருக்கடிகளைத் தீர்க்க சந்திரிகாவிற்கு ஒரு களம் வேண்டியிருக்கிறது. கூட்டுச்சேர்ந்த அரசியற் கட்சிகளின் ஆதிக்கம், சிறுபான்மை அரசு, கட்சிக்குள் தனது குடும்பச் செல்வாக்குச் சிதைந்து போகும் வண்ணம் மகிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு, கிடைக்காத நிதியுதவி, முடியப்போகும் ஜனாதிபதி பதவிக்காலம் இவை யெல்லாம் சந்திரிகாவை வெருட்சியுற வைப்பன.

இவற்றைச் சமாளிக்கவல்ல இறுதித் தெரிவாக யுத்தத்தின் வெற்றியும், யுத்தச் சூழலும் ஒரு அருமருந்து என்றே சந்திரிகா எண்ணிவருகிறார். அதற்கு மேற்சொன்ன இராணுவக் காரணங்களால் கிழக்கில் ஒரு உடனடி வெற்றி சாத்தியமெனின் அதை ஒரு கொடையாகவே சந்திரிகா கற்பனை செய்கிறார். இதற்கு கருணா ஒரு மந்திரக்கோல் போல சந்திரிகாவிற்குத் தோன்றுகிறார். இதுவே கருணா விவகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு இராணுவ புலனாய்வுத்துறை தீவிரமாக இயங்கி வருவதன் சூத்திரமாகும்.

29.06.2004 மட்டக்களப்பு தும்பங்கேணி, கல்லாறு பகுதிகளில் புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஏழு பேர் மக்கள் முன்னிலையில் இராணுவ புலனாய்வுத்துறை தம்மை அனுப்பியது பற்றியும் தமக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு பணம் வைப்பிலிடப்பட்டது பற்றியும் வாக்குமூலம் அளித்தனர். அவர்கள் வைத்திருந்த இலக்கம் அழிக்கப்பட்ட டொக்காரா வகை கைத்துப்பாக்கி இலங்கை இராணுவத்தால் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு இராணுவ புலனாய்வுத் துறையினரின் பாவனைக்கு மட்டும் வழங்கப்பட்டதாகும்.

பொலனறுவை ஹிங்குராகொட புபுல பௌத்த விகாரையில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்களை (கருணா குழு) விடுவிக்க இராணுவ புலனாய்வுத்துறை எடுத்த முயற்சி பற்றி பொலிஸ்தரப்பு கூறியமை பத்திரிகைகளில் வெளியானது.

மேலும் சிறையிலுள்ள சச்சிமாஸ்ரர் (கருணாவின் தற்போதைய பேச்சாளர்) தனது ஊடகத் தொடர்பிற்காக கையடக்கத் தொலைபேசி வழங்குவதற்கான இராணுவ புலனாய்வுத்துறையின் தலையீடும் வெளிச்சத்துக்கு வந்தன.

கடந்த 06.07.2004 அன்று கரடியனாறு பகுதியில் புலிகளால் கைதுசெய்யப்பட்டவர்கள் ஐவரும், மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மகளிர் முகாம், நிர்வாகச் செயலகம் என்பன மீது தாக்குதல்களைத் தாமே நிகழ்த்தியதாகவும் கருணா - இராணுவ புலனாய்வுத்துறை தொடர்பை மக்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டனர்.

மேலும் இந்து கலாச்சார அமைச்சின்கீழ் கொழும்பில் கருணா விவகாரத்தால் வெளியேறியவர்களுக்கு தொழிற்பயிற்சி என்ற பெயரில் மாதம் 8500/= சம்பளத்தில் ஒரு படையைத் திரட்ட அரசு முயற்சியினை எடுத்துள்ளது.

ஆக, புலிகள்மீது ஒருதலையான நிழல் யுத்தம் தொடுக்கப்பட்டாயிற்று. இராஜதந்திர அணுகுமுறைகளால் இதைத் தடுக்க இயலாது போகும்போது, புலிகள் குறைந்தபட்சம் ஒரு தற்காப்பு நடவடிக்கையிலேனும் இறங்க நேரிடும். போரில் தற்காப்பு யுத்தவடிவம் என்பது ஆயுதத்துடன் ஆயத்தமாக இருப்பதென்று பொருளாகாது. இராணுவ அர்த்தத்தில் தந்திரோபாய வலிந்த தாக்குதலும் தற்காப்பின் சிறந்த வடிவம்தான். எனவே நிழல் யுத்தம் ஒன்று வெடிப்பது சாத்தியமே. அவ்வாறு நிகழின் சமாதானத்தின் பாதையை யாரால்தான் கண்டறிய முடியும்.

இந்த யதார்த்தப் பின்னணி, ஒன்று அனுசரணைத் தரப்பையும், அனுசரணையினை ஆதரித்துவரும் வல்லாண்மை பொருந்திய அரசுகளையும் எச்சரிக்கிறது: விளைதிறனுள்ள ஒரு இராஜதந்திர அழுத்தத்தால் இதனைத்தடுக்க அவர்கள் செயற்படவேண்டும் என்று.

இரண்டு, கிழக்குவாழ் தமிழ்மக்களை எச்சரிக்கிறது. நிலைமையின் சூக்குமத்தைப் புரிந்து கொண்டு விழிப்படைந்து வலிமை பொருந்திய ஒரு கிழக்கைப் பேணுவதே யுத்த வியூகத்தைத் தடுத்து நிறுத்தும் என்று.

கிழக்குத் தளபதிகளான குமரப்பா, புலேந்திரனை பலிகொள்ள சிங்கள அரசு எண்ணியபோது புலிகளின் மரபுப்படி அவர்கள் தற்கொலை செய்ததையடுத்து எந்த ஆதார பலத்தோடு புலிகள் யுத்தத்தில் குதித்தனரோ அதே விடுவிக்கப்படாத புதிரான யுத்த பலத்தோடு புலிகள் என்றும் இருப்பர் சவால்களைச் சந்திக்கத் தயாராக. ●

**பிரபத்திரன்**

*(04ஆம் பக்கத் தொடர்ச்சி)*

குலைந்துகொண்டிருந்த வேளையில் நாட்டின் கனியவளங்கள் உருவாக்கிய இலாபங்களைச் சுரண்டி மொபுட்டுவும் அவரது வட்டத்தினரும் செல்வந்தர்களாயினர்.

1977 மார்ச், 08ஆம் திகதி, முன்னாள் கட்டாங்கா பிரிவினைவாதிகள் தாங்கள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த அங்கோலாவில் இருந்து ஃஷாபா மீது படையெடுத்தனர். மொரோக்கோவில் இருந்து பெற்ற துருப்புகளையும் அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட தனது மேற்குலக நேசநாடுகளின் படைய உதவிகளையும் பெற்று அந்தப் புரட்சியை மொபுட்டு ஒடுக்கினார். அடுத்த வருடம் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பை முறியடிக்க பிரெஞ்சு மற்றும் பெல்ஜிய துருப்புகள் உதவின. மொபுட்டுவின் ஒற்றைக்கட்சி ஆட்சிக்கு எதிரானவர்கள் இணைந்து ஜனநாயக, சமூக முன்னேற்றத்துக்கான இணையம் (UDPS) என்ற கட்சியை உருவாக்கினார்கள். 1980கள் முழுவதும் அந்தக் கட்சியின் தலைவர்கள் தொல்லைப்படுத்தப்பட்டனர் அல்லது சிறையிடப்பட்டனர். எதிர்க்கட்சிகளின் அழுத்தங்களுக்கு உட்பட்ட மொபுட்டு 1990ஆம் ஆண்டு ஏப்ரல், 24ஆம் திகதி பல்கட்சி ஜனநாயக முறையை உருவாக்குவதாக அறிவித்தார். புதிய அரசியலமைப்பை வரைவதற்கும் தேர்தலை நடத்தவுமென உருவாக்கப்பட்ட பல்கட்சி மாநாடு ஒன்று ஒருவாரம் செயற்பட்ட நிலையில் 1991 ஓகஸ்ற், 15ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டது. மொபுட்டு ஆட்சியில் நிகழ்ந்த ஊழல், மனித உரிமை மீறல் முதலியவற்றைக் காரணம் காட்டி, 1990 ஒக்ரோபரில், அமெரிக்க மக்களவை, அதனது நேரடிப் படைய மற்றும் பொருண்மிய உதவிகளை நிறுத்திவிட்டது. 1965இல் இருந்து நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை மொபுட்டு அரசுக்கு முண்டுகொடுக்க அமெரிக்கா வாரி இறைத்திருந்தது.

1991 செப்ரெம்பர், 29ஆம் திகதி UDPS தலைவரான எற்றியேன் ஸிஸெகெடி (ETIENNE TSHISEKEDI)ஐ பிரதமராகக்கொண்டு கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க மொபுட்டு இணங்கினார். இந்த ஏற்பாடும் அதிககாலம் நீடிக்கவில்லை. 1992 ஒக்ரோபர், 20ஆம் திகதி ஸிஸெகெடி பதவி நீக்கப்பட்டார். தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருந்த குழப்பங்களுக்கு மத்தியில் பல்கட்சி மகாநாடு மீண்டும் செயற்படத் தொடங்கியது. இந்த மகாநாடானது ஸிஸெகெடியை பிரதமாராகக்கொண்ட இடைமாறு அரசு ஒன்றை பரிந்துரைத்தது. அதே வருடம் ஓகஸ்ற், 15ஆம் திகதி பல்கட்சி மகாநாடு, புதிய அரசியலமைப்பை அங்கீகரித்தது. இதன்படி இரு அவைகள் கொண்ட நாடாளுமன்றம் அமையவிருந்தது. ஜனாதிபதி சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்படுவதோடு சம்பிரதாயபூர்வமான பதவியையே வகிப்பார் என்றும் உடன்பாடு எட்டப்பட்டது. 1994வரை ஸிஸெகெடி பிரதமராகப் பதவி வகித்தார். மொபுட்டுக்கும் அரசியலமைப்பு சபைக்குமிடையேயான இழுபறிகளால் தேர்தல்கள் காலம் தாழ்த்திப் போயின. 1996இன் பிற்கூறுகளில் லோறன்ஸ் கபீலா (LAWRENCE KABILA) அரசுக்கு எதிரான வலிந்த தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினார். அதன் காரணமாக மொபுட்டு ஸெஸே ஸேக்கோ 1997 மேயில் பதவியிலிருந்து வெளியேற நேர்ந்தது.

## லோறன்ஸ் கபீலா

**பெல்ஜிய கொங்கோவின் தென்புற தடாங்கா மாகாணத்தில், 1939இல் பிறந்த லூபா இனத்தவரான லோறன்ஸ் கபீலா பிரான்ஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் தத்துவத் துறையில் கல்வி பயின்றதோடு தான்ஸானியாவின் டார்–எல்–ஸலாம் பல்கலைக் கழகத்திலும் கல்விபயின்றார். அங்கே பின்னர் தான்ஸான்ய ஜனாதிபதியாக இருந்த யுவேரி முஸெவெனியைச் சந்தித்தார். 1960இல் கொங்கோ சுதந்திரம் பெற்றபோது, பட்றிஸ் லுமும்பாவின் கூட்டணியில் இருந்த அரசியல் கட்சியொன்றின்**



**இளைஞர் பிரிவுத் தலைவராக கபீலா இருந்தார். 1964ஆம் ஆண்டில் நாட்டின் பல பகுதிகளிலும் லுமும்பா ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட மூன்று புரட்சிகளில் ஒன்றுக்கு கபீலா தலைமை தாங்கினார். ஆஜென்ரீனாவில் பிறந்த புரட்சிவாதியான சேகுவேரா, கபீலாவின் புரட்சிக்கு உதவினாலும் கபீலாவின் படைய தலைமைத்துவத் திறன் குறித்து ஏமாற்றமடைந்தார். கபீலாவின் புரட்சி மொபுட்டுவால் அடக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டில் புரட்சிகர மக்கள் கட்சியை (PRP) நிறுவிய கபீலா, தென் கிவூவில் மாக்ஸீய மினிதேசம் ஒன்றை உருவாக்கினார். அடுத்த இரு தசாப்தங்களுக்கு கபிலாவும், PRP யும் தலைமறைவு வாழ்க்கையையே மேற்கொண்டனர். கிழக்கு ஸெயாரில் அகழப்பட்ட தங்கத்தை விற்கும் வர்த்தகத்தில் அடுத்த ஒரு தசாப்தத்தை கபீலா செலவிட்டார். 1996இல் தென் கிவூவில் டுட்ஸி இனத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட புரட்சிக்குத் தலைமை தாங்கவென தலைமறைவு வாழ்க்கையில் இருந்து வெளிப்பட்டார். முஸெவெனி அரசினதும் கபீலாவின் இன்னொரு நண்பரான மேஜர் ஜெனரல் போள் சாகமே தலைமையிலான றுவாண்டா இராணுவத்தினதும் ஆதரவுடன் டுட்ஸிக்களை மொபுட்டு எதிர்ப்பு கெரில்லாக்களுடன் ஒன்றிணைத்து முழு அளவிலான புரட்சியில் ஈடுபடுத்தினார். பல தசாப்தங்களாக தீவிர மாக்ஸியவாதியாக தன்னைக் காட்டிய கபீலா, இப்போது அரசியல் பன்மைத்துவம் மற்றும் சுதந்திர சந்தைப் பொருண்மியம் பற்றி பேசத்தொடங்கினார். நாட்டின் கனிய வளங்களை வெளிநாட்டு அகழ்வு நிறுவனங்களுக்குத் திறந்துவிட்டார். கூட்டுப் பண்ணைகள் உள்ளிட்ட பெரிய அளவிலான அரசுடைமைத் திட்டங்களை தான் விரும்புவதாக அமெரிக்க இராசதந்திரிகளுக்கு திரும்பத் திரும்ப கூறினார். 1997 மே, 17ஆம் திகதி, நாட்டின் தலைவராகத் தன்னை அறிவித்துக் கொண்டார்.**

நாட்டின் பெயரை கொங்கோ சனநாயக குடியரசு (DEMOCRATIC REPUBLIC OF CONGO) என்று மாற்றினார். மொபுட்டு பதவி கவிழ்க்கப்பட்டாலும் உள்நாட்டுப் போர்கள் தொடர்ந்து கொண்டிருந்தன.

மேற்குலக ஆதரவில் ஆட்சிசெய்த மொபுட்டுவுக்கு எதிராக 7மாதப் போர் ஒன்றை நடத்திய றுவாண்டா, உகண்டா நாடுகளின் ஆதரவில் கபீலா ஜனாதிபதியானார். ஆனால் றுவாண்டாக்காரர்கள் தொடர்ந்தும் கபீலாவை கட்டுப்படுத்த முயன்றார்கள். அவர் யாரை சந்திக்கலாம் என்று முடிவுசெய்யும் அளவுக்கு அதிகாரம்வாய்ந்த தனிச் செயலர் ஒருவரை வலிந்து அவர்மீது திணித்தார்கள். இது 1998இல் தாங்கமுடியாத அளவுக்குச் சென்றபோது தன் தனிச் செயலரையும் ஏனைய வெளிநாட்டு உதவியாளர்களையும் கபீலா நாட்டைவிட்டு வெளியேற்றினார்.

இதனைப் பொறுக்கமுடியாத றுவாண்டாவும் உகண்டாவும் ஜனநாயக கொங்கோ இயக்கம் (RCD) என்ற பெயரில் போட்டி இயக்கத்தை அடோல்ப் ஒணுசும்பா என்பவரின் தலைமையில் உருவாக்கி கபீலாவுக்கு எதிராக ஏவிவிட்டன.

2001ஆம் ஆண்டில், லோரன்ஸ் கபீலா அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட அவரது மகனான ஜோசப் கபீலா பதவிக்கு வந்து அதிகாரப் பரவலாக்கம் கொண்ட அரசொன்றை அமைத்துக்கொண்டார்.

ஆனால் மைய அதிகாரபீடம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகள், போராளிக் குழுக்களிடையேயான அதிகாரப் போட்டிகளால் தடைப்பட்டு வருகின்றன.

2004, மார்ச் மாதத்தில் துப்பாக்கிதாரிகள் சிலர் இரண்டு தொலைக்காட்சி நிலையங்களையும் 4 படைய தளங்களையும் தாக்கினர். கடந்த 5 வருடங்களில் முதலாவதாக நிகழ்ந்த வன்செயலாக இது இருந்தது.

### கொங்கோவின் சில புவியியல் தரவுகள்

| | | |
|---|---|---|
| *அமைவிடம்* | : | *மத்திய ஆபிரிக்கா* |
| *பரப்பளவு* | : | *2, 345, 410* |
| *தலைநகரம்* | : | *கின்ஸானா* |
| *சனத்தொகை* | : | *51, 964, 999* |
| *தேசிய இனம்* | : | *கொங்கோலீஸ்* |
| *அரசுமொழி* | : | *பிரெஞ்சு* |
| *சமயங்கள்* | : | *றோ.க 50%, புரட்டஸ்தாந் 20%, கிம்பாஸ்குவிஸ்ற் 10%, முஸ்லீம் 10%, ஆபிரிக்கன் 10%* |
| *பிரதான ஏற்றுமதிகள்* | : | *செம்பு, கோபோல்ற், வைரம், கோப்பி, மசகு எண்ணெய்* |

2004 யூன், 11ஆம் திகதி வெள்ளியன்று ஜோசப் கபீலாவின் தனிப்பட்ட காவலர் படையைச் சேர்ந்த மேஜர் எரிக் லெங்கே புரட்சியொன்றை மேற்கொண்டு, சிலமணி நேரத்துக்கு அரசு வானொலியைக் கைப்பற்றி, நாட்டின் கட்டுப்பாட்டைத் தானே கொண்டிருப்பதாகத் தெரிவித்தபின் தலைநகர் கின்ஸாபொவை விட்டுத் தப்பியோடி பாஸ்கொங்கோவின் அடர்ந்த காடொன்றுக்குள் மறைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

5 வருட உள்நாட்டுப்போரின் முடிவில் உருவாக்கப்பட்ட இடைமாறு காலப்பகுதியின் முடிவில் அடுத்த வருடம் நடத்த நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தேர்தலை பின்போடுவதற்கான உத்தியாக இப்புரட்சி 'நிகழ்த்தப்பட்டு' இருப்பதாக பொதுவான கருத்து நிலவுகிறது.

இந்த முரண்பாடுகளிலே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களாக பொதுமக்களே இருக்கிறார்கள். பல பத்தாயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். பல்வேறு இழப்புகளை சந்தித்திருக்கிறார்கள். தங்கள் தங்கள் நாட்டு கிளர்ச்சிவாதிகளுக்கு கொங்கோ அடைக்கலம் கொடுப்பதாக அண்டையில் உள்ள உகண்டா, றுவாண்டா ஆகிய நாடுகள் குற்றம்சாட்டும் அதேவேளை, தங்கள் நாட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக படைகளை அனுப்பியிருப்பதாக உகண்டா, றுவாண்டா மீது கொங்கோ எதிர்க்குற்றம் சாட்டுகிறது.

சமாதானத் தீர்வுத்திட்ட அடிப்படையில் கேணல் ஜீலிஸ் முரேபுசியின் முன்னாள் தீவிரவாத படையினரை இராணுவத்துள் சேர்த்தபொழுது மோதல்கள் ஏற்பட்டு சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 2004 யூன் மாதம், 10ஆம் திகதியன்று கேணல் முரெபுசியின் படைகள் மேற்கொண்ட புரட்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னதாக முரேபுசியின் படைகள் 3 மணித்தியாலயங்களுக்கு மின்சாரத்தை துண்டித்திருந்தன. அவர்கள் கைப்பற்றியிருந்த ஒளிபரப்பு நிலையம் கபீலாவின் படைகளால் மீளக் கைப்பற்றப்பட்டது. கிழக்குப்புற நகரான புக்காவுகையிலிருந்து கேணல் முரேபுசியின் படைகள் வெளியேறியதையடுத்து அந் நகரம் கபீலாவின் படைகளால் மோதலின்றி கைப்பற்றப்பட்டது.

கொங்கோவின் கனியவளம் கொண்ட கிழக்குப் பகுதியில் நிகழ்ந்த மோதல்களினதும், இடைமாறு அரசின் நிலைபெற்றுத் தன்மையினதும் நிச்சயமற்ற தன்மைகளின் பின்னணியில் வெள்ளியன்று நடந்த நிகழ்வுகள், நாடு தொடர்பாக எழுந்துள்ள கவலைகளை அதிகரித்து விடுபவையாகவே இருக்கின்றன.

கொங்கோ நாட்டுக் கவிஞரான ஜீன் பப்ரிஸ்ற்ரே றாற்ரி எழுதியதுபோல்:

***"பூமியின் வயிற்றுக்குள்***
***பூட்டப்பட்டிருந்த***
***எண்ணற்ற ஈசல்களை***
***புயல் விடுவித்துவிட்டது.***
***சூரியச் சிகரத்தை நோக்கி***
***ஏறும் காலம் வந்துவிட்டதென***
***அவை நினைத்தன.***
***அவற்றினுடைய கனவுகள்***
***வானம்பாடிகளின் அலகுகளில்***
***அணைந்து போயின...."***

- அமைதிக் காலத்தின் அணைப்புக்காக கொங்கோ மக்கள் தொடர்ந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள் -

●

## ஊர்தந்த உயிர்ச்சத்து

ஆ.ந. பொங்கோ



**அவன் களநிலைகளுக்குச் சென்றால், நண்பர்கள் பகிடியாக கத்தரிக்காய் பொறுப்பாளர் எனச்சொல்லி வரவேற்பார்கள். வேதனை கலந்த புன்னகையை உதிர்ப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை அவனுக்கு.**

**அவர்களும்தான் என்ன செய்வார்கள். எத்தனை நாட்களுக்குத்தான் கத்தரிக்காயைச் சாப்பிடுவது. நாளுக்கு ஒருவேளையென்றால் கூட பரவாயில்லை. மூன்றுவேளை உணவுடனும் கத்தரிக்காய் உறவாடியது.**

**ஆனால் அந்த நாட்களில் உணவுக்கு கத்தரிக்காயும் கிடைக்காமலிருந்தால்.... அவனால் அதற்குமேல் சிந்திக்க முடியவில்லை.**

**ஓயாத அலை மூன்றினால் அந்த ஊரின் பெரும்பகுதி இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டிருந்தது. இடம்பெயர்ந்திருந்த ஊரவர்கள் மீண்டும் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அந்த ஊர் விடுவிக்கப்பட்டதில் அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.**

**அந்த ஊர் பொன் விளையும் பூமி. போராளிக்ளுக்குத் தேவையான மரக்கறிகளை அள்ளித் தரக்கூடிய பூமி.**

**விடுவிக்கப்பட்ட அந்த ஊரில் இராணுவ ஆக்கிரமிப்பின் தாண்டவத் தடயங்கள் பரந்துகிடந்தன. காடுகளும், களனிகளும் சேர்ந்த ஊர் காடாகவே மாறிப்போயிருந்தது. மிதிவெடிகள் பெய்த மழைக்குப்பின் கண்சிமிட்டின. கண்ணுக்குத் தெரியாதவை ஊரவர் சிலரின் கால்களின் கதை முடித்தது. ஆனால் ஊரவர்கள் சோர்ந்து போகவில்லை. காடாகியிருந்த களனிகள் மீண்டும் களனிகளாயின. செம்பாட்டு மண்ணில் பயிர்கள் செழித்தன.**

**பொருளாதாரத் தடையால் பயிர்களுக்குத் தேவையான பசளை வகைகளோ கிருமி நாசினிகளோ கிடைக்கவில்லை. நீரிறைக்கும் இயந்திரத்துக்குத் தேவையான மண்ணெய்யும் கிடைக்கவில்லை. ஆனால் ஊரவர்களின் கடுமையான உழைப்பினால் உயிர்ச்சத்து உற்பத்தியாயிற்று.**



**நாளாந்தம் போராளிகளுக்குத் தேவையான மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கு போதுமான பணம் இருக்கவில்லை. ஊரவர்கள் கடனுக்கு மரக்கறிகளைத் தருவதற்கு முன்வந்தார்கள்.**

**இப்போது கத்திரிக்காய் மட்டுமல்ல ஏனைய மரக்கறிகளும் போராளிகளின் உயிர்ச்சத்தாகியது. சில மைல்களுக்கப்பாலிருந்து, எதிரியின் எறிகணைகள் ஊரைக் கிலிகொள்ளவைக்க முயலும். ஆனால் ஊரவர்கள் இடம்பெயரவில்லை.**

**உயிர்ச்சத்தை உற்பத்தி செய்வதில் உறுதியாயிருந்தார்கள். உழைப்பிற்கு அப்பால் உன்னதமான பணியின் தேவையை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.**

**வாரத்திற்கொருமுறை ஊரவர்களின் கடன்கள் தீர்க்கப்பட்டால்தான் அவர்களால் உற்பத்தியை சுமூகமாக தொடரமுடியும். வாரத்திற்கொருமுறை கூட கடனை தீர்க்கமுடியாத நெருக்கடி வந்தேறியது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.**

**''கடனைப்பற்றிப் பிறகு பாப்பம், மரக்கறியைக் கொண்டே பிள்ளைகளுக்கு சமைச்சி குடுங்கோ'' ஊர்தந்த உயிர்ச்சத்தால் போராளிகள் உத்வேகம் பெற்றார்கள். இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்த ஏனைய ஊர்களும் மீளத்தொடங்கின.**

# பூக்களுள் எழுந்த புயல்



மலைமகள்

அது வலிகாமத்தின் கரையோரமொன்றுக்கு அருகிருக்கும் கிராமம். மீன்பிடி, தோட்டம் என்று பல வேலைகள் அவ்வூர் மக்களுக்கு. செய்தி கேட்கின்ற, செய்தித்தாள் வாசிக்கின்ற, ஆகக் குறைந்தது 'இன்றைக்கென்ன செய்தி' என்று கேட்டாவது அறிந்து கொள்கின்ற 'விடயம் விளங்கிய' சனம் அவ்வூர்ச் சனம்.

அவள் அந்த மண்ணின் மகள். கூர்ப்பான அம்மக்களின் மகள். அவளும் விடயம் விளங்கியவள்தான். அவளுக்கு எல்லாமே மிகச் சரியாக விளங்கியதால், தனது பாதையை நேரியதாய் தெரிவு செய்தாள்.

சுதந்திரப் பறவைகள் மகளிர் அமைப்பு அவ்வூரில் அமைத்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதல்வி அவளே. மெழுகுதிரி, ஊதுபத்தி, கார வழலை உற்பத்திகளிலும் சுதந்திரப் பறவைகள் இதழ் விற்பனையிலும் அவள் பங்கு பெரிது. எம்மை ஆள வந்தவர்களை வீழவைப்பதற்காக தான் ஆயுதம் ஏந்தப்போகின்ற அந்த நாளை அவள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். இப்போது ஆயுதம் ஏந்தாவிட்டாலும், அவள் ஒரு புலியே.

1986 நடுப்பகுதியில் தமது ஒருவருட படையியற் பயிற்சியை நிறைவுசெய்து, நாடு திரும்பி களநடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது அணியினர் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளத் தொடங்க, இவளையொத்த ஆயிரத்துக்கும் அதிகமான சுதந்திரப் பறவைகளின் மனங்களில் ஆவல் அலைமோதியது. 'அடுத்தது நாங்கள்தான்'. அவளும் அப்படித்தான் நம்பினாள்.

ஆனால் ......

ஆயிரம்பேரையும் ஒருசேர உள்வாங்கும் பலம் அன்றைய சூழலில் எமது அமைப்புக்கு இருக்கவில்லை. நூறு சுதந்திரப் பறவைகள் மட்டும் புறப்பட்டார்கள் ஏனையவர்களிடம் தமது பணிகளை ஒப்படைத்துவிட்டு.

'நாங்கள் பயிற்சி முடித்துவிட்டு வந்து உங்களை மாற்றிவிடும்வரை வேலை செய்துகொண்டிருங்கள்'.

என்ற கோரிக்கைக்கு தலையசைத்து வழிவிட்டவர்களில் அவளும் ஒருத்தி. இப்போது அவள் பணி பாரியதாகியது. ஆள் எண்ணிக்கைதான் குறைந்ததேதவிர, பணியின் அளவு குறைவடையவில்லை. கடல் கடந்து ஒரு படை வந்து எம்மண்ணில் கால்பதித்த நாட்களில் அது இன்னமும் கடினமாகியது.

விடுதலைப்புலிகளை அழிக்கவென வந்தவர்கள், விடுதலைப்புலிகளின் பின்னால் திரண்டிருந்த மாபெரும் மக்கள் சக்தியைப் பார்த்து மலைத்து, அதை அழிக்க முனைந்தபோது தலைமறைவாகியவர்களில் அவளும் ஒருத்தி. வந்த படையினர் அவளின் பெயரை விசாரித்துத் தேடிக்கொண்டிருக்கையில், அயலூரின் வீடொன்றில் அமைதி முகத்தினளாய் அவளிருந்தாள். நெருப்பு நெஞ்சிலிருந்தது.

கடல் கடந்துவந்த படைகள் தம் அமைதி முகத்திரை கிழித்து, புழு நெளிகின்ற புண்கள் நிறைந்த சொந்த உருவை வெளிக்காட்டி, பெண், ஆண் என்ற பேதம் பாராது எம்மீது தம் நிணத்தை சிந்திச் சென்றபோது, அவளே நெருப்பானாள்.

அந்த நெருப்பு ஒருபெரும் தொலைவுக்கப்பால், விளாசி ஒருநாள் எரிந்தது. காற்றோடு கலந்தது.

அது 1998 நடுப்பகுதி. கிளிநொச்சியின் நகரப்பகுதி இராணுவத்திடமிருந்தது. டிப்போச் சந்தியடி எங்களிடமிருந்தது. தற்போது கிளிநோச்சி மாவட்ட தமிழீழ காவற்பணிமனை அமைந்திருக்கும் இடத்துக்கு அருகேயுள்ள தேவாலயம், கருணா நிலையம் எல்லாம் எமதும் சிறீலங்காப் படையினரதும் காவல் நிலைகளுக்கிடையிலான சூனியப் பகுதிக்குள் அமைந்திருந்தன.

நேர்வீதி. எமது நடமாட்டத்தைப் படையினரும் அவர்களை நாமும் இலகுவாக அவதானித்து, பதுங்கிச் சூடுகளை தாராளமாக மேற்கொள்ள வசதியான நேர்வீதி. இரு பகுதியுமே தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மறைப்புப் படங்குகளை வீதிக்குக்குறுக்கே கட்டித் தொங்கவிடுவோம். ஒருவரின் படங்கை மற்றவர் எரித்துக்கொண்டுமிருந்தோம். கதிரவன் உதிப்பதும் மறைவதும் போல, படங்கு கட்டுவதும் எரிப்பதும்கூட மாற்றமின்றி நடந்துகொண்டிருந்தது.

தேவாலயத்தருகே எம்மவர்கள் இரவிரவாக ஏறிக் கட்டுகின்ற படங்கு, படையினரின் அடியில் விடிவதற்கிடையிலேயே கிழிந்து விழுந்துவிடும். சில நாட்களாக இது தொடர்ந்தது எங்களுக்குப் பெரிய சவாலாகப் போய்விட்டது. படங்கு எரிந்தால், அறுந்து விழுந்தால் நடமாட முடியாது. காப்பரண்களுள்ளேயே சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் முடங்கவேண்டியதுதான்.

அங்கு நிலைகொண்டிருந்த லெப்.கேணல் செல்வியின் கொம்பனிக்கு வேவு பார்ப்பது லெப். தாமராவின் அணி. கப்டன் புலிமகள் அவர்களில் ஒருவர். தாமராவுடன் நெடுஞ்சாலை வேவுக்குப்

> **தேவாலயத்தினருகே எம்மவர்கள் இரவிரவாக ஏறிக் கட்டுகின்ற படங்கு, படையினரின் அடியில் விடிவதற்கிடையிலேயே கிழிந்து விழுந்துவிடும். சில நாட்களாக இது தொடர்ந்தது எங்களுக்குப் பெரிய சவாலாகப் போய்விட்டது. படங்கு எரிந்தால், அறுந்து விழுந்தால் நடமாடமுடியாது. காப்பரண்களுக்குள்ளேயே சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் முடங்கவேண்டியதுதான்.**

பெரும்பாலும் இணைந்து போவது புலிமகள்தான்.

'படங்கை நான் கட்டிறன்' புறப்பட்டார் புலிமகள்.

வெட்டப்பட்ட உரப்பைகளை இணைத்துத் தைத்து படங்கு தயாரிக்கப்பட்டது. இரவானதும் படங்கை இழுத்துக்கொண்டு தேவாலயத்தடிக்குப் போனார் புலிமகள்.

பகலில் படங்கு எரிந்துபோனதால், இரவு கட்டாயம் நாம் வருவோம் என்று எதிர்பார்த்திருந்த படையினர், இருள் சூழ்ந்ததுமே தேவாலயச் சூழலை நோக்கி எறிகணைகளை விசிறத் தொடங்கினர்.



புலிமகள் படங்கோடு பதுங்கிப் பதுங்கி போனார்.

அது நேர்வீதி என்பதால், இரவில் ஒருவர் நின்றால்கூட வானவிளிம்பில் நிழலுருவமாகத் தெரியும். பகலைப் போலவே இரவும் ஆபத்தானதுதான். அச்சத்தைத் தரவல்ல, ஆபத்து நிறைந்த அந்த இரவில், கல்வாரிமலை நாயகனின் ...... மோன தவத்தைக் குழப்பியவாறு படீர் படீர் என எறிகணைகள் வெடித்து முழங்க, மரத்தில் ஏறிய புலிமகள் படங்கை இழுத்து வரி வரி என்று வரிந்து கட்டிவிட்டு, வீதியின் மறுபுறமுள்ள மரத்திலும் இறுக்கு இறுக்கு என்று இறுக்கிக் கட்டிவிட்டு, காயங்கள் ஏதுமின்றி இரவு 9.00 மணிக்கே எமது முன்னரங்குக்கு திரும்பிவிட்டார்.

காலையில் காற்றிலே படங்கு அசைந்தாடிக்கொண்டிருப்பதை நாங்களும் ஆச்சரியமாகத்தான் பார்த்தோம். நேற்றும் அதற்கு முதல் நாளும் இவ்வளவு நேரம்வரை படங்கு தாக்குப் பிடித்திருக்கவில்லை. அதிகாலையிலேயே அறுந்து விழுந்து எங்களுடைய எல்லா வேலைகளையும் பாழாக்கிவிட்டிருந்தது. இன்று விடிந்த பின்பும் காற்றிலே ஆடிக் கொண்டிருந்தது.

படையினர் அடியை பலமாகத் தொடங்கினர். படங்கிலே ஓட்டைகள் விழுந்தனவேயன்றி, அறுந்து விழவில்லை. அடியோ விடாமல் தொடர்.....ந்.....தது.

கடைசியில் படங்கு அறுந்து விழுந்தபோது மதியம் 12.00மணி கடந்துவிட்டிருந்தது. அதற்குள் நாங்கள் எவ்வளவோ வேலைகளைச் செய்து முடித்துவிட்டிருந்தோம்.

அன்று புலிமகள் வெற்றிமகளானாள். சில காலங்களின் பின் அவள் கடல் மகளானாள். பின்னொரு நாளில் கரும்புலியானவள்...... அன்று ..... கடலிலே பகைக் கலமதை, பகைவரை வென்ற மகளும் ஆனாள்.

தென்தமிழீழத்தில் தமது படைய தொடக்கப் பயிற்சியை முடித்துக்கொண்டு, காடுகள், மலைகள், ஆறுகளையெல்லாம் பொடி நடையாகக் கடந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துசேர்ந்த அந்த அணியில் அவளும் வந்திருந்தாள். அப்போதே அவளை அவர்கள் 'வண்டு' என்றுதான் கூப்பிட்டார்கள். நாமும் அப்படியே கூப்பிடத் தொடங்கினோம்.

கட்டையான, உருளையான அவளின் தோற்றம் ஏறக்குறைய ஒரு வண்டை ஒத்திருந்ததுதான். அவள் கைகளை விசுக்கியவாறு நடக்கும்போது வண்டு உருளுவது போன்ற தோற்றமே பலருக்குத் தெரியும். வரும்போதே S84 வகை சுடுகலனுக்கு T56-2 வகை சுடுகலனின் அடிப்பாகத்தைப் பொருத்திச் செய்யப்பட்ட உயரம்குறைந்த சுடுகலனை அவள் வைத்திருந்தாள். அவளுடைய உயரத்துக்கு அதுவே சரியாக இருந்தது. நீண்ட நாட்கள்வரை தனது சுடுகலனை அவள் கைமாற விடவில்லை.

வந்த சில நாட்களிலேயே மகளிர் படையணியினரின் இரண்டாவது வேவு அணியுடன் பயிற்சியில் ஈடுபட்ட வண்டு, 'தவளை நடவடிக்கை' முடிந்தபின் பூநகரிப் பகைத்தளம் மீதான வேவு நடவடிக்கையில் பங்கேற்றாள். மகளிர் படையணியிலும், பின்னர் அது 2ம் லெப்.மாலதி படையணியாகத் தோற்றம் பெற்றபோதும் அவள் ஒரு வேவுப் போராளியாகவே களங்கள் எங்கும் உலாவினாள்.

இப்போது சிறீலங்காப் படையினரின் சூரியக்கதிர்-1 படை நடவடிக்கையால் வலிகாம மக்கள் இடம்பெயர்ந்துவிட்டிருந்தனர். இரண்டாவது படை நடவடிக்கை இன்னமும் ஆரம்பமாகவில்லை. வேவு அணிகள் யாவும் தென்மராட்சியையும் வலிகாமத்தையும், வடமராட்சியையும் வலிகாமத்தையும் பிரிக்கின்ற வெளிகளில் உலாவிக்கொண்டிருந்தன.

லெப்.கேணல் மைதிலியின் நேரடி வழிநடத்தலில் இப்போது அவள் ஒரு தேர்ந்த வேவுப்புலி. படையினருக்கு கண்ணிவெடி வைக்கும் திட்டமொன்றை எமது கண்ணிவெடி அணியினர் தீட்ட, வண்டு என்று எங்களால் அழைக்கப்படும் சிறீவாணி, அவர்களுக்கு வேவு பார்க்கப் புறப்பட்டாள்.

பரந்த வெளியிலே மேற்கொள்ளப்பட்ட கடினமான வேவு நடவடிக்கையின் முடிவில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கு வல்லைப் பாலத்தடி. மிகச் சவாலான இலக்கு. சவாலை எதிர்கொள்ள அவர்கள் தயாராகினர்.

நிலவற்ற இரவு நாட்களில்கூட நிழலுருவாக அவர்களைப் படையினர் இனங்காணத்தக்க பகுதியில் சிறீவாணியும் ஏனைய வேவு வீராங்கனைகளும் காப்பு வழங்க, எமது கண்ணிவெடி அணியினர் துரித கதியில் பணிமுடிக்க, இருளோடு இருளாக எல்லோரும் நழுவி வந்துவிட்டனர்.

இரண்டு நாட்களின் பின், 1996 சித்திரை புதுவருடப் பிறப்பன்று இவர்களின் எதிர்பார்ப்பை வீணாக்காமல், உலாவந்த இராணுவக் காவலுலா அணியில் மூவர் தூக்கி விசிறப்பட்டு வீழ, எஞ்சிய ஒரு படைவீரன் தவழ்ந்தபடி தப்பி ஓடுவதைத் தொலை நோக்கியால் எம்மவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எப்பக்கத்தில் நின்று பார்த்தாலும் எவ்வளவோ தொலைவுக்கப்பால் வருபவர்களையே இணங்காணத்தக்க அப் பரந்த வெளியில் கிடந்த பாலத்தை புலிகள் நெருங்கி வந்துபோனது படைத்தரப்புக்குப் பலத்த அதிர்ச்சியாய் இருந்தது.

ஆனால் சிறீவாணிக்கோ அது சின்ன விடயம். எப்போதும் சவாலை எதிர் கொள்வது ஒரு விளையாட்டுப்போல. அதனால்தான் அவள் கரும்புலியாகி காற்றோடு கலந்தாளோ?

# நிதியுதவிகள்

## - ஏய்க்கும் சிறிலங்கா ஏமாறும் சர்வதேச சமூகம் -


– சுரேன் –



இலங்கைத்தீவில் தமிழர்களின் இருப்பை இல்லாதொழித்து இலங்கையை ஒரு முழுச் சிங்கள பௌத்த நாடாக மாற்றும் ‘கனவை’ இலக்காகக் கொண்டு கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக சிங்களப் பேரினவாதிகள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சிறிலங்கா பேரினவாதக் கட்சிகளிடையே குடுமிச் சண்டைகளும், குத்துவெட்டுக்களும் காலாகாலமாக நடைபெற்று வருகின்றபோதும் ‘எச் சாத்தானுடன் கூட்டுச் சேர்ந்தாவது’ எத்தகைய வழிமுறையைக் கையாண்டாவது ‘தமிழரை வேரறுக்கும்’ தமது பொதுக் கொள்கையில் அவை ஒத்த நோக்கோடு செயற்பட்டு வருவதை கடந்தகாலப் பதிவுகளும் சமகால நிகழ்வுகளும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி நிற்கின்றன.

எமது தேச விடுதலைப்போரை ‘பயங்கரவாதம்’ என வெளிநாடுகளுக்குக் காட்டி அவர்களிடமிருந்து பல்வேறுபட்ட படைத்துறை உதவிகளை சிறிலங்கா அன்றுமுதல் இன்றுவரை பெற்று வருகிறது. இவ்வகையான உதவிகள் அவற்றின் விளைவுகள் ஒருபுறமிருக்க நாட்டின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்ற பெயர்களில் பெருந்தொகை வெளிநாட்டு நிதியை சிறிலங்கா ஆண்டுதோறும் பெறுகிறது.



இவ்வாறு பெறப்படும் நிதியுதவிகளுக்கு உண்மையில் என்ன நடக்கிறது என்பது பற்றி எவரும் பெரிதாகக் கவனம் செலுத்துவதில்லை. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் இவ்வகை நிதிகளை சிறிலங்கா அரசுகள் பயன்படுத்தும் விதம் பற்றி அதிருப்திகளும் சந்தேகங்களும் இருந்தே வந்துள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்கு என காரணம் காட்டி சர்வதேச சமூகத்திடமிருந்து பெறப்படும் நிதியுதவிகளுக்கு என்ன நடக்கிறது என்பது தொடர்பில் சர்வதேச சமூகத்தை சிறிலங்கா அரசுகள் எந்தளவிற்கு ‘பேய்க்காட்டி’ ஏமாற்றி வருகின்றன என்பதற்கு ஒரு சுவாரசியமான சம்பவத்தை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இஸ்ரேலிய ‘மொசாட்’ அமைப்பின் முன்னாள் உளவாளியான ‘விக்ரர் ஒஸ்ரோவ்கி’ எழுதிய ‘வை வே ஓப் டிசெப்சன்’ (BY WAY OF DECEP TION – Victor ostrovsky) என்ற நூலில் காணப்படும் இலங்கை தொடர்பான பல விடயங்கள் வெளிச்சம்போட்டுக் காட்டப் பட்டுள்ளன.

சிறிலங்கா படைத்துறை அமைப்பில் உள்ள விசேட அதிரடிப்படை (S.T.F - Special Task Force) பற்றி இங்கு அறியாதவர்கள் இருக்கமுடியாது. மட்/அம்பாறை பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட அநேக தமிழினப் படுகொலைகள் மூலம் பரவலாக அறியப்பட்ட இப் படைப்பிரிவு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் ‘பயங்கரவாத முறியடிப்பு’ நடவடிக்கைகளுக்காக என அமைக்கப்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மகன் ரவி ஜெயவர்த்தனவின் கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இருந்த இப் படையினருக்கான பயிற்சிகளும் ஆலோசனைகளும் இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பினரால் இஸ்ரேலில் வைத்து வழங்கப்பட்டன. பின்னான பயிற்சி, ஆலோசனை என்பவற்றிற்கு அப்பால் சென்று சிறிலங்காவிற்கான போர்த் தளபாடங்களை விற்பனை செய்யும் முக்கியமான நாடாக இஸ்ரேல் மாறியது. சிறுரக ஆயுதங்களுக்கான வெடிபொருட்கள், பார்வைச் சாதனங்கள், தொடர்புக் கருவிகள் என்பவற்றைக் கடந்து அது ராடர்கள், டோரா பீரங்கிப் படகுகள், கிபீர் யுத்த விமானங்கள் வரை அதன் விற்பனை பல்கிப்பெருகியது. சிறிலங்கா அவற்றில் கூடுதலானளவு பணம் செலுத்தி வாங்கிக் குவித்தது. இவை இஸ்ரேல் சிறிலங்கா தொடர்பாக நாமறிந்த விடயங்கள். ஆனால் இது தொடர்பில் அறியப்படாத பல பக்கங்கள் அநேகம். அவற்றில் சிலவற்றை குறித்த நூலாசிரியரின் எழுத்துக்களிலேயே நோக்குவோம்.


‘‘தங்களிடமிருந்து வாங்கும் ஆயுதங்களுக்கான பணத்தை சிறிலங்கா செலுத்தும் பொருட்டு, சிறிலங்கா உலக வங்கியையும் ஏனைய முதலீட்டாளர்களையும் ஏமாற்றி பல மில்லியன் டொலர்களைப் பெறுவதற்கு இஸ்ரேல் உதவிசெய்தது.

‘துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்’ என்ற பெயரில் ஒரு ஏமாற்றுத் திட்டத்தை வடிவமைத்துக் கொடுத்து அதன்படி செயற்படும்படி இஸ்ரேல் ஆலோசனை கூறியது. உண்மையில் உலக வங்கியிடமிருந்து பணத்தைப் பெற்று ஆயுதங்களுக்காகச் செலுத்துவதற்காகவே இத்திட்டம் ‘கண்டுபிடிக்கப் பட்டது’.

1977இல் சிறிலங்கா ஜனாதிபதி ஜூனியஸ் ஜெயவர்த்தனா மொசாட்டின் சிறு உதவியுடன் இதை முக்கியத்துவம் மிக்கதாக்கலாம் எனக் கண்டுகொண்டதுடன் ஆரம்பத்தில் முப்பது வருடங்கள் என இருந்த இது திடீரென விரைவுபடுத்தப்பட்டது.

மகாவலியை அதன் இயல்பான பாதையிலிருந்து நாட்டின் வரண்ட பகுதிகளுக்குத் திசைதிருப்பும் ஒரு பிரமாண்டமான பொறியியற்திட்டம் எனவும், இது நாட்டின் மின்வலுவை இரட்டிப்பாக்கும் எனவும் 75,000 ஏக்கர் பரப்புள்ள புதிய நீர்பாசனக் காணிகளை உருவாக்கும் என்றும் கூறப்பட்டது.

உலக வங்கியுடன் சுவீடன், கனடா, ஜப்பான், ஜெர்மனி, ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஐக்கிய அமெரிக்கா போன்றவை இந்த 2.5மில்லியன் டொலர் திட்டத்தில் முதலீடுசெய்தன. ஆரம்பத்தில் இருந்தே இது அளவிற்கு மீறிய எதிர்பார்ப்புக்களைக் கொண்ட (அசாத்தியமான) திட்டமாகவே இருந்தது. ஆனால் உலக வங்கியோ ஏனைய முதலீட்டாளர்களோ அதனை விளங்கிக் கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்தவரை அது இப்பொழுதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.



industcards "Power Plants Around the World"

இது சாத்தியப்படக்கூடிய ஒரு திட்டமென உலகவங்கியை (அதன் 250 மில்லியன் டொலர் உறுதிமொழியுடன்) திருப்திப்படுத்தும் பொருட்டு மொசாட் இரண்டு இஸ்ரேலிய கல்விமான்கள் (ஒருவர் ஜெருசலேம் பல்கலைக்கழக பொருளாதார வல்லுநர், மற்றவர் விவசாயப் பேராசிரியர்) மூலமாக இதன் முக்கியத்துவத்தையும் செயலையும் விளக்கி நிபுணத்துவ அறிக்கைகளை எழுதவைத்தது. ஒரு பெரிய இஸ்ரேலிய நிர்மாணிப்புத் தாபனமான ‘சொலெல்போனா’ற்கு வேலையின் ஒருபகுதிக்கான பெரிய ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டது.

காலத்துக்குக் காலம் உலக வங்கியின் பிரதிநிதிகள் வேலைத்தளத்துக்கே சென்று பரிசீலிக்கும் பொருட்டு சிறிலங்காவிற்குப் போவார்கள்.ஆனால், அங்குள்ள உள்ளூர்க்காரர்கள் இந்தப் பரிசோதகர்களை சுற்றுப்பகுதிகளால் அழைத்துச் செல்வதன்மூலம் அவர்களை முட்டாளாக்குவது எப்படி என்று கற்பிற்கப்பட்டிருந்தனர். இது பாதுகாப்புக் காரணங்களுக்கென சுலபமாக விளக்கப்படும். பின் மீண்டும் அச்சிறிய பிரதேசத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். அங்கு உண்மையிலே சில நிர்மாணிப்பு வேலைகள் இந்த நோக்கத்திற்காகச் செய்யப் பட்டுக் கொண்டிருக்கும்’’.

‘‘.....பின் ஒரு இரகசியப் பயணமாக ஜெயவர்த்தனாவின் மருமகள் பென்னி இஸ்ரேலிற்கு வந்தபோது அவருக்கு பாதுகாப்பு வழித்துணையாக அமர்த்தப்பட்டேன். ..நாங்கள் பொதுவான விடயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் அவளே மகாவலித் திட்டம் பற்றியும் அதற்கான நிதி எவ்வாறு இராணுவ உபகரணங்களுக்காகச் செலவிடப்படுகின்றது என்பது பற்றியும் என்னிடம் வலிந்து கூறிக்கொண்டிருந்தாள்’.

மேற்கண்ட சம்பவங்களை நோக்கும்போது சிறிலங்கா பேரினவாத ஆட்சியாளர்கள் எத்தகைய ‘‘தில்லுமுல்லுகளுக்கும்’’, ‘‘திருகுதாளங்களுக்கும்’’ தயங்காதவர்கள் என்பது புலனாகும். சர்வதேசத்தையே முட்டாளாக்கி ஏமாற்றும் இவர்கள் தன் சொந்த மக்களை ஏமாற்றுவது பற்றியோ, தமிழ்மக்களை ஏமாற்றுவது பற்றியோ என்றும் கவலைப்படப் போவதில்லை.

**சிறிலங்கா பேரினவாத ஆட்சியாளர்கள் எத்தகைய ‘‘தில்லுமுல்லுகளுக்கும்’’ ‘‘திருகுதாளங்களுக்கும்’’ தயங்காதவர்கள் என்பது புலனாகும். சர்வதேசத்தையே முட்டாளாக்கி ஏமாற்றும் இவர்கள் தன் சோந்த மக்களை ஏமாற்றுவது பற்றியோ, தமிழ்மக்களை ஏமாற்றுவது பற்றியோ என்றும் கவலைப்படப் போவதில்லை**

சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்கும் வெளிநாடுகளும், மற்றைய அமைப்புகளும் இனியும் சிறிலங்காவை நம்பி ஏமாறாது தமது நிதியுதவிகள் திட்டங்கள் தொடர்பாக விழிப்புடன் செயற்பட்டு அவ்வுதவிகள் அவற்றின் நோக்கத்திற்காகவே செலவிடப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ●

---

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ந்து செயற்பட இன்னமும் ஆயத்தமாகவுள்ளேன்.** (“I ask him to place his cards on the table upwarks. Let us work together openly. Let there be no secret agendas... I am prepare to work with him in spite of all of his mistakes”)

இக்கட்டுரையின் முடிவாக, அரை நூற்றாண்டுகால அகிம்சைவழிப் போராட்டம் பயன்தராத நிலையில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் ஆயுதப்போராட்ட வழியினை பின்பற்ற முடிவெடுத்தபோது வெளிப்படுத்திய கூற்றுக்களை பதிவு செய்கின்றோம். கொடிய அடக்கு முறைக்கு மாற்றாக ஆயுதப்போராட்ட வன்முறையை ஆதரித்த மண்டேலா இராணுவப் பிரிவினை உருவாக்கும் பொறுப்பினையும் ஏற்றார். 1961ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் நாள் பல குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தி தனது வருகையை அறிவித்தது. தேசத்தின் ஈட்டி எனவழைக்கப்பட்ட இவ் இராணுவப்பிரிவு அப்போது வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டவற்றையே எமது இன்றைய குரலாக ஒலிக்கின்றோம். “ஒவ்வொரு தேசத்திற்கும் வரலாற்றில் ஒரு தருணம் வரும். அப்போது இரண்டே வழிகள்தான் மிஞ்சியிருக்கும். பணிந்துபோதல் அல்லது துணிந்து போராடுதல். இப்போது இத்தருணம் தென்னாபிரிக்காவுக்கு வந்துள்ளது. **நாங்கள் ஒருபோதும் அடிபணியோம். எங்கள் விடுதலை, எங்கள் மக்கள், எங்கள் எதிர்காலம் இவற்றினைத் தற்காத்திட எம்மிடமுள்ள அனைத்தினையும் பயன்படுத்தி திருப்பித் தாக்குவோம். உள்நாட்டுப்போர் இரத்தக் களரியில்லாமலே முடிவுக்குவர இந்த மிகப்பிந்திய கடைசித் தருணத்திலும் நாம் விரும்புகின்றோம். இப்போதாவது அரசாங்கம் தனது போக்கினை மாற்றிக்கொள்ளும் என நம்புகின்றோம். இன்றேல் நிலைமைகள் மிக மோசமடைந்து உள்நாட்டுப்போர் ஏற்படுவதை தவிர்க்கமுடியாது போய்விடும்.”**

(நன்றி:- “இலங்கை தமிழ்த் தேசியவாதம் அதன் ஆரம்ப தோற்றம் பற்றியதோர் ஆய்வு - முருகன் குணசிங்கம்) ●

# ஆடிக்காற்றுக்கு அணையாத விளக்கு சித்திரைக் காற்றுக்கா ஜீவனிழக்கும்?







எல்லாம் முடிந்திற்று என்றா பாடுகிறாய்
உன் வாசலில்?
குருதி உறைந்த தெருக்களைக் கழுவி
கூத்தா ஆடுகிறாய்?
நெஞ்சில் கீறிய ரணங்களின் வலியை
மறந்தா பல்லக்கில் உன் பவனி
துயிலுமில்லங்களை காட்சிப்பொருளாய் கருதியா
வருகிறாய் உல்லாசப் பயணம்?
எத்தனை இலகுவாய் மறந்தாய் நேற்றைய துயரை.
ஒன்றும் நினைவில்லை என்பதாய்
யாருக்குப் பாவனை காட்டுகிறாய்.
நினைவுக் கிணற்றின் தூர்வாரியெறிந்து
புதிய நிகழ்கால நீர்கொண்டு நிறைக்கிறாய்.
என்ன நடந்ததென்று இத்தனை மகிழ்ச்சி?
ஒற்றைத் தெருவொன்றின் திறப்பு
எத்தனை மாற்றங்களை விதைத்தது உன்னில்.
அழகிய நதியாய் பரவியவனே
வெள்ளக் காடாய் விரிந்தவனே
பெருநெருப்பின் சுடராய்ப் பிரகாசித்தவனே
மெல்ல, மெல்ல உறையத் தொடங்கினாயா?
வேண்டாம் இந்த வினை விளையாட்டு.
உயிர்கொண்டு மெழுகிய திண்ணையிருந்து
கனவுத் திரைகளுக்கா வர்ணம் எழுதுகிறாய்?
ஆயிரம் யானைப் பலத்தோடு இருந்தோம் நேற்று
முட்டிப் பார்த்து மூக்குடைந்து போனது பகை.
சின்ன மாறுதலுக்காய் கொஞ்சம் சிரித்ததும்
அவர்கள் தோளிலேறிக் காதையே கடிக்கின்றனர்.
இப்போது என்ன நடந்தது நீ சந்தோஷப் பூச்சூட?
இளவேனிற் காலத்துக் குயிற்பாட்டு கேட்கிறதா
உன் மாமரக் கிளையில்?
சிறகு விரித்து வானில் நீந்தும் சிட்டுக்குருவியின்
வாழ்வு சித்தித்ததா உனக்கு?
காற்றின் வியாபகமாய் ஒரு கட்டற்ற வாழ்வு
உன் வீட்டில் பரவுகிறதா?
எம்மைநாமேவனையும் வாழ்வுப் பாடலை
பாடியபடி நடக்கமுடிகிறதா நம்தெருவில்?
இது எம் தாயின் நிலம்
இது எம் தாயின் கொடி
இது எம் தாயின் வேர்கள் என
அகல விதித்த கைகளுடன் ஆடமுடிகிறதா?
இது எம் கடல்
இது எம் வானம்
இது எம் தாயின் எல்லைகளென
இன்றேனும் காட்ட முடிகிறதா எம்மால்?
சின்னத் திரியில் எரியும் அகல்விளக்கு வெளிச்சத்தை
சூரியப்பிரகாசமாய் எண்ணிச் சுழல்கிறாய்.
நம்பிக்கை வயலில் உழவு நடக்கவில்லை
இப்போதும் பாளம் பிளந்தே கிடக்கிறது எம் நிலம்.
மேகம் கசியுமெனும் எதிர்பார்ப்பில்
உழவு மாடுகளுடன் வரம்பில் நடக்கிறோம்
கனவுகளின் பின்னே எம் கால்கள்.
மாயக் குயில்களும், மாரீசமான்களும்
மோகினி ஆட்டமுமேஉன் முன்னால்.
நிறுத்துப் பங்கிடும் கையில் நியாயத்தராசு எனில்
பேச்சுவார்த்தைக்குப் போவது குற்றமல்ல.
உள்ளே தீமூள இருப்பாயெனில்
சுழிக்குள்ளிறங்கியும் உன்னால் மீளமுடியும்.
ஏமாற்றப்பட்ட தழும்புகளைத் தடவியபடி
எங்கும் போகலாம் எவரும் இழுக்கமுடியாது.
நெஞ்சில் விதைகுழி வரிசையின் ஓவியம் வரைந்தபடி
நிமிர்ந்திருப்பவன் மீது தூசி படிவதில்லை.
எத்தனை காலமானாலும்
எத்தனை நீளமானாலும்
நெருப்பாற்றை நீந்திக் கடப்பேனென நினைப்பவன்
பழுத்துச் சருகாய் சொரியான்.
துளிர்த்து அழகாய் எழுவான்.
மனதில் உறுதியும்
காலமழையில் கரையேனெனும் நம்பிக்கையும்
உள்ளவனே வழிகாட்டியாய் உருவாகுகின்றான்.
தாயாய் தன்மக்களைத் தாங்கி
குஞ்சுகளை இறக்கைக்குள் பொத்தியபடி
முன்நடக்க எவனால் முடிகிறதோ
அவனே தலைவன்.
காலம் தரும் அவனின் பின்னே கண்மூடி நடக்கலாம்.
ஈழத்தமிழரும் கண்மூடி நடக்கவல்ல
தலைவனைத் தந்தது காலம்.
புயலடித்தாலும் சாயாத புளியமர நிழலில்
நிற்பதெண்ணி நிறைவுகொள்.
இருள் விலகும் வைகறை வேளை
ஒரு அழகிய வெளியில் நாங்களிப்போ.
தூரத்து மலைமுகடில் சூரியன் சுடர்கிறது.
திசைகளிருந்து வரும் காற்று எம்மீது படர்கிறது.
எவரும் குழிபறித்து விழுத்தமுடியாத பலத்தோடு
எம் பயணம் தொடர்கிறது.
புதிய வாழ்வெழுதிகளாய் விளங்கும்வரை
தொடங்கிய இடத்துக்குத் திரும்பவேண்டியதில்லை.
பல காதம் கடந்த பயணத்தில்
காலாறுவது இழிவல்ல.
நின்ற இடத்திருந்து தொடரும் மிடுக்கோடு
நிற்போமெனில் காலமேஎமக்கு வழிகாட்டும்.
மறந்து விடாதே பலத்தோடிருப்பதே பலம்.
விடுதலை கைவருமெனும் நம்பிக்கையுடன்
தீயெரித்த தாய் முகத்தின் வடுக்களுக்கு
மருந்திட்டு ஆற்றியபடி இருப்போம்.
ஆடிக்காற்றுக்கு அணையாத கைவிளக்கு
சித்திரை மாதக்காற்றுக்கா ஜீவனிழக்கும்?
அல்ப்ஸ் மலையும்
ஆபிரிக்க வனவெளியும்
நாகசாகியும்
நயாகரா நீர்வீழ்ச்சியும்
எம்மில் சுடரும் ஒளிவட்டத்தை உணர்ந்துள்ளன.
பேச்சுவார்த்தையால் புதியதிசைகள் விரியுமெனில்
காத்திருப்பதில் எந்தக் களங்கமுமில்லை.
பாலைவனப் புழுதியிடை நடந்து இச் சோலைவனம் அடைந்தோம்.
புயலிடை அல்லாடிய படகு
கரைதெரியும் தூரத்தில் நங்கூரமிட்டுள்ளது.
இனியும் கரையாதிருக்க வரம் நல்காய் தேவி.
காலமெல்லாம் கண்ணீர் குடித்த வாயில்
அம்மையே! அமிர்தம் சொரிவாய்.
ஆயினும் ஒன்றுரைப்போம் கேண்மின்.
பலமிழந்து போயினர் தமிழரெனும் பரிகசிப்பில்
நிலமுழுது திரும்பும் நினைப்பேறி
மபழைய குருடி கதவைத் திறவடிட என வந்தால்
உலகில் புதிய நாடொன்று உதயமாகும்.
ஐ.நா சபைக்கு முன்னே அகதியாய் அல்ல
அங்கீகாரத்துடன் நிமிரும் எம் கொடி.
போரெனினும்
பேச்செனினும்
எம் நெஞ்சமெலாம் வியாபித்திருப்பது விடுதலை.
சூரிய வெளிச்சம் அதிகம் சுடராத தேசமே!
உன் மீதான நம்பிக்கையில் காத்திருக்கிறோம்.
நிற்குமிடத்திலிருந்து பேசுவதா?
விட்ட இடத்திலிருந்து போரிடுவதா?
எதுவெனத் தீர்மானிப்பதற்கு
பதிலொன்று வேண்டும் விரைவாய்.

**வியாசன்**



